துருக்கியின் தந்தை

டாக்டர்.
மா. இராசமாணிக்கனார்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

திருக்கியின் தந்தை

THE SWADESAMITRAN LTD.
MADRAS-2.

டாக்டர். மா. இராசமாணிக்கனார்
M. A., L. T., M. O. L., PH. D.,

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே - சென்னை.1

வெளியீடு : 38

முதற்பதிப்பு : டிசம்பர் '59

உ ரி மை ஆசிரியருக்கே

விலை ரூபாய் : இரண்டு

அச்சிட்டோர் :

*பா ர த ம் அ ச் ச க ம்,
உஸ்மான்ரோடு, சென்னை-17*

முகவுரை

துருக்கியின் தந்தை என்னும் பெயர் கொண்ட இந்நூல், துருக்கி மக்களால் போற்றப் பட்டு வழிபடப்பட்ட முஸ்தபா கெமால் என் பவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகும். இந்நூலில் முஸ்தபாவின் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று முதலியன தெளி வாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, அந்நாட்டின் மக்கள் இம் மூவகைப் பற்றுக்களையும் கொண்டவராக இருத் தல் இன்றியமையாதது, என்பதை முஸ்தபா வின் விழுமிய வரலாற்று நிகழ்ச்சிகள் உணர்த்து கின்றன. தமிழகத்து மாணவ மாணவியர்க்கு முஸ்தபாவின் வீரவரலாறு வழிகாட்டும் ஒளி விளக்காய் அமையும் என்பது எனது நம்பிக்கை.

மா. இராசமாணிக்கம்

பொருளடக்கம்

1.	பிறப்பும் வளர்ப்பும்	...	5
2.	இளமைப் பருவம்	...	16
3.	இளைஞர் இயக்கம்	...	23
4.	போரும் வாழ்வும்	...	37
5.	முஸ்தபாவின் புரட்சிச்செயல்கள்	...	53
6.	முஸ்தபாவின் வெற்றி	...	70
7.	திருமணம்	...	85
8.	துருக்கியின் வெற்றி	...	89
9.	துருக்கியில் மக்களாட்சி	...	100
10.	சமுதாயப் புரட்சி	...	110
11.	துருக்கியர் தந்தை	...	124
12.	பொன் மொழிகள்	...	131

துருக்கியின் தந்தை கமால் பாஷா

THE SWADESAMITRAN LTD. MADRAS-2.

துருக்கியின் தந்தை

1. பிறப்பும் வளர்ப்பும்

குழந்தை வளர்ப்பு

குழந்தைகளை வளர்த்தல் என்பது அரிய செயல். இளமையில் குழந்தைகளின் மனத்தில் எந்தவிதமான தீய எண்ணங்களும் நிலை கொள்ளாதவாறு காத்தல் வேண்டும். சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குழந்தைகள் அறியாத வண்ணம் வளர்த்தால், அவை வளர்ந்த பின்பு-தக்க வயதடைந்த பின்பு-ஏற்றத் தாழ்வு மனப்பான்மையைப் போக்க முனையும். சிறந்த பல தலைவர்களுடைய வரலாறுகளையும், அறிஞர்களுடைய வரலாறுகளையும், வீரர்களுடைய வரலாறுகளையும் நாம் கற்போமாயின், இளமையில் குழந்தைப் பருவத்தில் அவர்கள் பெற்ற அறிவுரைகளே அவர்கள் உயர்ந்த வாழ்வுக்குக் காரணமாயமைந்தது என்பதை அறியலாம். இந்நூலின் தலைவரான முஸ்தபா கமாலும் பொறுப் புணர்ந்த பெற்றவர்களால் நல்ல முறையில் வளர்க்கப் பட்டார். அந்த வளர்ப்பு முறையே அவரை வீர வாழ்வு வாழச் செய்தது.

அலிரிஜா

சலோனிகா என்பது ஒரு துறைமுகப் பட்டினம் இது கிரீஸ் நாட்டின் தெற்குப் புறத்தில் உள்ளது; துருக்கியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அச்சலோனி

காவில் சுங்கத் துறையில் சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் அலிரிஜா என்ற முஸ்லிம் ஒருவர் பணியாற்றினர்.

அலிரிஜா நேர்மையான உள்ளம் கொண்டவர்; தமக்கிடப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்துவிட்டால் எவருடைய தயவையும் நாடவேண்டிய நிலைநேராது என எண்ணினர். தம்மோடு பணிபுரிந்த பிறர் இரண்டு கைகளையும் நீட்டி மக்களிடமிருந்து கையூட்டுப் பெற்ற போதும், வறுமையில் வாழ்ந்த அலிரிஜா அவ்வாறு செய்ய நாணினர். மானமிழந்து உயிர் வாழ அவர் எண்ணவில்லை: இனி வாழ முடியாது என்ற நிலை ஏற்படுமானல், மகிழ்ச்சியாக இறந்து விடுவதே சிறந்தது என்று நினைத்தார்.

அலிரிஜா நாட்டுப் பற்று மிக்கவர்; நாள் தவருமல் செய்தித் தாள்களைப் படிப்பார்; பிற நாடுகள் விரைந்து பெற்றுள்ள பல முன்னேற்ற நிலைகளைத் துருக்கியும் ஏன் பெறக் கூடாது என்று எண்ணுவார்; பிஸ் மார்க் என்னும் மாவீரன் தோன்றி ஜெர்மனியில் வல்லமை மிக்க பேரரசு ஒன்றை ஏற்படுத்தியதை அடிக்கடி நினைப்பார்; பிஸ்மார்க்கைப் போன்ற பெருவீரன் ஒருவன் தோன்றித் துருக்கி நாட்டை வல்லமையுடையதாகச் செய்யமாட்டாஞ என்று எண்ணி ஏங்குவார்.

சுபேதாஹன்

அலிரிஜாவின் அன்புக்குரிய மனைவியாய் விளங்கியவர் சுபேதாஹன் என்பவர். நல்ல உடற்கட்டையும், நீலோற்பலக் கண்களையும், சுருண்டு அடர்ந்த கூந்தலையும், சிவந்த மேனியையும் கொண்ட அவர் எழிலரசியாகத் திகழ்ந்தார். அவர் சமயப்பற்று மிகுந்தவர். மனிதனுடைய மனத்தை ஒரு வழிப்படுத்தி, தீய நெறிகளிலி

ருந்து அவனை விலக்கி ஆண்டவனிடம் ஈடுபடுத்தவல்ல ஆற்றல் கொண்டது சமயம் என்பது அவர் கருத்து. பள்ளிப் படிப்பை மிகுதியாகப் பெறவில்லையாயினும், அம்மையார் உயர்ந்த உள்ளம் கொண்டவராய் விளங்கினர். அரசன் நாட்டு ஆட்சியை மேற்கொண்டு பொறுப்புடனும் திறமையுடனும் நடந்துகொள்வது போல, அவர் தம் இல்லற ஆட்சியைப் பொறுப்புடனும் திறமையுடனும் நடத்தினர். அவருக்கிருந்த மனத்திட்பமும் தன்னம்பிக்கையுமே முஸ்தபாவை உயர்ந்தவராக்கின என்னலாம்.

மக்கட் பேறு

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மட்கட்பே றல்ல பிற"

என்றார் வள்ளுவர். மக்கட் பேற்றைச் சிறப்பித்து உலக இலக்கியங்கள் பேசுகின்றன. மக்கட் செல்வம் இல்லாதவர்கள் வாழ்க்கையில் எவ்வளவுதான் செல்வம் பெற்றுச் சிறந்திருந்தாலும் அவ்வாழ்வு பயனற்றது—சுவையற்றது என்று பெரியோர் கூறுவர். சுபேதாஹன்னுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. முதற் குழந்தை பிறந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே இறந்துவிட்டது. இரண்டாம் குழந்தைதான் உலக நாடுகள் மகிழ்ந்து போற்றிய பேராற்றல் மிகுந்த சமுதாயச் சிற்பியாக விளங்கிய **முஸ்தபா கமால்.** மூன்றாவது பெண் குழந்தை. அக்குழந்தையின் பெயர் **மக்பௌா.**

முஸ்தபா கமால்

முஸ்தபா கி. பி. 1880-ஆம் ஆண்டில் பிறந்தார். கண்ணை இமைகள் காப்பது போலப் பெற்றோர் அவரைக் கருத்தோடு கவனித்துவந்தனர். அவருக்கு வயது ஏழாயிற்று. நல்ல முறையில் அவருக்குக் கல்விப் பயிற்சி

அளிக்க வேண்டும் என்று பெற்றோர் எண்ணினர். அவரை ஜெர்மனிக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்று அலிரிஜா விரும்பினர். ஆனால், சமயத் துறையில் ஆழ்ந்த பற்றும் எளிய மனமும் கொண்ட சுபேதா, தம் மகன் சமயத் தலைவராவதற்குரிய சமயக்கல்வியையே கற்க வேண்டும் என்று எண்ணினர். பெற்றவர் இருவரும் தம் மகன் உயர்ந்து வாழ வேண்டும் என்று எண்ணிய விருப்பத்தில் ஒன்றுபட்டிருந்த போதிலும், அவரை உயர்ந்தவராக்க எண்ணும் வழி முறைகளில் மாருக இருந்தனர். அலிரிஜா சிந்தித்தார்; தம் மனைவியின் விருப்பத்தை முதலில் நிறைவு பெறச் செய்தலே நல்லது என்னும் முடிவுக்கு வந்தார்.

சமயப் பள்ளியில்

அலிரிஜா தம் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக முஸ்தபாவை ஒரு சமயப் பள்ளியில் சேர்த்தார். முஸ்தபா எழுத்துப் பயிற்சியை அங்குத்தான் பெற்ருர். ஆசிரியர் மறை நூலான திருக்குர்-ஆனை அவருக்குக் கற்பித்தார். ஏறத் தாழ ஆறு திங்கள் வரை முஸ்தபா அச்சமயப் பள்ளியின் மாணவராக விளங்கினர்.

ஐரோப்பியப் பள்ளியில்

பின்பு முஸ்தபா, ஐரோப்பிய முறையில் தனிப்பட நடத்தப்பெற்றுவந்த ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஓர் ஆசிரியர் அப்பள்ளியை நடத்திவந்தார். தூய்மையான உடைகளை அணிய வேண்டும், நிமிர்ந்து நடக்க வேண்டும், எவர்க்கும் அடிபணியாதவாறு நடந்து வெற்றி காண வேண்டும் என்னும் எண்ணங்கள் முஸ்தபாவுக்கு இளமை முதலே இருந்து வந்தன. ஐரோப்பியப் பள்ளி அவருடைய இந்த நற்குணங்களை வளர்த்தது. ஆசிரியர்

முஸ்தபாவிடம் நிறைந்த அன்பு கொண்டிருந்தார்; அவரை வகுப்பு மாணவர் தலைவராய் அமர்த்தினர். முஸ்தபா மாணவர்களிடையே அன்பாகப் பழகினர். எல்லா மாணவர்களும் அவரைத் தங்கள் தலைவர் எனக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைந்தனர்.

அலிரிஜாவின் கவலை

ஐரோப்பிய முறையில் மகனுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்னும் விருப்பம் மட்டும் இருத்தல் போதுமா? போதிய அளவுக்குப் பொருளாதாரத் துணையும் தேவை அல்லவா? பொருளாதார வளம் பெருத அலிரிஜா தொடர்ந்து எப்படி மகனைப் படிக்க வைப்பது என்று எண்ணிக் கலங்கினர். பெற்றவர்கள் பொருளில்லாமல் துயருறுகின்றனர் என்பதை முஸ்தபா அறியாதவாறு அவ்விருவரும் நடந்துகொண்டனர். தந்தையார் தம்முடைய பிடிவாதக் கொள்கைகளை ஒரளவு விட்டுக் கொடுத்தால், நிறையப் பொருள் வந்து குவிந்திருக்கும். 'எனக்குக் கையூட்டு வேண்டும்' என்று கேட்காமலேயே, இரண்டு கைகளையும் நீட்டினலே போதும்; பணம் குவிந்துவிடும். ஆனல், அந்த முறையில் பொருளீட்டி மகனைப் படிக்க வைப்பதைவிட, முஸ்தபாவை ஏதாவது தொழில் செய்யுமாறு சொல்லலாம் என்றுதான் அவர் எண்ணினர்.

அப்பெரியார் ஒருவாறு துணிந்து, தம் வேலையை விட்டு விலகி மரக்கடை ஒன்றை வைத்தார். உலகம் போகும் போக்கை உணர்ந்து அதற்கு ஏற்ப வாழ்பவர்கள் தாம் வளமாக வாழ முடியும் அல்லவா? உலகம் தவருன நெறியில் சென்றுகொண்டிருக்கிறதே என்று எண்ணிக் கவலையுற்று, நாம் அவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது என்று உறுதி கொண்டு நடந்தால், துன்பங்

கள் வந்துகொண்டுதாமே இருக்கும்? அலிரிஜாவால் மரக்கடை வாணிகத்திலும் பணம் குவிக்க முடியவில்லை.

தந்தையின் மறைவு

முஸ்தபா இரவில் நீண்டநேரம் வரையில் தம் தந்தையின் வருகைக்காகக் காத்திருப்பார். அலிரிஜா வந்ததும் அவர் எழுந்து நின்று வணங்கி அவரை வரவேற்பார். பின்னர் இருவரும் காலம் போவதே தெரியாமல் பல செய்திகளைப் பற்றிப் பேசுவர். தம் மகன் துருக்கியின் நல் வாழ்வுக்குத் துணையாக வேண்டும் என்று அலிரிஜா விரும்பினார்.

ஒரு நாள் அலிரிஜா படுத்த படுக்கையாகிவிட்டார். பல துறைகளில் வல்ல மருத்துவர்கள் கவலையோடு கவனித்தனர். ஆனால், பயனில்லை. அலிரிஜா இறந்துவிட்டார். அப்போது முஸ்தபாவுக்கு வயது ஒன்பது. அவர் தந்தையாரின் மறைவு குறித்து அளவற்ற துயர் கொண்டார்.

தமையனிடம் செல்லல்

முஸ்தபாவையும் அவருடைய தங்கையையும் எந்த வித மூலதனமும் இல்லாமல் எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலை தாயாரைப் பிடித்துக்கொண்டது. அவர் தமையனார் ஓர் ஏழை உழவர். அம்மையார் அத்தமையனாரிடம் தம் மக்களுடன் அடைக்கலம் புகுந்தார்.

உழவுத் தொழிலே மிகச் சிறந்தது என்றும், உழவர்கள் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்கள் என்றும், ஆனால் அவர்கள் வாழ்வில்தான் கவலையும் துயரமும் ஏக்கமும் மிகுதியாக இருக்கும் என்றும் அலிரிஜா கூறியது முஸ்தபாவுக்கு அப்போது நினைவுக்கு வந்தது. அவர் அவர்களை அன்புடன் வரவேற்றார். ஏழையின் நிலையை

மற்ருெரு ஏழையால்தான் உள்ளவாறு உணரமுடியும் என்று தம் தாயார் கூறியதை முஸ்தபா நினைத்துத் தாயின் அநுபவ வாக்கை வியந்தார்.

பொழுதுபோக்கு

முஸ்தபா பிறர், 'இதைச் செய்', 'அதைச் செய்' என்று ஆணையிட்டுக் கூறுமளவுக்குக் காத்திருக்கவில்லை. உழைத்து மகிழ்ந்து, உழைப்பே உண்மையான மகிழ்ச்சிக்கு அடிப்படை என்று எண்ணி, வாழ்ந்து காட்டிய தந்தையின் மகனல்லவா அவர் ? எனவே, அவராகவே அங்கிருந்த மாட்டுத் தொழுவத்தைத் தூய்மை செய்தார்; நிலங்களை உழுதார்; களைகளைப் பிடுங்கினுர்; கதிர் அறுத்தார்; ஆடுமாடுகளை மேய்த்தார்.

ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு நீண்ட தொலைவு சென்று திரும்புவதில் முஸ்தபா பெரும் மகிழ்ச்சி கொண்டார். நீண்ட தொலைவு சென்றதும், கால்நடைகளை மேய விட்டுவிட்டு, பசும்புல் தரையில் படுத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கிவிடுவார். விண்ணில் எண்ணற்ற விண்மீன்கள் ஒளிவிடுவதுபோல, அவர் மனத்திலும் எண்ணற்ற எண்ணங்கள் தோன்றி ஒளிவிட்டுக்கொண்டிருக்கும். ஆனுல், அந்த எண்ணங்கட்கு உயிர் தந்து உருவளிக்கும் வயதில் அவர் இல்லை.

சலோனிகாவில்

தம் மகன் மாட்டுத் தொழுவத்தைத் தூய்மை செய்வதையும், தம் தமையனுக்கு உற்ற துணையாயிருப்பதையும் கண்டு சுபேதாவால் மன நிறைவு கொள்ள முடியவில்லை; சலோனிகாவில் இருந்த தமது ஒன்றுவிட்ட சகோதரியைக்கொண்டு முஸ்தபாவின் வருங்காலப் படிப்புக்குரிய வழி செய்யவேண்டும் என்று விரும்பி

ஞர். அச்சகோதரியும் சுபேதாவின் வேண்டுகோளை ஏற்று முஸ்தபாவைப் படிக்கவைக்க முன் வந்தார். 'சலோனிகா வுக்கு மீண்டும் சென்று தம் சிற்றன்னையாரிடத்துத் தங்கிக் கல்வி கற்கவேண்டும்' என்று சுபேதா கூறக்கேட்டதும், அவர் மகிழ்ந்தார்; தம்மைக் கல்வியிற் சிறந்தவராக்கத் தம் தாயார் கொண்டிருந்த ஆர்வம் அவருக்கு ஊக்கம் அளித்தது. அவர் தாயார் உரையை ஏற்று, சலோனிகா வுக்குப் புறப்பட்டார்.

நல்ல மாணவர்

பள்ளியிற் சேர்ந்த முஸ்தபா, குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்வது, தம்முடைய கடமைகளைத் தவருமல் செய்வது, எவரையும் பகைத்துக்கொள்ளாமல் அன்பாக நடத்தல் போன்ற நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கிஞர். யாரேனும் தம்மைத் தாழ்ந்த நிலையில் வைத்து எண்ணுவதாக அறிந்தால், அவர் பெரிதும் வருந்துவார். அவர் தம்முடைய அறிவிலும் ஆற்றலிலும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். மாணவர்களில் பலர் அவரை விரும்பினர். ஆனல், அவரோ எவரிடமும் பழக விரும்பவில்லை. அதனல் 'முஸ்தபா செருக்குடையவன்' என்று எல்லோரும் பேசத் தொடங்கினர். ஆயின், அவர் எவரையும் பொருட்படுத்தவில்லை; கருத்தாய்ப் படித்து வந்தார்.

பள்ளியில் குழப்பம்

முஸ்தபாவுக்கு அரபி மொழியிடத்து வெறுப்பு வளர்ந்திருந்தது. அதனல் அந்த மொழியைக் கற்பிக்கும் ஆசிரியரையும் அவர் வெறுத்தார். ஒரு நாள் அவருக்கும் மற்ருெரு மாணவனுக்கும் கைகலப்பு ஏற்பட்டுவிட்டது. அவன் அவரைத் தாழ்மையாகப் பேசியதே அதற்குக் காரணம். தன்னம்பிக்கையும் தன்மானமும் மிகுதியாகக்

கொண்ட அவர், அந்த மாணவனை நையப் புடைத்து விட்டார். அவன் அரபி ஆசிரியரிடம் சொன்னான். அரபி ஆசிரியருக்கு முஸ்தபாவைப் பிடிக்காதல்லவா? அவர் வகுப்பில் அவரை விசாரித்தார்

"என்னைக் குறைவாக—என் மனம் புண்படும் வகையில் யார் பேசினாலும் நான் அவர்களை ஒறுக்கத்தான் செய்வேன். பிறருடைய செய்திகளில் — அவை நமக்கு இடையூறு தராத அளவில் தலையிட நமக்கு உரிமையில்லை என்பதை அவர்கள் உணருமாறு செய்வேன் இது என் கடமை", என்று முஸ்தபா கூறிய பதில் ஆசிரியரின் சினத்தீயை வளர்த்தது. அவர் முஸ்தபாவைப் பிரம்பு கொண்டு அடித்தார். தன்னை வல்லவனாக எண்ணிக்கொண்டிருந்த முஸ்தபாவுக்கு ஆசிரியர் நல்ல பாடம் கற்பித்துவிட்டார் என்று மாணவர் மகிழ்ந்தனர்.

முஸ்தபாவின் வருத்தம்

முஸ்தபா அந்தப் பள்ளியில் தொடர்ந்து படிக்க விரும்பவில்லை. தம்மிடம் படிக்கும் எல்லா மாணவர்களையும் அருட்கண் கொண்டு நோக்கவேண்டிய ஆசிரியர்கள், மாணவர்களைப் பிரித்து வைத்து வேறுபடுத்திப் பார்ப்பது சரியல்லவே என்று அவரது மனம் எண்ணியது. மாணவர்களிடையே பிளவை ஏற்படுத்தி அந்தப் பிளவையே துணையாகக்கொண்டு வளர ஆசிரியர் எண்ணுவராயின், வருங்காலச் சமுதாயம் எனப் போற்றப்படும் மாணவர்கள் வாழ்வில் ஒற்றுமையுணர்வும் நல்ல மனமும் எப்படி வளர முடியும் என்றெண்ணி அவர் வருந்தினார். மாணவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களிடம் அமைந்துள்ள சிறப்பியல்புகளை வளரச்செய்து மகிழ்பவரையே முஸ்தபா உண்மையான ஆசிரியராய்க் கருதினார்.

14

தாயார் கண்டிப்பு

முஸ்தபா பள்ளியிலிருந்து விலகியதையும் பள்ளியில் நடந்த விவரங்களையும் அறிந்த சுபேதா பெரிதும் வருந்தினார். சமயத்துறையில் அழுத்தமான நம்பிக்கை கொண்ட அவர், ஆசிரியரை எதிர்த்துத் தம் மகன் உரையாடியதைச் சிறந்த செய்கையாகக் கொள்ளவில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன் அல்லவா? இறைவன் தன் மக்கள் நன்மைக்காகத்தானே ஒன்றைச் செய்வார்! அவருடைய செயல்களுக்கு நாம் கட்டுப்பட்டுத்தானே நடக்க வேண்டும்," என்று அந்தத் தாய் உள்ளம் எண்ணியது. அவர் மகனைக் கண்டு, வேண்டி, அவரை மீண்டும் பள்ளிக்குச் செல்லுமாறு செய்யவேண்டும் என்று விரும்பினார்.

தாயார் எவ்வளவு சொல்லியும் முஸ்தபா கேட்கவில்லை. "என்னைக் குறை சொன்னவனைத்தான் நான் தண்டித்தேன். பிறர் செய்திகளில் தலையிடுவது இழிவான செயல் என்பதை அவன் உணருமாறு செய்தேன். அதை உணராது என்னையே தண்டித்தார் ஆசிரியர். இனி, நான் அங்குப் போகமாட்டேன். என்னை வற்புறுத்த வேண்டா," என்று கூறி வேண்டினார்.

தாயார் கண்கள் கலங்கின. 'எல்லோரும் போற்றத்தக்க உயர்ந்தவனுவதே என் நோக்கம்,' என்று முஸ்தபா அடிக்கடி கூறியது அவர் நினைவுக்கு வந்தது; அதையே அவரிடம் கூறி, " நீ இப்படியெல்லாம் ஆத்திரப்பட்டால் உயர்ந்தவனுகிவிட முடியுமா? பொறுமை வேண்டும். உன்னை உயர்ந்தவனுகக் காணத் துடிக்கும் என்னை எண்ணிப்பார். என் நினைவைச் செயல்படுத்து," என்று வேண்டினார்.

"நீங்கள் நினைப்பதுபோல் உயர்ந்தவனாக நான் விளங்கப்போவதை நீங்கள் காணத்தான் போகின்றீர்கள்" என்று கூறிவிட்டு, முஸ்தபா தாயார் பதிலைக்கூட எதிர்பாராமல், புறப்பட்டுவிட்டார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு.

2. இளமைப்பருவம்

பிறவிப் போர்வீரன்

உயர்ந்தவராக விளங்கிக் காட்டுவதாகத் தாயாரிடம் சூளுரைத்துச் சென்ற முஸ்தபா, மேஜர் காத்திரி என்னும் பெயருடைய இராணுவ அலுவலரது இல்லத்திற்குச் சென்றார். அவர் முஸ்தபாவின் தந்தையார்க்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவரிடம்சென்று தம்மை இராணுவப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினர்.

மேஜர் காத்திரி முஸ்தபாவின் வேண்டுகோளைக் கேட்டு வியந்தார்; பார்வையில் ஒளியையும் பேச்சிலே மிடுக்கையும் கொண்டுள்ள முஸ்தபா பிறவிப் போர்வீரனாகவே இருக்கவேண்டும் என்று எண்ணினர்; பல கேள்விகள் கேட்டார். முஸ்தபா அவற்றுக்கெல்லாம் சிறிதும் தயக்கமின்றி விடை கூறினர். இராணுவப் பள்ளியில் சேருவதற்குரிய எல்லாத் தகுதிகளும் அவரிடம் இருப்பதாகவும் அவரைச் சேர்த்துக்கொள்வதில் துன்பம் ஏதும் இராது என்றும் மேஜர் கூறினர்.

மாணவர் ஆசிரியர்

முஸ்தபா இராணுவப் பள்ளியில் சேர்ந்த பின்பு, அதனைத் தம் தாயாருக்கு அறிவிக்க விழைந்தார். தாயார் உண்மை உணர்ந்து கண்ணீர்விட்டார். அவர், உலகம் புகழும் மதத் தலைவராக முஸ்தபா விளங்கவேண்டும் என்று விரும்பினர் அல்லவா? ஆயினும் மகனுடைய எண்ணத்தை மாற்ற முடியாது என்பதால் அவர்க்கு ஆசி கூறி அனுப்பினர்.

முஸ்தபா இராணுவப் பள்ளியில் மாணவர் அன்பை யும் ஆசிரியர் அன்பையும் ஒருங்கே பெற்ருர். இரண் டாண்டுகள் கடந்தன. மூன்ருமாண்டு கீழ்வகுப்புகளுக்குக் கற்பிக்கும் வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. இங்ஙனம் ஒரே பள்ளியில்—ஒரே காலத்தில் மாணவராகவும் ஆசிரி யராகவும் இருக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது தம் முடைய திறமையிலே அளவற்ற நம்பிக்கை கொள்ள அவருக்கு இது துணையாய் அமைந்தது.

முஸ்தபா கமால்

முஸ்தபா என்பதுதான் அவருடைய பெயர். ஆயின் அது முஸ்தபாகமால் என்று எப்படி ஆயிற்று? முஸ்தபா வின் நுண்ணறிவுத்திறனில் மகிழ்ந்து அவரிடம்தனியன்பு செலுத்திய கணித ஆசிரியரின் பெயரும் முஸ்தபாதான். எனவே, அவர் ஒருநாள் வகுப்பில், "முஸ்தபா, உன் பெயரும் என் பெயரும் ஒன்ருகவே இருப்பதால் தொல்லை கள் நேருகின்றன. நம்மிருவர் பெயர்களுள்ளும் ஏதாவது சிறு வேறுபாடாவது இருக்கவேண்டும். எனவே, இன்று முதல் உன்னை 'முஸ்தபா கமால்' என்று அழைப்பேன்," என்ருர். அன்று முதல் முஸ்தபா, 'முஸ்தபா கமால்' ஆனுர். அப்பொழுது அவருக்கு வயது பதினுன்கு.

'பென் ஒலியாகின்'

முஸ்தபாவின் இராணுவப் பயிற்சியின் முதற்பகுதி முடிவடைந்தது. அவர் இரண்டாம் பகுதியினை முடிக்க மொனஸ்டிர் என்னும் நகரில் உள்ள இராணுவப் பயிற்சிச் சாலைக்கு அனுப்பப்பட்டார். அப்பொழுது துருக் கிக்கும் கிரீசுக்கும் போர் நடைபெற்றது. போரில் கிரீசு தோற்றது; துருக்கி வெற்றியடைந்தது. போரின் நிகழ்ச் சிகளைப் போர்த் தொடர்பான படங்களை வைத்துக் கொண்டு, மொனஸ்டிர் இராணுவப் பயிற்சிப் பள்ளியில்

படித்துக்கொண்டிருந்த வருங்காலத் தளபதிகள் கவனத்தோடு ஆராய்ந்தனர்.

உடன்படித்த நண்பர் பலர் அவரை அடுத்துப் பழகவேண்டும் என்று விரும்பினர். ஆனால், அவர் யாரோடும் நெருங்குவதில்லை. 'இவர் எனக்கு நெருங்கிய நண்பர்' என்று முஸ்தபா எவரையும் சொன்னதில்லை. அவர் மாணவர்களோடு நெருங்கவில்லை ஆயினும், மாணவர்கள் அவரைத்தான் பின்பற்றினர். படிக்கவும் படித்ததைச் சிந்திக்கவுமே முஸ்தபாவுக்குக் காலம் இராது. மாணவர்கள் அவரை நெருங்கி, 'எங்களுடைய விளையாட்டுக்களில் நீ கலந்து கொள்ளக்கூடாதா?' என்று கேட்டால், அவர் 'பென் ஒலியாகின், என்பாராம். பென் ஒலியாகின் என்பதற்கு 'நான் ஒரு சிறப்புடைய மனிதனுவேன்' என்பது பொருள். அவருக்கிருந்த தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் கண்டு மாணவர் வியந்தனர்.

கான்ஸ்டான்டிநோபிளில்

கான்ஸ்டான்டிநோபிள் மேனுடும் கீழ்நாடும் சந்திக்கும் இடமாகும். இசுலாமியர்களின் தலைவர் வாழும் புண்ணியத்தலமும் அதுவேயாகும். முஸ்தபா மொனுஸ்டிரில் பயிற்சி பெற்ற பின்பு, இராணுவத் தளபதியாக விரும்பினுர். இராணுவத் தளபதியாக வேண்டுமாயின், கான்ஸ்டான்டிநோபிளில் உள்ள பயிற்சிப் பள்ளியில் அந்த வேலைக்காக இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெற வேண்டும்.

முஸ்தபா ஆண்டுக்கொருமுறை தம் தாயாரைக் காணத் தவறுவதில்லை. அவருடைய செலவுக்குச் சரிவரப் பணம் அனுப்ப முடியவில்லையே என்று வருந்திய சுபேதா, செல்வ வளமிக்க சீமான் ஒருவனை மணந்துகொண்டார். தாயாரின் இந்தச் செயல் முஸ்தபாவுக்குச் சரியெனப்

படவில்லை. அவர் விடுமுறைக் காலங்களில் பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொண்டார்.

முஸ்தபா கான்ஸ்டான்டிநோபிள் இராணுவப் பயிற்சிப் பள்ளியில் இரண்டாண்டுகள் கழித்தார். அவருடைய படிப்பு முடிந்தது.

விழிப்புணர்ச்சி

இருட்டில் உள்ளவன் ஒளியைக் காண விரும்புவதும் பசித்தவன் புசிக்க விரும்புவதும் இயல்பான உணர்ச்சியாகும். அதுபோலவே பிற நாட்டார் ஆட்சியில் அடங்கி வாழும் மக்களும் அச்சமற்ற உரிமை வாழ்வை எதிர்பார்ப்பதும் இயல்பான உணர்ச்சியேயாகும். துருக்கியர் சுல்தான் ஆட்சியிலிருந்து விடுபட எண்ணினர். **'துருக்கியனே எழுந்திரு'** என்று உணர்ச்சியூட்டும் வகையில் கவிஞர் கவிதை பாடினர்; நாவலர் சொற்பொழிவாற்றினர்; அறிஞர் அறிவுரை கூறினர்; கலைஞர் கலையின்மூலம் தெளிவுபடுத்தினர். இவ்வாறு துருக்கி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தித் துருக்கியை உரிமையுடைய நாடாக்கச் சிலர் விரும்பினர்.

அவர்கள் விருப்பம் வீண்போகவில்லை. கவிஞர் பாடிய பாடல்களை மக்கள் பாடினர். அரசாங்கம் அப்பாடல்களுக்குத் தடை விதித்தது. பாடியவர்களுக்குத் தண்டனை தரப்பட்டது. அரசாங்கம் அவ்வாறு செய்ததால் மக்கள் சக்தியை அடக்கிவிட முடியவில்லை. அப்பாடல்கள் எண்ணற்ற மக்களால் பாடப்பட்டன. அப்பாடல்களைப் பாடிய கவிஞர் ஒருவர் நாடு கடத்தப்பட்டார். தேசிய நூல்களை மக்கள் படிக்கக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. அச்செயல் அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுவதாக மக்கள் கருதினர்.

'வாதன்' சங்கம்

'வாதன்' என்பதற்குத் 'தந்தையர் நாடு' என்பது பொருள். அரசியலாரை நேரடியாக எதிர்க்காமல் தக்க காலம் வரும் வரையில் காத்திருந்து, எதிர்த்து வெற்றி காண வேண்டுமென்று முஸ்தபா கருதினர் பலர் அவரது கருத்தை ஏற்றனர். அவர்களைக் கொண்டு ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அச்சங்கத்திற்கு **'வாதன் சங்கம்'** என்பது பெயர். முஸ்தபா அச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினருள் ஒருவராய் விளங்கினர். **'வாதன்'** என்னும் பெயரில் செய்தித்தாள் ஒன்று நடைபெற்றது. இது கையினுலேயே எழுதி மறைமுகமாக எல்லோருக்கும் படிக்கத் தரப்பட்டது. முஸ்தபா இதன் ஆசிரியராகச் சிறிது காலம் தொண்டாற்றினர்.

எழுத்துமூலம் மக்களிடையே செல்வாக்குப் பெறுவதைக் காட்டிலும், பேச்சுமூலம் எளிதில் செல்வாக்குப் பெறலாம் என்று வாதன் சங்கத்தினர் நம்பினர்; மக்கள் மன்றங்களில் பேசத் தங்களைப் பழக்குவித்துக் கொள்வதில் ஈடுபட்டனர்; சங்கத்தின் ஆக்க வேலைகளைக் குறித்து வாதாடினர். இது அவர்களுடைய எண்ணத்திற்குத் துணையாய் அமைந்தது.

முஸ்தபா **காப்டன்** ஆனர். அவருடைய தேர்வு முடிவுகள் தெரிவிக்கப்பட்டன. அனைவரும் மகிழ்ந்தனர்; வாதன் சங்கத்தை நிலையான அமைப்பாக்கிவிட வேண்டும் என்று விரும்பினர்; எனவே, ஒரு கட்டடத்தை வாடகைக்குப் பேசினர்; அங்கு வாதன் சங்கத்தையும் 'வாதன்' செய்தித்தாள் அலுவலகத்தையும் அமைத்தனர். அங்குத்தான் அவர்கள் தங்களுடைய கூட்டங்களை எவர்க்கும் தெரியாமல் நடத்திவந்தனர்.

சூழ்ச்சியின் வெற்றி

வாதன் சங்கத்தாரின் மறைவான செயல் முறைகள் அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டன. அவர்கள் சூழ்ச்சியாக அச்சங்கத்தினரைக் கைது செய்ய நினைந்தனர்.

வாதன் சங்கத்திற்கு 'பெத்தி பே' என்பவன் ஒரு நாள் வந்தான். அவன் இராணுவத்திலிருந்து விலக்கப்பட்டவன் என்பதை வாதன் சங்க உறுப்பினர் அனைவரும் அறிவர். அதற்கு மேலாக அவனைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவன் தன்னை வாதன் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினான்; அவ்வாறு சேர்த்துக்கொண்டால் மனநிறைவோடு சங்கத்தின் செயல் முறைகளில் ஈடுபடுவதாக உறுயளித்தான். அவனை எல்லோரும் நம்பினர்; எனவே, தங்கள் சங்கத்தில் உறுப்பினனாகச் சேர்த்துக்கொண்டனர்.

பெத்தி பே தன் நண்பன் ஒருவனை வாதன்சங்கத்தில் சேர்க்க விரும்புவதாகக் கூறினான். அவனை வாதன் சங்கக் கட்டடத்திற்கு அழைத்து வருவது விபரீதமானாலும் ஆகக்கூடும் என்று சொல்லித் தேனீர்க் கடையொன்றில் சங்க உறுப்பினர்கள் அவனைக் காணுவது நல்லது என்றும் பெத்தி பே கூறினான். அவனுடைய கூற்றை அனைவரும் நம்பினர்.

தேனீர்க்கடையில் எல்லோரும் கூடினர். அங்கிருந்த பிறர்க்குத் தெரியா வகையில் அவர்கள் தங்கள் சங்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். பெத்தி பே தன் நண்பனுடன் வந்து சேர்ந்தான். அவனுக்குச் சங்கத்தின் கொள்கைகள் தெளிவாகக் கூறப்பட்டன. பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அவன் திடீரென்று எழுந்து நின்று, புன்முறுவலுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளத் தொடங்கினான். அப்போதுதான் பெத்தி பே

தங்களை ஏமாற்றிவிட்டதை அவர்கள் அறிந்தார்கள். பெத்திபே, அவன் நண்பன் ஆகிய இருவரும் **அரசியலாரின் ஒற்றர்கள்.** அவர்கள் நன்கு நடித்து, வாதன் சங்க உறுப்பினர்களை ஏமாற்றிவிட்டனர்; அதுமட்டுமன்றி, அவ்வளவுபேரையும் கைது செய்து சிறைச்சாலையில் தனித்தனி அறைகளில் அடைத்துவிட்டனர்.

நாடு கடத்தல்

ஓயாமல் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்த அரசியல் வாதிகளை விரைவில் திரும்பிவர முடியாத ஒரு பகுதியில் விடுவது ஒருவகைத் தண்டனை. ஏதேனும் உரிமை வேண்டி அறப்போர் நடத்தினுல், போராட்டத்தில் மகளிரும் கலந்துகொண்டிருந்தாலும் அரசியலார் அவர்களை லாரியில் ஏற்றி நகர் எல்லைக்கு அப்பால் நெடுந்தொலைவுவரை அழைத்துச்சென்று விட்டுவிடுவதை வரலாறு காட்டக் காணலாம். துருக்கி அரசாங்கம் **'காப்டன்'** பதவிக்குரிய முஸ்தபாவை நெடுங்காலம் சிறையில் அடைத்து வைத்திருக்க விரும்பவில்லை. எனவே, துருக்கிப் பேரரசின் ஓர் ஒதுக்குப்புறத்தில் பணியாற்றும்படி அவரை அனுப்ப அரசாங்கம் ஆணையிட்டது. அந்த ஆணை இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் நிறைவேற்றப்பட்டது. முஸ்தபா துருக்கி ஆட்சியில் அமைந்த சிரியா நாட்டின் தலைநகரான **டமாஸ்கஸ்** என்னும் நகர இராணுவத்தின் தலைவராக அனுப்பப்பட்டார்.

3. இளைஞர் இயக்கம்

உரிமை வேட்கை

துருக்கி மக்களிடையே உரிமை வேட்கை உண்டாகி விட்டது. சுல்தான் ஆட்சியை அகற்றி மக்கள் நன்மைக் காகத் தொண்டு புரியத்தக்க சான்றோர்களை ஆட்சிப்பீடத் தில் அமர்த்தவேண்டும் என்று சிலர் விரும்பினர். துருக்கி இளைஞர்கள் இந்தத் துறையில் பெரிதும் கருத்தைச் செலுத்தினர். சுல்தான் இளைஞர்களது ஈடுபாட்டைக் கண்டு அஞ்சினர். 'இளைஞர்களால் எழுப் பப்படும் குரல் ஒலி வலிமையுடையது; அவர்களால் மேற் கொள்ளப்படும் எந்தச் செயலையும் எளிதில் அடக்கிவிட முடியாது; இராணுவத்தின் துணையை நாடி அடக்கிவிட் டாலும், அந்த நேரத்திற்கு அமைதியாக இருந்து, பின்னர் மீண்டும் தங்கள் வேலையைத் தொடங்கி விடுவார் கள்,' என்று சுல்தான் எண்ணினர். 'வாதன்' என்ற சொல்லைச் சொல்லக்கூடாது என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. துருக்கியில் நாட்டு உணர்ச்சியைக் கிளப்பி விடுபவர்கள் சுல்தானுக்கு எதிராக வேலை செய்பவர்கள் என்பது கருதப்பட்டது.

சுல்தான் செயல்கள்

மேனுட்டு நாகரிக முறையில் வாழவேண்டும், அவர் களைப்போல நிமிர்ந்து நடக்கவேண்டும் என்றெல்லாம் துருக்கி மக்கள் விரும்பினர். ஆனல், சுல்தான் அவர்களது விழைவை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று

எண்ணினர். இதன் விளைவாக, நடைமுறையில் மேற்கொள்ளப்பட இருந்த பல சீர்த்திருத்தங்கள் செயற்படவில்லை. பள்ளியில் கற்பிக்கப்பட்ட அறிவியற்கலைகள் மாணவர்க்குப் பயன்படும் வகையில் கற்பிக்கப்படவில்லை. இராணுவத்தைத் திருத்திப் புதிய முறையில் அமைப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த தளபதிகள் வரவழைக்கப்பட்டனர். ஆனால், அவர்களுக்கு எந்த வேலையும் தராமல் விடப்பட்டது. போர்க்கப்பல்கள் எல்லாம் துறைமுகத்தில் வறிதே கிடந்தன. வெளி நாடுகளில் பயிற்சிக்காகச் சென்ற இராணுவ வீரர் சிலர் துருக்கியின் நிலையை அறிந்து, சீர்த்திருத்தங்கள் சில செய்ய நினைத்துத் திரும்பி வந்தனர். ஆனால், சுல்தான் அவர்களை நாட்டின் பல பகுதிகளுக்குப் பல்வேறு காரணம் காட்டி அனுப்பிவிட்டனர். மக்களிடையே நாட்டுப் பற்று மிகுந்தவர் துணிவுடன் சில செயல்களைச் செய்ய முற்பட்டபோது அவர்கள் நாடுகடத்தப்பட்டனர். இந்த நிலையில் சுல்தானுடைய சொல்லைப் பொருமல் நல்லவர் பலர் தாமாகவே நாட்டை விட்டு வெளியேறினர்.

இரண்டு அமைப்புக்கள்

நாட்டை விட்டுத் தாங்களாகவே வெளிச் சென்றவர்கள், நாடுகடத்தப்பட்டவர்கள், வஞ்சகமாக வெளியேற்றப்பட்டவர்கள் ஆகிய யாவரும் பாரிஸில் கூடினர். அவர்கள் அங்கு ஒரு சங்கத்தை அமைத்தனர். இதற்குப் பாரிஸ் குழு என்பது பெயர். இக்குழுவில் நூலாசிரியர்களும் செய்தித்தாள் ஆசிரியர்களும் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் இருந்தனர். அஹ்மத் ரிஜா பே என்பவர் இக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்ருர். இக்குழுவிற்குத் துருக்கியின் பல பகுதிகளிலும் கிளைகள் இருந்தன. இக்குழுவினர் செய்தித்தாள் ஒன்றை நடத்தினர்.

சுல்தானின் சகோதரி மகனுன ஜபா ஹுத்தீன் என்பவர் பாரிஸ் குழுவைப் போன்றதொரு இரகசியக் குழுவை நடத்திவந்தார். இக்குழுவின் தலைமை அலுவலகம் பெர்லினில் இருந்தது. முன்னாள் அமைச்சர்கள், அரசாங்கத்தின் ஓய்வு காலச் சம்பளத்தைப் பெறுபவர்கள், அரசியல் அறிஞர்கள் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினராய் இருந்தனர். பாரிஸ் குழுவினரைப்போல இவர்கள் தீவிரவாதிகளாய் இல்லை. அவர்கள் அரசாங்கத்தையே மாற்றிப் புதிய குழுவினரைக் கொண்ட ஆட்சியை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று எண்ணினர். இவர்களோ அவ்வாறில்லாமல், ஆட்சியில் இருந்த குறைகளை நீக்கிவிடுவது போதுமென்றும், செருமனியில் இருப்பது போன்ற அரசாங்க அமைப்பை ஏற்படுத்திவிடுதல் போதும் என்றும் எண்ணினர். இவர்களை நாம் மிதவாதிகளாகக் கொள்ளலாம்; பெர்லின் குழுவினர் என்றும் கூறலாம்.

இளைஞர் இயக்கம்

மக்களிடையே செல்வாக்கில்லாத இந்த இரண்டு அமைப்புக்களாலும் ஏதும் பயன் ஏற்படவில்லை. இரண்டு அமைப்புக்களையும் ஒன்று சேர்த்து, தனியாகப் புதியதொரு இயக்கத்தைக் காணச் சிலர் துடித்தனர். அதன் விளைவாக அமைந்த அமைப்பே இளைஞர் இயக்கம் என்பது. 'ஐக்கிய முன்னேற்றக் குழு,' 'துருக்கிய இளைஞர் குழு,' 'துருக்கிய இளைஞர் இயக்கம்,' 'துருக்கிய இளைஞர் கட்சி' என்று இளைஞர் இயக்கத்திற்குப் பல பெயர்கள் அமைந்தன. பாரிஸ் குழுவினரும், தங்கள் கருத்துக்களை நடைமுறையில் கொண்டுவருவதில் கருத்து வேறுபாடு கொண்டனர். அறிவைக் கொண்டு நாட்டில் புரட்சியை உண்டாக்கலாம் என்று பாரிஸ் குழுவினர் கூறினர். அது இயலாதஒன்று என்றும், இராணுவத்தைக் கொண்டுதான்

எளிதில் நாட்டில் புரட்சியை உண்டாக்க முடியும் என்றும் பெர்லின் குழுவினர் கூறினர். அவர்களுக்கு மக்களிடையே செல்வாக்கு மிகுந்திருந்தது.

இளைஞர் இயக்கத்தின் தலைமை அலுவலகம் பாரிஸிலேயே இருந்தது. இதற்குந் துருக்கியெங்கும் கிளைகள் இருந்தன. சலோனிகாவில் இருந்த கிளை அமைப்புக்குத்தான் மிகுந்த செல்வாக்கு இருந்தது. புரட்சியை உண்டு பண்ணி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென நினைத்த இவர்கள், தங்கள் திட்டங்களை மிகவும் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுத்தும் நிலை ஏற்பட்டுவிட்டது. நாடெங்கும் சுல்தானின் ஒற்றர்கள் நிறைந்துவிட்டனர். இளைஞர் இயக்கத்தினர் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதிலும் விழிப்புடன் இருந்தனர்.

முஸ்தபாவின் உள்ளம்

முஸ்தபா டமாஸ்கசுக்கு அனுப்பப்பட்டார் அல்லவா? அங்கு ஒருவகைச் சாதியினர் கலகம் செய்தனர். அக்கலகத்தை அடக்குமாறு முஸ்தபாவுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. கலகம் அவரால் திறமையாக அடக்கப்பட்டது. சலோனிகாவுக்குச் சென்று அங்கிருந்து தீவிரமாக வேலை செய்யவேண்டும் என்ற எண்ணம் அவருடைய உள்ளத்தை அரித்துவந்தது; அங்குச் செல்வதற்குரிய வழிபற்றிச் சிந்திக்கலானார். சலோனிகாவில் பீரங்கிப் படைக்குத் தலைவராகச் சுக்கிரி பாஷா என்பவர் இருந்தார். இவர் முஸ்தபாவின் நண்பர். சுக்கிரி பாஷாவுக்கு முஸ்தபா தம்முடைய விழைவையும் எண்ணங்களையும் தெளிவாகக் குறித்துக் கடிதமொன்று எழுதினார். நாட்கள் பலவாகியும் சுக்கிரியிடமிருந்து பதில் வரவில்லை. என்ன செய்வதென்று விளங்காதிருந்த முஸ்தபாவுக்கு அரசாங்க ஆணை ஒன்று வந்தது. அதன்படி அவர் டமாஸ்கஸிலி

ருந்து ஜாபா என்ற துறைமுகத்திற்குச் செல்லவேண்டிய வரானுர். அவர் அந்த ஆணையின்படி ஜாபாவுக்குக் கிளம்பத் தயாரானுர். அப்போது ஒருவன் விரைந்து வந்து அவர் கையில் கடிதமொன்றைத் திணித்துவிட்டு மறைந்தான். அவன் யாரென்று முஸ்தபாவுக்குத் தெரியாது. எதிர்பாராது ஏற்பட்ட திகைப்பால் அவன் யாரென்று அறிந்துகொள்ளவும் அவர் முனையவில்லை.

அக்கடிதம் சுக்கிரியிடமிருந்து வந்தது சலோனிகாவுக்கு வரத் தீவிரமாக முயல வேண்டும் என்பதும், அங்கு அவருக்குத் தகுந்த ஆதரவு கிடைக்குமென்பதும் அதில் எழுதப்பட்டிருந்தன. முஸ்தபா உடனே தம் ஜாபா செலவினை நீக்கிவிட்டார்; மாற்றுடை அணிந்து சலோனிகாவுக்குச் சென்றுவிட முடிவு செய்தார். திடீரெனக் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அதிகாரிகள் ஜாபாவில் தம்மைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினுல் நிலைமை யாதாகும் என்பது பற்றியும் சிந்திக்க அவர் தவறவில்லை. ஜாபாவில் துருக்கிப் படைகளின் தளபதியாக இருந்த அஹ்மத் பே என்பவர் முஸ்தபாவுக்கு ஊக்கம் கூறி, அதிகாரிகள் தேடுவாராயின் முன்னதாகவே அறிவித்து வரவழைத்துவிடுவதாக உறுதி கூறி, அவரைச் சலோனிகாவுககு அனுப்பினுர்.

முஸ்தபா ஐரோப்பிய உடையில் சலோனிகாவுக்கு வந்து சேர்ந்தார்; அங்குச் சுக்கிரியைக் கண்டார். சுக்கிரி முஸ்தபாவின் செயலை வெறுத்தார்; "நேர்மையான முறையில் அல்லவா உன்னைத் தக்கவர்க்கு எழுதி, வேண்டி, இடம் மாற்றிக்கொள்ளச் சொன்னேன். நீ இப்படிச் செய்துவிட்டாயே! இந்த வேளையில் உனக்கு உதவும் நிலையில் நான் இல்லை," என்று கூறினுர். முஸ்தபா மனம் தளர்ந்தார்; ஆயினும் அவருக்குத் தெரிந்த பலரை அணுகித் துருக்கியின் எதிர்காலம் பற்றிப் பேசினுர்.

அவர்கள் முஸ்தபாவின் பேச்சுக்குச் செவி சாய்க்கவில்லை. பொதுவாக மாறுவேடத்திலிருந்த முஸ்தபாவை அவர்கள் உணராமல், அவர் கூற்றுக்களை நம்ப மறுத்தனர். அவர் பெரிதும் மனம் உடைந்து போனார்; ஜாபாவுக்கே சென்றிருக்கலாமே என்று எண்ணினார்.

பெத்தி பே என்பவர் இளைஞர் இயக்க உறுப்பினர். இவர் முஸ்தபாவின் நண்பர். இவர் ஒருநாள் முஸ்தபாவிடம் வந்து, "உன்னை இளைஞர் இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துள்ளனர்," என்று கூறினார். முஸ்தபா மகிழ்ந்தார்; இயக்கத்தின் செயல் முறைகளையும் திட்டவகைகளையும் கவலையோடு கவனித்துவந்தார். இயக்கத்தாரின் மனப்போக்கும் அவர்தம் குறிக்கோளும் அவருக்குப் பிடிக்கவில்லை. இளைஞர் இயக்கத்தார் ஆடம்பரத்திலேயே கருத்தைச் செலுத்தியதும், தம்மை நம்பாமல் சிறப்புக் கருத்தாய்வுக் குழுவில் தம்மைச் சேர்த்துக் கொள்ளாததும் அவருக்குப் பிடிக்கவில்லை. இயக்கத்துக்குள்ளேயே பலவிதப் பிளவுகள் இருந்ததை அவர் மனமார வெறுத்தார்.

அஹ்மத் பேயின் ஆதரவு

முஸ்தபா அரசாங்க ஆணையேற்று ஜாபா செல்லவில்லை என்பதும், அவர் சலோனிகாவில் இருக்கின்றார் என்பதும் அரசாங்கத்துக்குத் தெரிந்துவிட்டன. உடனே அவர்கள் அதுபற்றி விரிவாக எழுதுமாறு அஹ்மத் பேக்கு எழுதினர். அஹ்மத் பே முஸ்தபாவைக் கைது செய்யுமாறு அனுப்பிய அரசாங்க ஆணையை வைத்துக்கொண்டு முஸ்தபாவுக்குச் செய்தி அனுப்பிவிட்டார். அவ்வளவுதான் : முஸ்தபா விரைந்தோடி வந்துவிட்டார். அஹ்மத் பே முஸ்தபாவைக் கப்பலிலேயே சந்தித்து எல்லாச் செய்திகளையும் கூறினார். செங்கடலின் வடகிழக்கு மூலை

யில் இருக்கின்ற. அகாபாவைக் கைப்பற்றப் பிரிட்டிஷார் முயன்றுகொண்டிருந்தனர். அகாபா தங்களிடமே இருக்க வேண்டும் என்று துருக்கி விரும்பியது. அங்கு லூப்தி பே என்பவர் தளபதியாக இருந்தார். அஹ்மத் பே அவருக்கு உதவியாக இருக்கும்படி முஸ்தபாவை அனுப்பி வைத்தார்.

"முஸ்தபாவின் தொண்டினைக் குறித்து யாரோ பொறாமையால் எழுதிய தவருன குறிப்பு அரசாங்கத்திடம் கிடைத்துவிட்டதுபோலும்! முஸ்தபா பல திங்களாகத துருக்கி எல்லைப்புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படையில் உள்ளார்," என்று அரசாங்கத்துக்கு அஹ்மத் பே பதிலெழுதிவிட்டார். அஹ்மத் பேயின் கூற்று உண்மையானதா என்றறிய லூப்டி பேயை அரசியலார் விசாரித்தனர். லூப்தி பே, அஹ்மத் பே கூறியது முற்றிலும் உண்மை என்ருர். அரசியலார் அமைதி பெற்றனர்.

பதவி உயர்வு

அகாபா துறைமுகத்தைப் பற்றிய சச்சரவு துருக்கியருக்கு ஆதரவாக முடிந்தது. முஸ்தபா டமாஸ்கஸ் வந்து சேர்ந்தார். அவர் 'லெப்டினென்ட் மேஜராக' உயர்த்தப்பட்டார்; சுமார் ஓராண்டுக் காலம் டாமஸ்கஸிலேயே காலம் கழித்தார். அந்த ஓராண்டுக் காலம் அவருக்குப் பெரிதும் துன்பத்தைக் கொடுத்தது. ஓயாமல் வேலை செய்துகொண்டிருப்பவர்களைத் தனியறையில் அடைத்து வைத்துவிட்டால், அவர்கள் எப்படித் துன்பப் படுவார்களோ அதுபோல முஸ்தபாவும் அந்த ஓராண்டுக் காலத்தை வெறுப்புடன் கழித்தார்; அடிக்கடி உயர் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதித் தம்மைச் சலோனிகாவுக்கு மாற்றுமாறு வேண்டினர். சலோனிகாவிலிருந்த இளைஞர் இயக்கத்தினர் முஸ்தபாவின் வரவைப் பெரிதும்

விரும்பினர்; தங்கள் விருப்பத்தை முஸ்தபாவுக்குத் தெரிவித்தனர்; முஸ்தபா சலோனிகாவுக்கு வருவதற்கு மறைமுகமாக எல்லா முயற்சிகளையும் செய்தனர்.

முஸ்தபா சலோனிகாவுக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்த மூன்றும் படையின் தலைமை அலுவலகத்தில் அவருக்கு வேலை தரப்பட்டது. அங்குப் பணியாற்றுவதோடு மாசிடோனியா புகைவண்டிகளில் தணிக்கை செய்யும் வேலையும் அவரிடம் தரப்பட்டது. அவர் இராணுவ நிலையத்தில் பணியாற்றுவதைவிடப் புகைவண்டிகளில் தணிக்கை செய்யும் பொறுப்பைப் பெரிதும் விரும்பினார். இளைஞர் இயக்கத்தின் தலைமை அலுவலகத்துக்கும் ஏனைய எல்லாக் கிளை அலுவலகங்கட்கும் உறவு ஏற்படுத்தி வைக்கவும், அவ்வுறவை வலுப்பெறச் செய்யவும் இந்தப் பொறுப்புப் பெரிதும் துணைபுரிந்தது.

மாசிடோனியாவில் குழப்பம்

மாசிடோனியா துருக்கி ஆட்சிக்கு உட்பட்ட நாடு. ஆனால், அதனைச் சுற்றியிருந்த பால்கன் நாடுகள் அதனைக் கைக்கொள்ள நினைந்தன. இதனால் உள்நாட்டுப்போர் மூண்டது; வலுத்தது. ஐரோப்பிய வல்லரசுகள் ஒன்றுகூடி மாசிடோனியாவில் அனைத்து நாட்டுப் படை (சர்வதேசப்படை) ஒன்றை நிறுத்தி வைப்பதென்று முடிவு செய்தன. ஆனால், இம்முடிவைச் சுல்தான் ஏற்க மறுத்தார். இருப்பினும், வல்லரசுகள் தங்கள் கப்பற்படைகளை மாசிடோனியா துறைமுகங்களில் நிறுத்தித் துருக்கியை அச்சுறுத்தின. இதற்கிடையில் வல்லரசுகளிடையே பிளவு ஏற்பட்டது. இந்த நிலையில் ருசியாவுக்கும் சப்பானுக்கும் போர் மூண்டது. போரில் உலகமே வியக்குமளவில் சப்பான் வெற்றி கண்டது. இந்த நிகழ்ச்சி துருக்கிய இளைஞர்களுக்கு ஊக்கத்தை அளித்தது.

மிகப் பெரியதொரு நாடு—பெருவல்லரசு என்று கருதப்பட்ட ருசியாவை, மிகச் சிறியதொரு நாடு என்று கருதப்பட்ட சப்பான் வெற்றி கொண்டதைக் கண்ட அவர்கள், எஞ்சியுள்ள துருக்கிப் பகுதிகளைக் காக்க வேண்டும் என்றும், பிறநாட்டார் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் உறுதி கொண்டனர். இசுலாமியத் தலைவர்கள் இதற்கு ஆதரவாக நின்றார்கள். மதம் காக்கப்படவேண்டுமாயின், துருக்கி அயலார் ஆட்சியினின்று காக்கப்பட வேண்டும் என்று மதத்தலைவர்கள் மக்களிடையே கூறினர். ஆனால், அரசாங்கம் நாட்டு மக்களின் உரிமைக் குரலை அடக்குவதிலேயே முனைந்து நின்றது.

இளைஞர் இயக்கத்தின் செயல்கள்

இளைஞர் இயக்கத்தினர் சுல்தான் ஆட்சியை அகற்றுவதில் பெரிதும் ஆர்வம் காட்டினர்; விரைவில் புரட்சி ஒன்றினைத் தொடங்குவது என்று முடிவு செய்தனர்; ஆனால், அப்புரட்சி எப்போது எங்கே நடத்துவது என்பது பற்றிய முடிவுகளைச் செய்திலர். முஸ்தபாவுக்கு இச்செயல்களெல்லாம் நகைப்பை அளித்தன; ஆயினும் செல்லுமிடமெல்லாம் எந்த அளவுக்குத் தம்மால் இளைஞர் இயக்கத்துக்காகத் தொண்டு செய்ய முடியுமோ அந்த அளவுக்குப் பிறர் கண்டுகொள்ளாத அளவில் திறமையாகச் செய்துவந்தார்.

"இளைஞர் இயக்கத்தினர் இனம் தெரியாத உணர்ச்சியின் அடிப்படையில் ஏதேதோ எண்ணுகின்றனர்; எண்ணியதையெல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றனர்; ஆராய்ந்து தங்கள் தகுதியையும் திறமையையும் எண்ணிப்பார்த்துச் செயல்பட மறுக்கின்றனர். இவர்கள் திட்டங்களெல்லாம் எந்த அளவுக்கு

வெற்றிதரப் போகின்றனவோ, தெரியவில்லையே!" என்று எண்ணி முஸ்தபா வருந்தினர்.

1908-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் சலோனிகாவில் உள்ள இளைஞர் இயக்கத்தினர், பாரிஸ் குழுவின் இசைவின்றிப் புரட்சி தொடங்க அநுமதியளித்தனர். அதன் விளைவாக மாசிடோனியாவின் வடக்குப்பக்கத்தில் நியாஜி பே என்பவர் சிலரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு புரட்சியைத் தொடங்கிவிட்டார். கிழக்கு மாசி டோனியாவில் அன்வர் பே என்பவர் புரட்சியைத் தொடங்கிவிட்டார். இவர்கள் இருவருக்கும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் சிலர் துணைசெய்தனர். இரா ணுவத்தினர் இப்புரட்சிகளில் கலந்துகொள்ளாமல் விலகி நின்றனர்.

புரட்சியை அடக்க முயற்சிகள் செய்யப்பட்டன. புரட்சி நிற்கவில்லை. அவர்களை அமைதிப்படுத்துவதற் காகச் சுல்தான் 1876-ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமலிருந்த சில சட்டங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவந் தார். புரட்சியின் மூலம் சுல்தானை அச்சுறுத்திவிட்டதாக இளைஞர் இயக்கத்தினர் கருதினர்.

இப்புரட்சிக்குப் பின்னர் இளைஞர் இயக்கம் விரைந்து வளர்ந்தது. உறுப்பினர் போட்டியிட்டுக்கொண்டு சேர்ந் தனர். மக்களுக்காக நன்மை செய்யக்கூடிய எந்த ஓர் இயக்கத்திற்கும் மக்களுடைய ஆதரவு இருப்பது உண்மை தான் என்பதை இளைஞர் இயக்கத்தினர் உணர்ந்தனர்; இந்தப் பேராதரவைக் கொண்டு மக்கள் நலனுக்காக எண்ணற்ற கடமைகளைச் செய்யவேண்டும் என்று உறுதி கொண்டனர். அரசாங்கத்திடமிருந்து எழுபத்தையாயிரம் பவுன் இதற்குக் கிடைத்தது. புதிய அரசியல் முறைப்படி நடந்த பாராளுமன்றத் தேர்தலில் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர் பெரும்பான்மையோராக வெற்றி பெற்றனர்.

குழப்பம்

புதிய அரசியல் திட்டத்தின்படி நாடு கடத்தப்பட்டிருந்தவர் எல்லோரும் திரும்பினர். புதிதாக வந்தவர்கள், புரட்சியை நடத்தி வெற்றி கண்ட இளைஞர் இயக்கத்தினர் ஆகிய இருவர்க்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. புரட்சியின் அடிப்படை நோக்கம் நிறைவுபெற்றுவிட்டதால், இனி இளைஞர் இயக்கம் என்ற அமைப்பு வேண்டா என்று சிலர் கூறினர். இளைஞர் இயக்கத்தவர்க்கு ஆட்சித் துறையில் அநுபவம் இல்லாததால் சுல்தான் அரசாங்கமே தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்று சிலர் கூறினர். இந்தக் குழப்பநிலை சுல்தானுக்கு மகிழ்ச்சியை அளித்தது. இறுதியில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இளைஞர் இயக்கச் செயற்குழு ஒன்றை அமைப்பது என்றும், சுல்தான் தலைமையில் நடைபெறும் ஆட்சியை இவ்வியக்கம் மேற்பார்வை செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆண்டுதோறும் இக் குழுவினர் கூடி, அரசாங்கம் இன்னின்ன வேலைகளை இந்த நடைமுறை ஆண்டில் செய்து முடிக்க வேண்டும் என்று குறித்துத் தரும் திட்டங்களைச் சுல்தான் அரசாங்கம் மேற்கொள்ளுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

முஸ்தபாவுக்கு இராணுவத்தில் மிகுந்த செல்வாக்கு உண்டு என்பதையும், அவர் தங்கள் செயல் முறைகளில் பங்குகொள்ளாததையும் அறிந்த இளைஞர் இயக்கத்தினர் சிறிது அஞ்சினர். அவர் தங்கட்கு எதிராக ஏதேனும் கிளர்ச்சி செய்யக்கூடுமோ என்று எண்ணிக் கலக்கம் கொண்டனர்; எனவே, அவரை வெளிநாட்டிற்கு அனுப்பி விட எண்ணினர். வட ஆப்ரிக்காவில் உள்ள **டிரிபோலி** என்னும் பகுதி துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்டது. **டிரிபோலியைக்** கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று

ருசியா எண்ணியது. எனவே, அப்பகுதியைக் காக்க முஸ்தபா அங்கு அனுப்பப்பட்டார்.

கான்ஸ்டான்டிநோபிளில் கலகம்

இளைஞர் இயக்கத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபொழுது துருக்கியின் வெளிநாட்டு விவகாரங்கள் பெரிதும் குழப்பமாயிருந்தன. பாஸ்னியாவையும் ஹெர்ட்ஸெகோவினுவையும் ஆஸ்திரியா கைப்பற்றிக் கொண்டது. கிரீஸ், க்ரேடே என்னும் துறைமுகத்தைக் கைப்பற்றிக்கொண்டது. பல்கேரியா, துருக்கியின் ஆதிக்கத்தில் இனியும் இருக்க முடியாதென்று அறிவித்துவிட்டது. அல்பேனியாவிலும், அரேபியாவிலும் கலகங்கள் கிளம்பின. இந்த நிகழ்ச்சிகளுள் எதனையும் இளைஞர் இயக்கத்தாரால் தடை செய்ய முடியவில்லை.

மக்களுடைய மனநிலையை அறியாமல் அவர்கள் பல சீர்த்திருத்தங்களை நடைமுறைக்குக் கொணர முயன்றனர்; இறைவன் படைப்பில் யாவரும் சமம் என்று கூறினர்; எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் நடத்தப் படுவர் என்று அறிவித்தனர். பெண்கள் சிலர் நெடுங்காலமாக நிலவி வந்த வழக்கங்களைப் புறக்கணிக்கத் தொடங்கினர்; முகமூடி இல்லாமல் தெருவில் உலா வந்தனர். இவையெல்லாம் எந்த அளவுக்குத் தங்களைக் கொண்டு சென்றுவிடுமோ என்றெண்ணி மக்கள் அஞ்சினர். மதத் தலைவர்கள் தங்கள் மதக்கோட்பாடுகட்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்றுகருதினர். சமயத்தலைவர்கள் இராணுவத்தைச் சேர்ந்த சாதாரண போர்வீரர்களிடம் சென்று, மதத்தைக் காப்பாற்ற வேண்டுவது தமது இன்றியமையாத கடமை என்றும், மதத்தைக் காப்பாற்ற வேண்டுமானல் சுல்தான் காப்பாற்றபட வேண்டும் என்றும் கூறினர்; இளைஞர் இயக்கத்திற்கு எதிராக ஓயாமல்

பிரசாரம் செய்தனர். அதன் விளைவாக 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 13-ஆம் நாளன்று கான்ஸ்டான்டி நோபிளில் கலகம் தொடங்கிவிட்டது.

இக்கலகத்தைப் பற்றிக் கேள்வியுற்றதும் இளைஞர் இயக்கத்தார் முஸ்தபாவின் தலைமையில் பெரும்படையை அனுப்பினர். 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 24-ஆம் நாளன்று கலகக்காரர் சரணடைந்தனர்.

புதிய சுல்தான்

பாராளு மன்றம் கூடியது. சுல்தானைப் பதவியிலிருந்து நீக்குவது என்று உறுப்பினர்களால் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானம் நிறைவேறியது. சுல்தானும், அரசமகளிரும் சலோனிகாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் காப்பில் வைக்கப்பட்டனர்.

பழைய சுல்தானின் சகோதர உறவு கொண்ட சுல்தான் ஐந்தாவது முகம்மது, புதிய சுல்தானகப் பொறுப்பேற்றுக்கொண்டனர். சட்டமன்ற உறுப்பினர்கள் மரபுப்படி மரியாதை செய்தனர். புதிய சுல்தான், பழைய சுல்தானல் சுமார் முப்பதாண்டுகள் வரையிற் சிறைவைக்கப்பட்டிருந்தவர் என்பது இங்கு அறியத் தகும்.

முஸ்தபாவின் நிலை

இளைஞர் இயக்கத்தாரின் புதிய ஆட்சி பெருங்குழப்பத்திலேயே தொடங்கியது. ஒருவர் புகழ்பெறுவதை மற்றவர் விரும்பவில்லை. எல்லோரும் உயர்ந்த பதவியில் இருக்க வேண்டும் என்று விரும்பினர். ஒருவரை ஒருவர் நம்பாமல் ஒருவர்க்கொருவர் தீமை செய்துகொண்டனர். ஒருவர் ஏற்றுவந்த பொறுப்பை மற்றவர் கைப்பற்ற மறைமுகமாக முயற்சிகள் நடைபெற்றன. அன்பு என்னும்

உணர்ச்சி அவர்களிடையே மறைந்துவிட்டது. பாராளு மன்றம் பலமுறை கூடினாலும் திட்டமான முடிவுகள் செய்ய முடியவில்லை. இன்று ஒரு சட்டம் நடைமுறைக்குக் கொணரப்படும்; நாளையே பிறிதொரு சட்டம் பிறப்பிக்கப் படும். அந்தப் புதிய சட்டமும் எந்தக்கால அளவுவரை உறுதியாக இருக்கும் என்பது சொல்ல முடியாது. இவ வாறு, இளைஞர் இயக்கத்தவரின் ஆட்சிமுறை அவல நிலையில் இருந்தது.

(முஸ்தபா இந்நிலைகளையெல்லாம் எதிர்பார்த்தார். திட்டமிட்டுச் செய்யப்படாத எந்தச் செயலும் பெரும் பாலும் வெற்றியளிக்காது என்பது அவர் நம்பிக்கை.) கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து முஸ்தபா சலோனிகா வுக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர்கள் அவரை நீண்ட நாட்கள் வைத்திருக்கவில்லை. பிரெஞ்சு அரசாங்கம் பாரி ஸில் இராணுவப் பயிற்திக்கு ஏற்பாடு செய்திருந்தது. முஸ்தபா அங்குப் பயிற்சிபெறுவதற்காக அனுப்பப்பட் டார். அங்குப் பயிற்சி பெற்றுத் திரும்பியதும் சலோனி காவிலிருந்த இராணுவப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரிய ராக நியமிக்கப்பட்டார்; சிறிது காலத்திற்குள் கான்ஸ் டான்டிநோபிள் போர்க்கால அமைச்சர் அலுவலகத் திற்கு அனுப்பப்பட்டார்.

4. போரும் வாழ்வும்

இத்தாலியுடன் உடன்படிக்கை

ஆப்பிரிக்காவின் வடபகுதி துருக்கிப் பேரரசின் ஆட்சியில் பல நூற்றுண்டுகள்வரை இருந்துவந்தது. இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரான்சும் கிரேட்பிரிட்டனும் இப்பகுதியைப் பங்கு போட்டுக்கொண்டனர். இதைக் கண்டதும் இத்தாலி இந்த ஆக்கிரமிப்பு முறையில் நாம் ஏன் கலந்துகொள்ளக்கூடாது என்று நினைந்து. துருக்கிக்கு உரிமையான டிரிபோலி, லிபியா முதலிய பகுதிகளில் வாணிகம் செய்துவந்தது. டிரிபோலியைத் தன் ஆட்சிக்குக் கொண்டுவந்து விடவேண்டும் என்னும் விழைவு இத்தாலிககு ஏற்பட்டது; எந்தக் காரணத்தைச சொல்லி டிரிபோலியைக் கைப்பற்றுவது என்று எண்ணியது "இத்தாலி, துருக்கிய அலுவலர்களால் டிரிபோலியில் வாணிகம் செய்ய முடியவில்லை. எனவே, இத்தாலி டிரிபோலியைக் கைப்பற்ற எண்ணுகின்றது. துருக்கி இருபத்து நான்கு மணி நேரத்துள் இசைவைத் தெரிவிக்கத் தவறினல், போர் தொடங்கப்படும்," என்று துருக்கிக்கு இத்தாலி அறிக்கை விடுத்தது.

இழந்த பகுதிகளை எண்ணித் துயருற்றுக்கொண்டிருந்த துருக்கிக்கு இத்தாலியின் அறிக்கை வேதனை அளித்தது. இருபத்து நான்கு மணி நேரத்துள் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. உடனே இத்தாலி டிரிபோலி மீது படையெடுத்தது. துருக்கி பெரும்படை ஒன்றை

அனுப்பியது. அன்வர் பாஷா தளபதியாகவும், முஸ்தபா துணைத்தளபதியாகவும் இருந்து படையைக் களம் நோக்கி நடத்தினர். ஏறத்தாழ ஓராண்டுக்காலம் போர் நடைபெற்றது. இப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதே, பால்கன் நாடுகள் ஒன்று சேர்ந்து கொண்டு துருக்கியை எதிர்த்தன புதிய எதிர்ப்பிலிருந்து தப்ப இத்தாலியுடன் சமாதான உடன்படிக்கையை 1912-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் துருக்கி செய்துகொண்டது. டிரிபோலிக்கு உரிமை கொடுக்கப் பட்டது. முஸ்தபா 1912-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் கான்ஸ்டான்டிநோபிளுக்குச் சென்றார்.

கிரேக்கர் கலவரம்

கிரேக்கர்கள் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிக் கொள்ள எண்ணித் தெற்குப்புறமாக முன்னேறினர்; சலோனிகாவைக் கைப்பற்றிக்கொண்டனர்; நகரத்தில் பெருங்கலவரம் செய்து ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் மக்களைக் கைது செய்தனர்; கான்ஸ்டான்டிநோபிளை மறந்துவிடாமல் முன்னேறினர். கான்ஸ்டான்டிநோபிளுக்கு முஸ்தபா வந்ததும், தம் தாயாரைப்பற்றியும் தங்கையைப் பற்றியும் எண்ணினார். அவர்கள் சலோனிகாவில் இருந்தனர். சலோனிகாவோ கிரேக்கர்கள் ஆட்சியில் இருந்தது. எனவே, அவர் விரைந்து சலோனிகாவுக்குச் சென்று தாயையும் தங்கையையும் கண்டுபிடித்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு அழைத்துவந்தார்.

அன்வர் பாஷாவின் செயல்

அன்வர் பாஷா டிரிபோலியிலிருந்து வந்து சேர்ந்தார். அப்போது துருக்கி ஆட்சிக்குழு குழப்பத்தில் இருந்தது. பால்கன் நாடுகளின் படையெடுப்பே அதற்குக் காரணம். கான்ஸ்டான்டிநோபிள் தவிர ஏனைய எல்லாப்

பகுதிகளையும் தங்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று பால்கன் நாடுகள் வேண்டின. அட்ரியா நோபிளைத் தங்களிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று பல்கேரியா வற்புறுத்தியது. இந்த இரண்டு வேண்டு கோட்கும் எப்படி இணங்குவது என்பது பற்றித்தான் ஆட்சிக் குழுவினரிடையே கருத்து வேறுபாடுகள் நில வின. தலைமை அமைச்சரான கியாமில் பாஷா என் பவர் அந்நாடுகள் கேட்கும் பகுதிகளைக்கொடுத்து, நட்புக் கொள்ளுவதே நல்லது என்றார். ஆனால், இளமை மிகக உறுப்பினர்கள் வயதான கியாமில் பாஷாவின் கூற்றை எதிர்த்தனர். இராணுவத் தலைவர்கள் பலரும் கியாமி லின் கூற்றைப் புறக்கணித்தனர்.

அன்வர் பாஷா இக்குழப்ப நிலையை நீடிக்கவிட விரும்பவில்லை. தம்பால் பற்றுக்கொண்ட இராணுவ வீரர் களைச் சேர்த்துக்கொண்டு, ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, அரண்மனையுள் நுழைந்து குழப்பம் விளைவித்தார். போர்த்துறை அமைச்சா நாஜிம் பாஷா கொல்லப்பட்டார். கியாமில் பாஷாவும் பிற அமைச்சர்களும் நாடு கடத்தப்பட்டனர். அன்வர் அரசி யல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். முகமத் ஷெவ்கத் பாஷா தலைமை அமைச்சராக்கப்பட்டார்.

சிறு வெற்றி

அன்வர் பாஷா அட்ரியா நோபிளிலிருந்து பல்கேரி யர்களை விரட்டியடித்துவிட எண்ணினார்; துருக்கிப் படை களை இன்னின்னவாறு அணிவகுத்துச் செல்ல வேண் டும் என்று சில முறைகளை முஸ்தபாவுக்குக் கூறினார். முஸ்தபா அந்த முறைகளைப் பின்பற்றினால் தோல்வி ஏற் படும் என்றார். பிடிவாதமுடைய அன்வர் தம் விருப்பப் படியே முஸ்தபா நடக்கவேண்டும் என்று கூறி அனுப்பி

விட்டார். முஸ்தபா கூறியதுபோலவே போரில் துருக்கி தோற்றுவிட்டது. எந்தச் சமாதான உடன்படிக்கையை மேற்கொள்ளக்கூடாது என்று அன்வர் கருதினரோ, அதே சமாதான உடன்படிக்கையில் அன்வர், தோல்விக்குப் பின்னர்க் கையெழுத்திட்டார்.

தங்களுக்குக் கிடைத்த நாடுகளைப் பங்கிட்டுக்கொள்வதில் பால்கன் நாடுகள் தம்முள் சண்டையிட்டுக்கொண்டன. இந்த நிலையில் அன்வர் மிக்க துணிவாகத் தம் படைகளைத் திரட்டிக்கொண்டு பல்கேரியர்களைத் துரத்தியடித்தார். அட்ரியாநோபிள் துருக்கியர்க்கு உரியதாயிற்று. அன்வர், வெற்றி வீரராக நகருள் நுழைந்தார்! அவர் இந்த வெற்றியை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். முஸ்தபாவை இராணுவத்தில் 'லெப்டினென்ட் கர்னல்' பதவிக்கு உயர்த்தினர்.

லிமான் வான் சாண்டர்ஸ்

அன்வர், தலைமை அமைச்சரான முகம்மத் ஷெவ்கத் பாஷாவைக் கொலை செய்துவிட்டார். அன்வர், தலாத், ஜமால் என்னும் மூவரே அரசாங்கத்தை நடத்தினர், எப்படியேனும் தமது பதவியை உறுதியாக்கிக்கொள்ள அன்வர் நினைத்தார்; துருக்கியின் பழம் பெருமையை நிலை பெறச் செய்யவேண்டும் என்றும் எண்ணினர்; இராணுவத்தைப் பலப்படுத்துவதுதான் தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய சிறந்த வழியாகும் என்று கருதினர்; செருமனியின் துணையை நாடினர். செருமனியின் இராணுவத் தளபதியாகிய லிமான் வான் சாண்டர்ஸ் என்பவர் வரவழைக்கப்பட்டார். துருக்கி இராணுவத்தைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்தும் பொறுப்பு அவருக்குத் தரப்பட்டது.

நாட்டியத்தில் ஈடுபாடு

முஸ்தபாவுக்கு அன்வரின் செயல்முறைகள் பிடிக்க வில்லை. துருக்கி இராணுவத்தைச் சீர்படுத்துவதற்காக செருமனியின் தளகர்த்தர் வரவழைக்கப்பட்டது துருக்கித் தளபதிகளை அவமானமுறச் செய்யும் செயலாகும் என்று அவர் கருதினார்; அன்வருக்குக் கடிதம் மூலமாகத் தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்தார். அன்வர் சினம் கொண்டார்; அவரைத் தலைநகரத்தில் தொடர்ந்து இருக்கச் செய்வது தொல்லைதரும் என்று எண்ணினார்; எனவே, அவரைப் பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் இருந்த **பெத்தி பேயின்** மெய்காப்பாளருள் ஒருவராக நியமித்து அங்கு அனுப்பிவிட்டார். சோபியாவில் முஸ்தபாவுக்கு வேலை இல்லை. எனவே, அவர் ஆசிரியர் ஒருவரை அமர்த்தி மேனாட்டு நாட்டியத்தைக் கற்றுக் கொண்டார்; கவலைகளை மறந்து வாழ நாட்டியக் கலை துணைபுரியும் என்பதை நேரடியாக உணர்ந்தார்; பெரிய மனிதர்கள் அடிக்கடி கூடும் இடங்களுக்குச் சென்று, அங்கு வந்த பெண்களோடு கலந்து நாட்டியமாடினார்.

அவசர ஆணை

ஆஸ்திரிய இளவரசரான **ஆர்ச் டியூக் பெர்னண்ட்** செர்விய மாணவன் ஒருவனால் கொல்லப்பட்டார். உடனே ஐரோப்பிய வல்லரசுகள் போர்க்கோலம் பூண்டன. துருக்கி செருமனியுடன் சேர்ந்துவிட்டது. பல்கேரியா எந்த வல்லரசோடும் சேராமல் நடுவு நிலைமை தாங்கியது. துருக்கியின் செயலைவிடப் பல்கேரியாவின் செயலையே முஸ்தபா விரும்பினார்; குறிப்பிட்ட காலம்வரைக் காத்திருந்து பின்னர் வல்லமை மிக்க நாட்டோடு துருக்கி இணைந்திருக்கலாமே என்று எண்ணினார்; எப்படியேனும் களம் சென்று துருக்கிக்காகப் போரிடவேண்டும் என்ற

விருப்போடு கான்ஸ்டான்டிநோபிள் அரசாங்கத்தைக் கேட்டார். அவர்கள் உடனடியாக இசைவு தர மறுத்து விட்டனர். போர் தொடங்கி ஆறு திங்கள்களாகியும் ஒரு முடிவுமில்லை. இந்த நிலையிலும் தம்மைக் களத்துக்கு அனுப்ப அரசாங்கம் மறுக்கின்றதே என்று எண்ணி முஸ்தபா கலங்கினர். அவர் சற்றும் எதிர்பாராத வகையில் உடனே புறப்பட்டு வருமாறு கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. நேசநாடுகளின் கப்பற்படைகளை — டார்டனெல்ஸ் நீர்ச் சந்தியை முற்றுகையிட்டிருந்த அக்கப்பற்படைகளை-விரட்டியடிக்குமாறு முஸ்தபாவை வேண்டினர். அதற்காகப் பெரும்படை அனுப்பப்பட்டது. படைத் தலைவராக வான் லிமான் சாண்டர்ஸ் பொறுப்பேற்றார்.

டார்டனெல்ஸ் நீர்ச்சந்தியின் முனையில் பெரியதொரு கப்பற்படையை நடுத்தரைக் கடல் வழியாகக் கொண்டுவந்து நேசநாடுகள் நிறுத்தி வைத்தன அக்கப்பல்கள் நீர்ச்சந்தியின் வாயிலாகச் செல்லக்கூடாது என்பதற்காக நீர்ச்சந்தியின் வாயிலைத் துருக்கி அடைத்துவிட்டது; அதன் இருபுறங்களிலுமுள்ள கோட்டைகளில் பீரங்கிகளை வைத்திருந்தது. முன்னரே முடிவு செய்திருந்தபடி 1915-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 18-ஆம் நாளன்று நேசநாடுகளின் கப்பல்கள் துறைமுகத்தினின்றும் சற்று முன்னேறின. அந்த அளவில் இரு கரைகளிலிருந்தும் துருக்கியர் குண்டுகளை வீசி அவற்றைப் பின்னடையச் செய்தனர். இதனல் நேசநாடுகளின் போர்க் கப்பல்களில் சில மூழ்கின; சில பாழ்பட்டன.

காலிபோலிப் போர்

பிரிட்டன் மீண்டும் விடாமல் தொடர்ந்து துருக்கியோடு போர் செய்து வெற்றிகாண எண்ணியது; தரை

வழியாகவும் துருக்கியைத் தாக்க எண்ணியது; சர். இயான் ஹாமில்டன் தலைமையில் ஒரு லட்சம் பேர் கொண்ட படையைத் திரட்டியது. 1915-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 25-ஆம் நாளிரவு காலிபோலியின் தெற்குப் பகுதியில் உள்ள செத் எல்பார் கோட்டைக்கு அண்மையில் பிரிட்டன் படைகளின் ஒரு பகுதி இறங்கியது. அங்குத் துருக்கிப் படைகளும் இருந்தன. இரு திறத்தாரும் கடுமையாகப் போர் புரிந்தனர். பிரிட்டன் படையின் மற்றொரு பகுதியினை ஏற்றிச் சென்ற படகு அஸ்ஸாக்கோவ் என்னுமிடத்திற்கு வடக்கே சென்று நின்றது. அங்கு வீரர்கள் இறங்கினர்; குன்று ஒன்றின் அடிவாரமாக அவ்விடம் இருப்பதைக் கண்டனர்; விடிவதற்குள் அக்குன்றின்மேல் ஏறிவிட்டால் துருக்கிப் படைகளைச் சிதற அடித்துவிடலாம் என்று எண்ணினர்; குன்றின்மேல் ஏறத் தொடங்கினர்.

குன்றில் முஸ்தபா

முஸ்தபா துருக்கி இராணுவத்தின் பத்தொன்பதாம் பிரிவின் பொறுப்புடைய தளபதியானார். அவர் தம் வீரர்கட்குப் போர்ப்பயிற்சி அளித்துக்கொண்டே 'அரிபுர்னு' மலையில் ஏறிச் செல்லுமாறு ஆணையிட்டார். தம் தலைவருடைய சொற்களைச் சிரமேற்றுங்கிப் போற்றும் அவ்வீரர்கள், அவர் சொன்னதுபோலவே பீரங்கிப் படைகளையும் குண்டுகளையும் எடுத்துக்கொண்டு மலைமீதேறினர்; அன்றிரவு அவர்கள் உறங்கவில்லை; குன்றிலேயே பகைவர்களை எவ்வாறு தாக்கலாம்-வெற்றி பெறலாம் என்று எண்ணியவாறே பொழுதைப் போக்கினர். ஊக்கமும் அநுபவமும் உடைய சிறந்த தளபதியான முஸ்தபாவிடம் பணியாற்றுவதில் அவர்கள் மகிழ்ந்தனர். எத்தகைய போராளும் முஸ்தபாவின் தலைமை இருக்குமாயின், வீரர்கள் போரிடத் தயங்கமாட்டார்கள் — ஊக்கமுடன் போரிட்டு

வெற்றியைத் தேடித் தருவார்கள் என்று பிறர் எண்ணு மாறு அவ்வீரர்கள் நடந்துகொண்டனர். இது முஸ்தபா வுக்குப் பெருமையைத் தந்தது.

பொழுது விடியச் சிறிது நேரமே இருந்தது. குன் றின்மேல் துருக்கிப்படைகள் இருக்கின்றன என்பதை அறியாமல், குன்றைக் கைப்பற்றிக்கொள்ளப் போகின் றோம் — குன்றைக் கைப்பற்றிக்கொண்டால துருக்கி நாடும் நமதே என்ற பேராசையோடு பிரிட் டன் படைகள் குன்றின்மேல் சென்றன. பிரிட்டன் படை களைக் கண்டுவிட்ட இரண்டு துருக்கி வீரர்கள் முஸ்தபா விடம் சென்று "இங்கிலீஷ், இங்கிலீஷ்" என்று கூறினர். 'தாக்குங்கள்' என்று அவர் ஆணையிட்டார். அவ்வளவே: இருதிறந்தாரும் சண்டையிட்டனர். எதிர்பாராத இந் தத் தாக்குதலைக் கண்டு பிரிட்டன் படை வீரர்களும் தள பதியும் திகைப்புற்றனர். பிரிட்டன் வீரர்கள் கடற் கரையை நோக்கி ஓடினர். துருக்கி வீரர்கள் அவர்களைத் துரத்திச் சென்றனர். ஆனால் அவர்கள் மேலும் தொடர்ந்து வராத நிலையில் கரையிலிருந்த படகுகளில் இருந்தபடியே பிரிட்டன் பீரங்கிகள் முழங்கின. தொடர்ந்து போர் நடைபெற்றது. ஆயினும் எந்த வகை யான முடிவும் ஏற்படவில்லை.

இடைவேளை

போரில் வெற்றி தோல்வி ஏற்படவில்லையாதலால், இறந்து கிடந்தவரை அப்புறப்படுத்துவதற்காக இரு திறத்தாரும் சிறிது நேரம் போரை நிறுத்தினர். முஸ்தபா கையில் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு பிரிட்டிஷ் படைகள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று, இறந்து கிடந்த வீரர்களை அடக்கம் செய்தார்; எண்ணற்ற பிணங் களைக் குழிதோண்டிப் புதைத்தார். அவரைப் பிரிட்டன்

படைவீரர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிய வில்லை. அதைப் பயன்படுத்துக்கொண்டு அவர், அவர் களிடம் இடையிடையே பிரெஞ்சு மொழியில் பேசினர். அவருடைய சுறுசுறுப்பையும் புன்முறுவல் தவழ்ந்த முகத் தையும் கண்ட அவ்வீரர்கள் 'இவர் ஒரு துருக்கியரா?' என்று கேட்டு ஐயுற்றனர். பிணங்களைக் குழி தோண்டிப் புதைக்கும்பொழுது பிரிட்டிஷாருடைய பாசறையில் என்னென்ன நடைபெறுகின்றன என்பதைக் கவனித் துக்கொள்ள அவர் தவறவில்லை.

பிரிட்டன் தோல்வி

மீண்டும் போர் தொடங்கியது. பிரிட்டன் படைகள் பெருவாரியாகக் காலிபோலி தீவில் கொண்டு வந்து இறக்கப்பட்டன. கரையோரமாக உள்ள பகுதிகளைப் பிரிட்டன் படைகள் பீரங்கிக்கு இரையாக்கி மகிழ்ந்தன. மூன்று திங்களாகப் போரிட்டும் முடிவேற்படவில்லை. பிரிட் டிஷ் படைவீரருள் பலர் இறந்தனர். ஆயினும், கான்ஸ் டான்டிநோபிளைக் கைப்பற்ருமல் திரும்புவது சிறப்பா காது என்று பேரரசு எண்ணியது; எனவே, மேலும் படைகளை அனுப்பியது; போதிய படை வசதிகளை இழந்துவிட்ட துருக்கியை இனி எளிதில் கைக்கொள்ள லாம் என்று கருதியது; கான்ஸ்டான்டிநோபிளைக் கைப் பற்றிவிற்டோம் என்று எண்ணி இருமாந்தது. இந்நிலை யில் செருமனியிலிருந்து துருக்கிக்குத் துணையாகப் பீரங் கிப்படைகள் வந்தன; அப்போதுதான் பிரிட்டன் படை கள் திகிலடையத் தொடங்கின; இனிச் சிறிதளவும் முன்னேற முடியாது என்பதை அறிந்தன. எனவே, பிரிட்டிஷ் வீரர்கள் கப்பல்களிலேறித் திரும்பினர். இப் போரில் முப்பதாயிரவர் இறந்தனர்; எண்ணுயிரவர் காணு மல போயினர்.

வரவேற்பும் வெறுப்பும்

தன்னலங் கருதாது நாட்டுப்பற்று ஒன்றே துணையாகப் பெரும்போர் செய்து, பிரிட்டிஷ் படைகளைப் புறங்காட்டிச் செல்லுமாறு செய்த முஸ்தபாவைக் கான்ஸ்டான்டிநோபிள் செய்தித்தாள்கள் பலபடப் பாராட்டின; மயிரிழையில் அவர் உயிர் தப்பிய நிலைகளை யெல்லாம் பாராட்டி எழுதின; அவருடைய அறிவின் திறத்தையும், வரும் பொருள் உணரும் ஆற்றலையும், வருமுன் காக்கும் பண்பையும் சிறப்பித்துத் தெரிவித்தன. இராணுவத் தலைவர்கள் முஸ்தபாவிடம் பெருமதிப்புக் கொண்டனர். தாங்கள் பின்பற்றுதற்குரிய பல நல்ல பண்புகளின் உறைவிடம் முஸ்தபா என்று உணர்வுடைய நல்ல மக்கள் உணர்ந்தனர். ஆனால், அன்வர் பாஷா முஸ்தபாவைப் போற்றவில்லை; புகழவில்லை; அவரை வெறுத்தார். அரசாங்க ஆட்சியைத் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு, தியார்பெகிர் என்றும் ஊரில் உள்ள இராணுவத்தின் தலைவராக அவரை நியமித்து அனுப்பினார். தியார்பெகிர் என்பது கான்ஸ்டான்டிநோபிளுக்கு மேற்கே 555 கல் தொலைவில் உள்ளது.

பிரிட்டன் சூழ்ச்சி

ஆசியாவில் உள்ள சிரியா, துருக்கியைச் சேர்ந்தது. சிரியாவைக் கைப்பற்ற வேண்டுமெனப் பிரிட்டன் எண்ணியது; எனவே, துருக்கிக்குச் சொந்தமான நாடுகளிலெல்லாம் துருக்கிக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் திட்டமிட்டது. தளபதி டி. இ. லாரன்ஸ் என்பவர் இச்சூழ்ச்சிகட்கெல்லாம் தலைவராக விளங்கினார். லாரன்ஸ அரேபியாவில் துருக்கியர்க் கெதிராகப் பிரசாரம் செய்தார்; அவர்களுக்கு நன்மை செய்வதுபோன்று நடித்து, துணைபுரிவதுபோன்று போர்க்குரிய ஆயுதங்களை அளித்து, அவர்

களைத் துருக்கியருக்கு எதிராகப் போரிடுமளவுக்குச் செய்துவிட்டார். அவர் அரேபியர்களுடைய பழக்க வழக்கங்களையும் இயல்புகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்தது இப்போது பெரிதும் பயன்பட்டது. அந்தச் சேனையின் துணைகொண்டு அரேபியர்கள் மக்கா நகரைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டனர். ஹுஸேன் என்பவர் மக்கா துருக்கியருக்கு உட்பட்ட நகரம் இல்லை என்றும், மக்காவின் மன்னர் தாம்தாம் என்றும் விளம்பரப்படுத்திக்கொண்டனர். அவருடைய இந்தச் செயலுக்குப் பிரிட்டிஷார் துணை இருந்தனர். மக்காவைக் கைப்பற்றிக்கொண்ட அரேபியாகள் மற்றொரு புண்ணிய நகரான மதீனாவையும் கைப்பற்றிக்கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

மதீனா நகரம் ஹெட்ஜாஸ் புகைவண்டித் தொடர் வந்து முடியும் இடமாகும். மதீனாவுக்குத் தெற்கே புகைவண்டிப் போக்குவரத்து இல்லை. இத் தொடர் வடக்கே டமாஸ்கஸிலிருந்து புறப்பட்டு, செங்கடல் ஓரமாக ஆயிரக் கணக்கான கல் தொலைவு வந்து மதீனாவில் முடிந்தது. இத் தொடரை அறுத்துவிட்டால் அரேபியாவுக்கும் துருக்கிக்கும் தொடர்பில்லாமல் போகும். இப்படிச் செய்யவேண்டுமென்பது பிரிட்டிஷாரின் கருத்தாகும். துருக்கியின் நினைவைப் பலவகைகளில் ஈர்க்க வேண்டும் என்று பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்வதை அறியாத அன்வர், துருக்கிப் பேரரசின் பெயரைக் காப்பாற்ற அரேபியாவையும், ஹெட்ஜாஸ் புகைவண்டித் தொடரையும் பகைவர்கள் கைக்கொள்ளாதபடி காத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். ஆனால், அன்வரின் கருத்தை முஸ்தபாவும் செருமானிய இராணுவத் தளபதிகளும் தவறென்று சுட்டினர். அன்வர், விடாப்பிடியாகத் தம் எண்ணப்படியே எல்லாம் நடைபெற வேண்டும்

என்றார். வேறு வழியில்லாமல் பகைவர் முற்றுகையிட்டிருந்த பகுதிகட்கெல்லாம் படைகள் அனுப்பப்பட்டன. சிறிது காலத்திற்கு உள்ளாகவே மெசபொடேமியாவிலுள்ள பாக்தாத் நகரம் பிரிட்டிஷார்க்கு உரியதாயிற்று. அன்வரின் எண்ணங்கள் பாழாயின. எவ்வாறேனும் பாக்தாதை மீண்டும் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்று அன்வர் வற்புறுத்தினர்; தளபதிகள் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. எனவே, துருக்கியரும் செருமானியரும் கலந்த 'ஆசியப் படை' ஒன்று பாக்தாதை மீட்பதற்காக அனுப்பப்பட்டது. இதற்கு ஒரு செருமானியர் தளபதியாக இருந்தார். முஸ்தபா அவருக்குத் துணையாகச் சென்றார்.

முஸ்தபாவுக்கு ஓய்வு

செருமானிய தளபதி அன்வருடைய விருப்பப்படி நடப்பவர்; அன்வர் தவறி நடக்கின்றார்-அறியாமையால் அவசர உணர்வால் பல காரியங்களைச் செய்கின்றார் என்பவற்றை அறிந்தும், அவருடைய தவறான செயல்களுக்குத் துணையாக நின்றார். கண்டித்துத் திருத்தவேண்டும் என்ற எண்ணமே அவருக்கு ஏற்படவில்லை. இதனால், முஸ்தபாவுக்கு அவரைக் கண்டாலே வெறுப்பு மிகுந்தது. பாக்தாத் நகரை மீண்டும் கைப்பற்ற எண்ணிச் செய்யும் முயற்சி சிறந்ததன்று என்றும், அதனால் துருக்கிக்கு எண்ணற்ற தீங்குகள் நேரும் என்றும் முஸ்தபா எண்ணினார்; தம்முடைய எண்ணங்களைத் தம்மோடு பணியாற்றிய இராணுவத் தளபதிகளிடம் கூறினார்; எல்லோரும் ஒன்று நின்று அன்வரின் கருத்துக்கு எதிர்ப்புக் கூறவேண்டுவதன் இன்றியமையாமையை விளக்கினார்.

முஸ்தபாவின் எதிர்ப்பு முயற்சிகள் அன்வருக்குத் தெரிந்துவிட்டன. அவரைக் குற்றம் சாட்டி விசாரிக்கும்

அளவுக்கு அரசாங்கத்துக்குத் துணிவு பிறக்கவில்லை; எனவே, அவருக்கு உடல் நலமில்லை என்றும், அதனால் அவர் தம் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு அலெப்போ என்ற நகரத்தில் ஓய்வு கொள்ளுமாறும் ஆணையிட்டது. முஸ்தபா, தம் படைத்தலைமைப் பதவியை ஒப்புக்கொடுத்துவிட்டுக் கான்ஸ்டான்டிநோபிளுக்குத் திரும்பிவிட்டார்; அங்குச் சிறிது காலம் தம்முடைய தாயாருடனும் தங்கையுடனும் மகிழ்ச்சியாய் இருந்தார்.

ஓய்வுக்காலத்தில் முஸ்தபா தம்மிடம் வருவோர் போவோரிடமெல்லாம் அன்வரின் சர்வாதிகாரப் போக்கையும், திறமையற்ற செயல் முறைகளையும், செருமானியத் தளபதிகளுக்குத் துருக்கிய இராணுவத்தில் இடம் கொடுத்த அடாத செயலையும் எடுத்துக்கூறினார். இதனால் மக்களுக்கு அன்வரிடம் வெறுப்புண்டாகியது. அன்வரை விரும்பாதவர் அனைவரும் முஸ்தபாவை விரும்பினர்; அவரைத் தலைவராகக்கொண்டு பின்பற்ற முனைந்தனர்; முஸ்தபாவின் செல்வாக்கு வளருவதைக் கண்ட அன்வர் வருந்தினர்; எப்படியாவது அவரைத் தலைநகர்க்கு அப்பால் அனுப்பிவிட வேண்டும் என்று எண்ணினர்.

1918–ஆம் ஆண்டில் துருக்கியின் இளவரசரான **வஹித்தீன்** செருமனிக்குச் சென்றார். அவரோடு அவருக்குத் துணையாகப் பெரும்படை ஒன்றும் சென்றது. அப்படையில் அன்வர் முஸ்தபாவையும் சேர்த்துவிட்டார். முஸ்தபா தலைநகரில் இருந்தது அவருக்குத் தொல்லையாக இருந்ததல்லவா? அன்வரையும், தலாத் பாஷாவையும் இளவரசர் உள்ளூர வெறுக்கின்றார் என்பதை முஸ்தபா தெரிந்துகொண்டார். அவ்விருவரிடமும் முஸ்தபாவுக்கு வெறுப்புண்டு என்பது இளவரசருக்குத் தெரியும் ஆயினும் ஒருவரும் மனதாரத் தங்கள் கருத்துக்களைப்பரிமாறிக் கொள்ளவில்லை. ஒருவரையொருவர் நம்ப மறுத்தனர்.

செருமனியச் செலவு முடிந்தது. முஸ்தபா தலைநகர்க்கு வந்தார். அங்கு அவர் கடுமையான நோயினால் படுத்த படுக்கையாகிவிட்டார். நண்பர்களுடைய தூண்டுதலின் படி முஸ்தபா ஆஸ்திரியாவில் உள்ள வியன்னாவுக்கும், 'செக்' நாட்டிலுள்ள ஓர் ஊருக்கும் சென்று பிணியைப் போக்கிக்கொண்டார்.

சுல்தானுக்கு நல்லுரை

துருக்கியின் சுல்தான் ஐந்தாம் முகம்மது 1918-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் மூன்றாம் நாள் இறந்துவிட்டார். இளவரசரான வஹித்தீன், சுல்தான் ஆறாவது முகம்மது என்னும் பெயரில் அரசாட்சியை ஏற்றுக்கொண்டார். முஸ்தபா புதிய சுல்தானைக் கண்டார். சுல்தானும் முஸ்தபாவும் பழைய நண்பர்கள் ஆதலின், அவர்கள் நட்பு மேலும் வளர்ந்தது. அதனைப் பயன்படுத்திக்கொண்டு முஸ்தபா, சுல்தானுக்கு நல்லுரைகள் சில கூறத் தொடங்கினார்; சுல்தானே நேரில் இராணுவப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அன்வரை விலக்கிவிட வேண்டும் என்றும், செருமனியத் தளபதிகளை அனுப்பி விடவேண்டும் என்றும், தம்மை, இராணுவத்தின் தலைவராக நியமிக்க வேண்டும் என்றும் கூறினார். செருமனியின் உறவிலிருந்து விலகி, நேச நாடுகளோடு உறவுகொள்ளும் வகையில் சமாதான உடன்படிக்கையும் செய்து கொள்ளவேண்டும் என்று முஸ்தபா வற்புறுத்தினார். ஆனால், சுல்தான் இவற்றுள் எதனையும் ஏற்றுக்கொள்ள வில்லை; அன்வரின் விருப்பப்படியே நடந்துவந்தார்.

அன்வரின் அச்சம்

முஸ்தபாவின் எண்ணங்களையும் செயல்களையும் கண்ட அன்வர் அச்சம் கொண்டார்; அவரை எங்காவது

தொலைவாக அனுப்பிவிடுவதுதான் தம்முடைய தற்காப்புக்கு ஏற்றது என்று எண்ணினர். சுல்தானிடம் கூறித் தம் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டார்.

ஒரு நாள் சுல்தானுடைய அவைக்கு முஸ்தபா வரவழைக்கப்பட்டார். செருமானிய இராணுவ வீரர்கள் சுல்தான் அவையில் மிடுக்காக நிற்பதைக் கண்டு முஸ்தபா மனம் நொந்தார். அவையில் அன்வர், அவரைச் சிரியாவின் படைத்தளபதியாக நியமித்திருப்பதாகவும், சிரியாவைப் பகைவரிடம் விட்டுவிடாமல் காக்குந்திறன் அவருக்கு இருப்பதாகத் தாம் நம்புவதாகவும், உடனே அங்குச் சென்று பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினர். கமால் சிரியாவின் படைத்தளபதியானர்.

போரும் அமைதியும்

1918-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 19-ஆம் நாளன்று பிரிட்டிஷ் படைகள் துருக்கியரைத் தாக்கத் தொடங்கின. துருக்கிப் படைகள் பின்னடைந்தன; சுமார் 250 கல் தொலைவுக்கு அப்பால் அலெப்போ என்னும் ஊரை அடைந்தன. இப்படைகளின் தலைமைப் பதவியைத் முஸ்தபா ஏற்றுக்கொண்டார். பிரிட்டிஷார் தொடர்ந்து துருக்கியரைத் துரத்திவந்தனர். இந்த வேளையில் அரேபியர்கள் அலெப்போ நகரில் நுழைந்துவிட்டனர். இருதிறத்தார்க்கும் கைகலப்பு நடந்தது. பிரிட்டிஷாரும் அலெப்போவில் நுழையத் தொடங்கினர். மக்களும் துருக்கியர்க்கு விரோதமாகக் கிளம்பினர். உடனே முஸ்தபா அங்கிருந்து கிளம்பிப் பாதுகாப்பு மிகுந்த இடத்திற்குத் தம் படையுடன் சென்றார்.

இந்நிலையில் துருக்கி அரசு பிரிட்டிஷாருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டது. இதனால் துருக்கியிலிருந்த எல்லாச் செருமானியர்களும் செருமனிக்குத் திரும்பினர். சிரியா போர்முனையில் துருக்கிப் படைகளின் தலைமைத் தளபதியாக இருந்த வான் லிமான் சாண்டர்ஸ் என்பவர் தம் பொறுப்பை முஸ்தபாவிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

5. முஸ்தபாவின் புரட்சிச் செயல்கள்

பிரிட்டிஷார் ஆதிக்கம்

முத்ரோஸ் உடன்படிக்கைக்குப்பின்னர்ப் படைகளைக் கலைத்துவிட்டு முஸ்தபா ஓய்வு கொண்டார். அப்போது அவருக்குக் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அவசர அழைப்பொன்று கிடைத்தது. இஜ்ஜெத் பாஷா என்பவரே முஸ்தபாவை விரைந்து வருமாறு அழைத்தார். இவர் சுல்தான் ஆட்சிக் குழுவின் தலைமை அமைச்சராய் இருந்தார். சுல்தானுக்கும் இவருக்கும் மனக் கசப்பு ஏற்பட்டுவிட்டதால், சுல்தான் இவரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு, பிரிட்டிஷாருக்கு மிகவும் வேண்டிய டெவேபிக் பாஷாவைத் தலைமை அமைச்சராக நியமிக்க எண்ணினர். இவ்வாறு செய்யப்படுமாயின், பிரிட்டிஷாரின் ஆதிக்கம் மிகுதிப்பட்டுவிடுமே என்றஞ்சி இஜ்ஜெத் பாஷா முஸ்தபாவை விரைந்து வருமாறு வேண்டினர். முஸ்தபா தம் பொறுப்புக்களை வேருெருவரிடம் ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டார்.

கான்ஸ்டான்டிநோபிளுக்கு வந்த முஸ்தபா நேசநாட்டினரின் ஆதிக்கத்தில் துருக்கிப் பேரரசின் தலைநகரம் பணிந்து கிடந்ததைக் கண்டார். டார்டனெல்ஸ் நீர்ச்சந்தி ஓரமாயுள்ள சிறப்புடைய எல்லாக் கோட்டைகளையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். தலைநகரின் இராணுவமும் பிற அமைப்புக்களும் அவர்களுடைய ஆணைப்படியே இயங்கின. இளைஞர் இயக்கம் சட்ட அமைப்புக்கு முரணுன ஒன்று என்று கூறிக் கலைக்கப்பட்டது. அன்வர்,

தலாத், ஜமால் ஆகிய மூவரும் வேற்று நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

புதிய தலைமையமைச்சர் டெவேபிக் பாஷாவையும் சுல்தான் நெடுங்காலம் பதவியில் இருக்க விடவில்லை; அவரை விலக்கியதோடு பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டார்; நேச நாடுகளில் பிரிட்டிஷாரே எல்லா வகைகளிலும் வலுப்பெற்றிருந்ததை அறிந்து அவர்களோடு உறவுகொண்டார்; துருக்கியைக் காப்பாற்ற வேண்டுமென்னும் அடிப்படையில் செய்யப்படும் தம்முடைய ஒவ்வொரு செயலும் சரியானதே என்றும் கருதினார். பின்னர்ச் சுல்தான், தம் விருப்பங்கட்கெல்லாம் இணங்கி நடந்துகொள்ளக்கூடிய தாமாத் பெரீத் பாஷாவைத் தலைமை அமைச்சராக்கினார்.

தளபதி அரீப்

தளபதி அரீப் என்பவர் சிறந்த வீரர்; செருமனியில் இராணுவப் பயிற்சி பெற்றவர்; முஸ்தபாவின் அன்புக்கும் நட்புக்கும் உரியவர். இருவரும் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்திருந்தனர். கலைத்துறை முதலிய பல துறைகளிலும் இருவர் சுவைப்புத் தன்மையும் ஒரேமாதிரியாக இருந்தது. அதனால்தான் அரீப்பிடம் முஸ்தபா அன்பாக இருந்தார். ஒருவர் செய்ய வேணடுமென்பதை இன்னொருவரும் எண்ணியிருப்பார். சில வேளைகளில் ஒரே கருத்துக்கள் இருவரிடமிருந்து ஒரே நேரத்தில் வெளியாகும். முஸ்தபா தம்முடைய உண்மை நண்பரான அரீப்பின் துணை கொண்டு துருக்கியின் நல்ல எதிர்காலத்துக்காகப் பாடுபடவேண்டும் என்று எண்ணினார்.

இரகசிய அமைப்புக்கள்

கான்ஸ்டான்டிநோபிலிளிருந்த நேசநாடுகள் ஐயம், பொறாமை முதலிய தீய பண்புகளின் காரணமாகத்

தம்முள் போரிட்டுக்கொண்டன. துருக்கியிடமிருந்து சலுகைகள் ஏதேனும் பெறவேண்டுமென்பதில் ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதியும் முனைந்தனர்; அதனால் அவர்கள் சுல்தானைப் புகழத் தொடங்கினர்; துருக்கியிடம் அன்பாகவும் முறையாகவும் நடந்துகொண்டனர். இச்செயல் துருக்கி இளைஞர்களிடையே ஒரு நல்லுணர்ச்சியை எழுப்பிவிட்டது. "நம்மிடம் ஆற்றல் உள்ளது. நாம் அதை உணராமல் இருக்கிறோம். நம்மிடம் ஆற்றல் இருப்பதால்தான் நேசநாடுகளின் பிரதிநிதிகள் நம்மைப் புகழ்கின்றனர்; நம்மிடம் அன்புடன் நடந்துகொள்கின்றனர். எனவே, ஏன் நாம் இவர்களை எதிர்த்து உரிமையுள்ள துருக்கியை நிறுவக்கூடாது?" என்று ஒவ்வொரு துருக்கிய இளைஞனும் எண்ணத் தொடங்கினான்.

ஆனால், கான்ஸ்டான்டிநோபிள் அதற்கெல்லாம் ஏற்ற இடமன்று. எனவே, பிரிட்டிஷாருடைய செல்வாக்கு இல்லாத பகுதிகளாகிய அனடோலியா மாநிலத்தில் இம்முயற்சிகளைச் செய்வதென்று துருக்கிய இளைஞர்கள் முடிவு செய்தனர். அதன் விளைவாக எங்கும் இரகசிய அமைப்புக்கள் தோன்றின. கான்ஸ்டான்டிநோபிளில் மட்டும் பன்னிரண்டு 'இரகசிய சங்கங்கள்' தோன்றின. முன்னர் இருந்த இளைஞர் இயக்க அமைப்புக்களெல்லாம் இப்போது இரகசிய அமைப்புக்களாயின. இவ்வமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் வேலை யாது? நேசக் கட்சியினர் எங்கெல்லாம் போர்க் கருவிகளைக் குவித்து வைத்துள்ளனரோ, அங்கெல்லாம் சென்று அவற்றில் சிலவற்றை எவர்க்கும் தெரியாமல் கொண்டு வந்து இரகசிய அமைப்புக்களிருந்த பகுதிகளுக்கு அனுப்புவதே இவர்களது தலையாய வேலையாகும். போர்க்கருவிகள் இல்லாமல், மிகுதியான போர்க்கருவிகள் கொண்ட நேசநாட்டினரை வெல்லுதல் அரிது என்பதால்தான்

இத்தகைய முயற்சி செய்யப்பட்டது. முஸ்தபா இவ்வமைப்புக்களின் தலைவராக விளங்கினார்.

கவர்னர்-ஜெனரல் பதவி

சின்ன ஆசியாவில் உள்ள அனடோலியாவில் கலகம் எழுந்தது. அனடோலியாவில் அர்மீனியர், துருக்கியர், குருதியர் முதலிய பல இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் பொருமை காரணமாக உள்நாட்டுக் கலகம் தோன்றியது. இக்கலகத்தைக் கட்டுப்படுத்த முஸ்தபா வரவழைக்கப்பட்டார். அரசாங்கம் முஸ்தபாவை இராணுவக் காப்பாளராகவும், கிழக்கு மாநிலங்களின் கவர்னர் ஜெனரலாகவும் நியமித்து அனடோலியாவுக்கு அனுப்பியது. துருக்கிய அரசாங்கத்தினராலும் நேசக் கட்சியினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பிரதிநிதியாக முஸ்தபா அனடோலியாவுக்குச் சென்றார்.

கிரேக்கர் செயல்

தம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளை எவ்வாறு பகிர்ந்துகொள்ளுவது என்பது பற்றி வல்லரசுகள் பாரிஸ் சமாதான மாநாட்டில் பேசின. அப்போது கிரீஸ் நாட்டுச் சர்வாதிகாரியான வெனிஜலோஸ் என்பவன் துருக்கியிடமிருந்த ஸ்மிர்னாவைக் கிரேக்கருக்குக் கொடுத்து விடவேண்டும் என்று மன்றாடினான். அதனால் நேசக்கட்சியினர் கிரீஸிற்கு ஸ்மிர்னாவைக் கைக்கொள்ளும் உரிமையை வழங்கினர். துருக்கி அரசாங்கமும் இதற்கு இணக்கம் தெரிவித்தது. தலைமை அமைச்சர் தாமாத் பெரீத் பாஷா கிரேக்கரை வரவேற்றுச் சிறப்பிக்குமாறு ஸ்மிர்னா கவர்னருக்குச் செய்தி அனுப்பினார்.

1919–ஆம் ஆண்டு மே திங்கள் 14–ஆம் நாளன்று ஸ்மிர்னா துறைமுகத்தில் கிரேக்க தளபதியைப் பாஷா

விருப்பப்படி ஸ்மிர்ஞ கவர்னர் கண்டு பேசினுர். "கிரேக்கர்களை மக்கள் வெறுக்கின்றனர். படிப்படியாக ஸ்மிர்ஞவைக் கைப்பற்ற எண்ணுவதுதான் தகுந்தது. உடனே கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினுல், கொதிப்படைந்துள்ள மக்கள் சக்தி என்னென்ன செய்யுமோ தெரியவில்லை. மக்கள் கொதித்து எழுவாராயின், அவர்களை அடக்குவதற்கு இப்பொழுது ஸ்மிர்ஞவில் படைகள் இல்லை. எதையும் எண்ணிச் செய்வதே நல்லது. அங்கு மாலுமிகளை எனக்கு உதவியாகக் கொடுத்தால் உங்களுக்குத் துணையாக நான் நிற்க முடியும்," என்று ஸ்மிர்ஞவின் கவர்னர் தெளிவாக அத்தளபதிக்குக் கூறினுர். அத்தளபதி எதற்கும் இணங்காமல் உடனடியாக ஸ்மிர்ஞவில் நுழையுமாறு படைவீரர்களை ஏவினுர்.

கிரேக்க வீரர்கள் வெற்றி முழக்கமிட்டுக்கொண்டு சென்றனர். அவர்தம் தளபதி இறுமாந்து சென்ருர். முன்னும் பின்னும் அவர்களுக்குப் பாதுகாவலாகப் பீரங்கிப்படைகள் சென்றன. இந்த வேளையில் எங்கிருந்தோ வெடிகுண்டு ஒன்று கிரேக்கப் படைவீரர்களின் ஊர்வலத்தில் வந்து விழுந்தது. அவர்களுக்குச் சினம் பெருகியது. அவர்களுடைய பீரங்கிகள் முழங்கின. குருதி ஆறு ஓடியது. எண்ணற்ற துருக்கி வீரர்கள் சிறைப்பட்டனர். அவ்வீரர்கள் ஸ்மிர்ஞவின் தெருக்களின் வழியே இழுத்துச் செல்லப்பட்டனர்; வழியில் கிரேக்கர்களால் பல கொடுமைகளுக்கு உள்ளாயினர். தெருக்களிலெல்லாம் பிணநாற்றம் மிகுந்து ஸ்மிர்ஞவின் கவர்னர் உட்பட இருபதினுயிரம் துருக்கியர் கைதுசெய்யப்பட்டுக் கிரீசுக்கு அனுப்பப்பட்டனர்.

தலைநகர் மாற்றம்

1919-ஆம் ஆண்டு மே திங்கள் 19-ஆம் நாளன்று முஸ்தபா சாம்சூனுக்கு வந்து சேர்ந்தார். சாம்சூன் என்பது ஒரு துறைமுகப்பட்டினம். இது கான்ஸ்டான்டிநோபிளுக்கு நேர் கிழக்காகவும், அனடோலியா மாநிலத்தின் வடக்காகவும், கருங்கடலின் தெற்காகவும் அமைந்திருந்தது. இங்கிருந்த மக்கள் முஸ்தபாவைக் கண்டதும் மகிழ்ந்தனர்; தங்களை நேசநாடுகளின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றக்கூடிய ஒருவரைக் கடவுள் அனுப்பிவிட்டதாகக் கருதினர்; முஸ்தபா அடியெடுத்துவைத்து நடப்பதை இமைக்காமல் கண்டனர்; அவர் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் பல வீர வரலாறுகளைக் கூறுவதாகக் கருதினர். சுருங்கக் கூறின், முஸ்தபா, தங்களை அமைதியுடன் வாழ்விக்கவந்த தெய்வம் என்று எண்ணி வழிபட்டனர் என்னலாம்.

கப்பலிலிருந்து இறங்கியதும் அவர் அரசாங்க மனைக்குச் சென்றார். அப்பொழுதுதான் ஸ்மிர்னவைக் கிரேக்கர்கள் கைப்பற்றிக்கொண்டது அவருக்குக் கூறப்பட்டது. அவர் மகிழ்ந்தார்; அதனைக்கொண்டே மக்களிடையே பிரசாரம் செய்ய எண்ணினார்; ஸ்மிர்னவைக் கிரேக்கர்களிடம் ஒப்புவிக்குமாறு நேசநாடுகள் கூறினாலும், சுல்தான் அவ்வாறே செய்தது பிழையல்லவா என்பன போன்ற கேள்விகளைக் கேட்பதன் மூலம் மக்களை உணர்ச்சிகொள்ளச் செய்தார்; இராணுவ வீரர்களது அன்பைப் பெறுவது இன்றியமையாதது என்று கருதிச் சிதறிக்கிடந்த இராணுவ அமைப்புக்களின் தளபதிகளுடன் தந்திப் போக்குவரத்து வைத்துக்கொண்டார்; 'பரம்பரைப் புகழ்கொண்ட-நாட்டுப்பற்று மிகுதியாகக் கொண்ட சமயத்துறையில் சிறந்தோங்கும் துருக்கியைப்பிறருடைய ஆட்சியில் விட்டுவிடாமல் காப்பதுதான் துருக்கியரின்

தலையாய கடமையாகும்' என்று ஒவ்வொரு வீரனிடமும் கூறினர். இராணுவத் தலைவர் உதவி தமக்குக் கிடைக்கும் என்னும் உறுதி முஸ்தபாவுக்கு இருந்தது.

சாம்சுன் பட்டினம் பிரிட்டிஷார் ஆட்சியில் இருந்த தல்லவா? அங்குப் பிரிட்டிஷாரின் ஒற்றர்கள் நிரம்பி யிருந்தனர். பிரிட்டிஷார் பொன்னை வாரியிறைத்துப் பல துருக்கியர்களை நாட்டுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுத் தினர். பிரிட்டிஷாரின் ஒற்றர்கள் முஸ்தபாவின் செயல் முறைகளைக் கண்காணிக்கத் தொடங்கினர். எனவே, அவர் தொடர்ந்து சாம்சுனிலேயே தலைமை அலுவல கத்தை வைத்துக்கொள்ள விரும்பவில்லை; அதற்குத் தெற்கே உட்பகுதியிலிருககும் **அமேஸ்யா** என்ற ஊருக் குத் தலைமை அலுவலகத்தை மாற்றிக்கொண்டார்.

பதவிகள் பறிபோதல்

முஸ்தபா தம்முடைய கடமைகளை நன்ருகச் செய்வ தற்கு ஏற்ற இடமாக அமேஸ்யா இருந்தது. மாநிலத் தின் 'சிவில்' அதிகாரிகளுடன் அவர் கவர்னர் ஜெனரல் என்ற முறையில் தொடர்பு கொண்டார்; எல்லா ஊர்களி லும் **தேசிய சங்கங்களை** ஏற்படுத்த வேண்டும் என்றும், சங்கங்கள் இருந்து அழிந்த இடங்களிலும் புதிய சங்கங் களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்; இது தொடர்பாக அவ்வப்போது உள்ள நிலைகளை உடனுக்குடன் தமக்குத் தெரிவித்தல் வேண்டும் என்று அறிக்கை விடுத்தார்; தம்முடைய இச்செயல்களுக் கெல்லாம் சுல்தானுடைய ஒப்புதல் உள்ளது என்றும் தெரிவித்தார்.

''ஸ்மிர்ஞவைக் கிரேக்கர்கள் கைப்பற்றிக்கொண்டது அறம் தவறிய செயல். அவ்வாறு கைப்பற்றிக்கொள்ள இசைவளித்தது துருக்கியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது

போலாகும். கிரேக்கர் வசமுள்ள ஸ்மிர்னுவிலும், பிறபகு தியிலும் நாட்டின் உண்மைக் குடிமக்களான துருக்கியர் கொடுமையாக நடத்தப்படுவது ஆண்டவனுக்கே வெறுப்பை அளிக்கும்," என்று கண்டனத் தீர்மானங்க ளைத் தேசிய சங்கங்களில் நிறைவேற்றி, அவற்றின் நக லைச் சுல்தானுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கவேண்டும் என்றும் முஸ்தபா கூறினர்.

எல்லா ஊர்களிலும் தேசிய சங்கங்கள் தோற்றுவிக் கப்பட்டன; கூட்டங்கள் கூடின; தீர்மானங்கள் நிறை வேறின. சுல்தானுக்கும் வல்லரசுகளுக்கும் அவை அனுப்பப்பட்டன. சுல்தான் தந்திகளைக் கண்டு பதறிப் போனர். சுல்தானை ஆட்டுவிக்கும் வல்லரசுகள் உடனடி யாக முஸ்தபாவைத் திரும்ப அழைக்குமாறு பணித்தன. முஸ்தபா தேடப்பட்டார். அவரைச் சாம்சுனில் காண வில்லை; அமேஸ்யாவிலும் காணவில்லை. எல்லோர் முகங் களிலும் 'முஸ்தபா எங்கே?' என்ற வினக்குறியே நின்றது. இறுதியில் எர்செரூம் என்னும் நகரில் அவர் இருப்பதாகத் தெரியவந்தது. திரும்பி வந்துவிடுமாறும், ஓய்வளிப்பதாகவும், அதற்கு ஒப்ப மனமில்லாவிட்டால் வேறு எந்த ஊருக்காவது சென்று கிளர்ச்சி செய்யாமல் இருக்குமாறும் கடிதம் போக்கினர். கான்ஸ்டான்டி நோபிளுக்கு அவர் வந்து விடவேண்டுமென்பது சுல்தா னுடைய விருப்பம் என்று முஸ்தபாவுக்குத் தலைமை யமைச்சர் தமாத் பெரீத் பாஷாவால் தந்திகள் அனுப் பப்பட்டன. முஸ்தபா, தம்மால் எங்கும் வரவோ செல்லவோ முடியாதென்றும், அனடோலியாவிலேயே இருக்க விரும்புவதாகவும், இராணுவத்தில் தமக்குள்ள பொறுப்புக்களையெல்லாம் ஒழித்துவிடுமாறும் வேண்டித் தந்திகள் அனுப்பினர். இராணுவத் தொடர்பான

எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் முஸ்தபா விலக்கப் பட்டுவிட்டதாகச் சுல்தானிடமிருந்து தந்தி வந்தது.

மக்களைத் திரட்டல்

அனடோலியா முழுதும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தார்; கிராமங்கள்தோறும் சென்று அங்குள்ள மக்களைத் திரட்டி, அவர்களுக்கு விளங்கும் வகையில் துருக்கியின் நிலையை எடுத்துச் சொன்னார்; அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் வகைப்படுத்திக் கூறினார். காரில் சென்றும், கார் இல்லாவிட்டால் குதிரையில் சென்றும், குதிரையும் இல்லாவிட்டால் நடந்து சென்றும் முஸ்தபா மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டி வந்தார்.

“துருக்கி நாடு உலக நாடுகளிடையே பழம் பெருமை வாய்ந்த நாடு. இத்தகைய சிறப்புமிக்க துருக்கிப் பேரரசைத் தம்முள் பங்கு போட்டுக்கொள்ள வல்லரசுகள் முனைந்து நிற்கின்றன. நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் ? துருக்கியை வல்லரசுகள் பங்கு போட்டுக் கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றீர்களா ? நாம் என்ன செய்தாலும் துருக்கியில் எதிர்த்துக் கேட்க ஆள் இல்லை என்று எண்ணி இன்று துருக்கியைத் துண்டாடி வரும் வல்லரசுச் சக்திகளுக்கு நீங்கள் பலியாவதென்று தீர்மானித்துவிட்டீர்களா ?

“என்னருமைத் துருக்கித் தோழர்களே, நாம் இனியும் உறங்குதல் கூடாது. துருக்கி நாட்டுக்குத் தூண் போன்று நாம் விளங்கவேண்டும். தனி ஒரு மனிதனால் எதுவுமே செய்யமுடியாது. அவன் எவ்வளவுதான் வல்லமை பெற்றவனாயிருந்தாலும் உங்களைக் காப்பாற்ற முடியாது. ஆதலால் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து போராட வேண்டும் என்று கூறுகின்றேன். கைகட்டி, கண்களை மூடிக் கடவுளைத் தொழுதுவிட்டால் மட்டும்

போதுமா? இறையன்புக்கு மேலாக நாட்டுப்பற்று இருக்கவேண்டும். **நமக்கென்று நாடு இருந்தால்தான்** நாம் உலகநாடுகளின் முன்னர் மான உணர்ச்சியுடன் உலவமுடியும்" என்று முஸ்தபா மக்களிடையே ஆவேச மாகப் பேசினர்.

மக்கள் முஸ்தபாவின் சொற்பொழிவுகளில் புதைந்து கிடந்த உண்மைகளை உணர்ந்தனர்; போர்க்கோலம் கொள்ளவும் துணிந்தனர். அவர்களை ஒருங்கே சேர்த்து ஒருமுகமாய்ச் செலுத்தும் பொறுப்பு அவரைச் சேர்ந்தது; இதன் பொருட்டு அனடோலியாவின் நடுப்பகுதியில் உள்ள **சிவாஸ்** என்னும் நகரில் மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று விரும்பினர்; சிவாஸில் மாநாடு நடை பெறும் என்றும், ஆபத்தான சூழலில் சிக்கியிருக்கும் துருக்கியைக் காப்பாற்றுவதற்குரிய வழிவகைகள் அம் மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும், ஒவ்வொரு மாவட் டமும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பவேண்டும் என்றும் இராணுவத் தலைவர்கட்கும், எல்லா அதிகாரிகட்கும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன.

சுல்தானின் மிரட்டல்

சிவாஸில் மாநாடு நடக்க இருக்கும் செய்தி சுல்தா னுக்கு எட்டியது. அங்குப் பேசப்பட இருந்த செய்தி களையும் அவர் அறிந்தார். அவ்வளவே: இராணுவ அதிகா ரிகள் உட்பட எல்லா அதிகாரிகட்கும் தந்திகள் பறந்தன. முஸ்தபாவோடு நட்பு வைத்துக்கொள்பவர்கள் கடுமை யான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும், அரசத் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் அறிக்கை கள் அனுப்பப்பட்டன. இதனல் எந்த விளைவும் ஏற்பட வில்லை. நேரடியாக முஸ்தபாவோடு உறவு கொண்டிருந் தவர்கள் இப்போது மறைமுகமாகத் தொடர்பு கொண்

டார்கள். இந்த ஒரு சிறு மாற்றத்தைத்தான் சுல்தானல் செய்ய முடிந்தது.

முதனிலை மாநாடு

சிவாஸில் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் முதனிலையாக ஒரு மாநாடு நடத்திக் காணவேண்டும் என்று முஸ்தபா விரும்பினர். எர்செரூமில் முதனிலை மாநாடு நடைபெறும் என்று எல்லோர்க்கும் அறிவிக்கப்பட்டது 1919-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23-ஆம் நாள் இம் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டிற்குத் துருக்கியின் கிழக்குப் பகுதிப் படைத் தளபதியான கியாசிம் காராபெகிர் பாஷா தலைமை தாங்கினர். இராணுவ அதிகாரிகளும், 'சிவில்' அதிகாரிகளும் ஆசிரியர்களும், மருத்துவர்களும், சமயத் தலைவர்களும் மாநாட்டு மண்டபத்தில் குழுமியிருந்தனர். மாநாட்டின் நோக்கங்களை முஸ்தபா தெளிவாக விளக்கினர். அப்போது, "சுல்தானுக்கு மாருகப் புரட்சி செய்வது நல்லதா?" என்று ஒருவர் கேட்டார். "அந்நியர்களிடம் சிக்கிக்கொண்டு விடுபட முடியாமல் விழித்துக்கொண்டிருக்கும் சுல்தானைக் காப்பாற்றவே இந்தப் புரட்சியை நாம் செய்யப்போகிறோம்," என்று முஸ்தபா உடனே பதில் கூறினர். மாநாட்டில் பலர் பேசினர். எல்லோருடைய அடிப்படைக் கருத்துக்களும் ஒன்ருகவே இருந்தன. புரட்சியின் தலைவராக முஸ்தபா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முயற்சியும் தோல்வியும்

சுல்தான் முஸ்தாபாவை எவ்வாறேனும் கைது செய்துவிட வேண்டும் என்று துடித்தார்; எர்செரூம் மாநாட்டு மண்டபத்திலேயே அவரைக் கைது செய்துவிட ஆணை பிறப்பித்தார். அந்த ஆணையைக் கொண்ட தந்தி

மாநாட்டுத் தலைவர் கியாசிம் பாஷாவிடம் தரப்பட்டது. அவர் சுல்தானின் ஆணையைக் கண்டு வருந்தினார்.

"முஸ்தபாவைக் கைது செய்க."
"மாநாட்டைக் கலைத்து விடுக."

என்பதுதான் தந்தியின் வாசகம். இதனைக் கியாசிம் முஸ்தபாவிடம் படித்துக் காண்பித்தார். "துருக்கியர் அடிமைகளாய் இருக்கவேண்டுமா அல்லது உரிமை யுடையவர்களாக இருக்க வேண்டுமா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்," என்று முஸ்தபா தந்தியைப் படித்துக் கலக்கத்தோடிருந்த கியாசிமுக்குக் கூறினார். முஸ்தபாவைக் கைதுசெய்வதில்லையென்றும் சுல்தானுடைய ஆணைக்கு மதிப்புத் தருவதில்லையென் றும் கூறிக் கியாசிம் தந்தியைக் கிழித்தெறிந்தார்.

மாநாடு மீண்டும மறுநாள் நடைபெற்றது. இம் மாநாடு இரண்டு வாரங்கள் நடைபெற்றது. இறுதியில், "துருக்கி நாட்டைப் பிறர் துண்டாடுவதைத் துருக்கியர் கள் இனியும் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். தேசீய எல்லைக்கு உட்பட்ட துருக்கியை எவராலும் பிரிக்கமுடி யாது. தேசிய உரிமைகளைக் காப்பாற்றும் ஆற்றல் இன் றைய அரசாங்கத்துக்கு இல்லை என்பது உறுதியானல், தற்காலிக அரசாங்கமொன்று அவற்றைக் காப்பாற்ற ஏற் படுத்தப்படும்; தற்காலிக அரசாங்கத்தைத் தேசிய சங்கத்தி னர் தேர்ந்தெடுப்பர்; வெளியார் ஆதிக்கத்தையோ, மேற்பார்வையையோ எந்த விதத்திலும் ஒப்புக்கொள்ளக் கூடாது," என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேறின.

இத் தீர்மானங்களை நடைமுறையில் கொணரவும் இவற்றைச் சுற்றறிக்கையில் வெளியிடவும் ஒன்பதுபேர்

கொண்ட 'தனிக்குழு' அமைக்கப்பட்டது. முஸ்தபாவே இக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநாட்டுத் தீர்மானங்களின் நகல்கள் வல்லரசுகளுக்கு அனுப்பப்பட்டன. அவை மாநாட்டில் தீர்மானித்தபடி சுற்றறிக்கையின் மூலம் மக்களுக்கும் தரப்பட்டன.

சிவாஸ் மாநாடு

1919-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 4-ஆம் நாள் சிவாஸில் மாநாடு நடைபெற்றது. சுல்தானிடம் தமக்கிருக்கும் அரச அன்பைத் தீர்மானம் வாயிலாக மாநாடு முதன்முதலாகத் தெரிவித்துக்கொண்டது. இது நகைச்சுவையாக உள்ளதல்லவா? சுல்தானுககு எதிராகச் செய்யவிருக்கும் செயல்கள் குறித்து ஆராயக் கூட்டப்பட்டுள்ள மாநாட்டின் முதல் தீர்மானம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று முஸ்தபா நினைத்தார். இந்த மாநாடும் பல நாட்கள் நடைபெற்றது. எர்செரூம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில சிறு மாறுதல்களுடன் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டன. சுல்தானுடைய ஆட்கள் மாநாட்டில் குழப்பம் விளைவிக்க வருகின்றார்கள் என்பதை முஸ்தபா அறிந்தார். உடனே மாநாடு கலைக்கப்பட்டது. சுல்தான் ஆட்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

நாட்டு மக்களின் நம்பிக்கைக்குரிய அமைச்சரவையை அமைக்க வேண்டும் என்றும், அதற்காகப் பாராளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் கான்ஸ்டான்டிநோபிள் அரசாங்கத்துக்குச் சிவாஸ் மாநாட்டிலிருந்து தந்திகள் பறந்தன. மாநாட்டில் கலந்துகொண்ட இராணுவத் தலைவர்களும் தனித்தனியே தந்திகள் கொடுத்தனர்.

கான்ஸ்டான்டிநோபிள் தலைமையமைச்சர் தாமாத் பெரீத், சிவாஸிலிருந்து வந்த தந்திகளைக் கண்டு திகைத்துவிட்டார். தந்தி அலுவலகத் தலைவனை வரவழைத்து சிவாசிலிருந்து வரும் எந்தத் தந்தியும் தம்மிடமே தரப்படல் வேண்டும் என்று கூறினார். சுல்தானுக்கு அனுப்பப்பட்ட தந்திகளுக்குப் பதில் இல்லாமையைக் கண்டு முஸ்தபா ஐயுற்றார்; பதில் தந்தி ஏன் வரவில்லை என்று கான்ஸ்டான்டி நோபிள் தலைமைத் தந்தி அலுவலரைக் கேட்டார். 'சுல்தானுக்கு அனுப்பப்படும் எல்லாத் தந்திகளும் அமைச்சரவையின் மூலமாகவே செல்கின்றன' என்ற பதில் கிடைத்தது. 'சுல்தானுக்கும் எங்களுக்கும் நேரடியான தந்தித் தொடர்பு கிடைக்கவில்லையென்றால், கான்ஸ்டான்டிநோபிளுக்கு எவ்விதச் செய்தியும் வராமல் தடுத்துவிடுவோம். ஒரு மணி நேரத்திற்குள் மறுமொழி இல்லையாயின், விளைவு விபரீதமாகி விடும்,'' என்று முஸ்தபா கூறினார்.

கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து பதில் வரவில்லை. எனவே, அனடோலியாவிலிருந்து தந்திகளை அனுப்பவோ கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து வரும் தந்திகளை ஏற்கவோ கூடாது என்று அனடோலியா தலைமைத் தந்தி நிலையத்துக்கும் ஏனைய எல்லாத் தந்தி நிலையங்களுக்கும் முஸ்தபா கண்டிப்பான ஆணை பிறப்பித்தார். பல இடங்களில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. நம்பிக்கையற்ற அலுவலர்களை நீக்கிவிட்டுத் தம்முடைய நம்பிக்கைக்குரியோரை முஸ்தபா அலுவலில் நியமித்தார். அனடோலியா மாநில அரசாங்கத்தைச் சிவாஸ் மாநாட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர் நடத்துவர் என்பது அறிவிக்கப்பட்டது.

சுல்தான் பணிதல்

முஸ்தபாவின் செயல் முறைகளை ஒடுக்க என்ன செய்வதென்று சுல்தான் எண்ணலானார். இராணுவத்தினரின் துணையை நாடலாம் என்றாலோ, அவர்கள் முஸ்தபாவின் குரலுக்கு மதிப்பளிப்பவர்கள். நேசக் கட்சியினரை நாடலாமென்றாலோ, அவர்கள் 'அது உள்நாட்டு விவகாரம்' என்று கூறிப் போரிட மறுத்தனர். முஸ்தபாவுக்குப் பணிந்துபோவதைத் தவிரச் சுல்தானுக்கு வேறு வழி தோன்றவில்லை. அவர் முஸ்தபாவின் நெருங்கிய நண்பரான **அப்துல் கரீம் பாஷா** என்பவரைக் கொண்டு அவரைச் சமாதானப்படுத்திக்கொள்ள முயன்றார்; அதனால் ஒன்றும் பயனேற்படாமல் போகவே, முஸ்தபாவின் கோரிக்கைகள் யாவை என்று கேட்டார். இப்போதுள்ள அமைச்சரவை உடனடியாகக் கலைக்கப்பட்டுப் புதிய பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதுதான் முஸ்தபாவின் வேண்டுகோள் என்று சுல்தானுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி அப்போதைய அமைச்சரவை கலைக்கப்பட்டது. அலிரிஜா பாஷா என்பவரைக் கொண்ட தற்காலிக அமைச்சரவை அமைக்கப்பட்டது. முஸ்தபாவின் நண்பர் ஜமால் பாஷா இந்த அமைச்சரவையில் போர்த்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார் ஆயினும் கமால் இந்த அளவில் மனநிறைவு பெறவில்லை.

செல்வாக்கும் சிந்தனையும்

முஸ்தபா புதிதாக நடைபெறப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய இயக்கத்தவர்க்குப் பெரும்பாலான இடங்கள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அல்லும் பகலும் மக்களிடையே பிரசாரம் செய்து வந்தார். கான்ஸ்டான்டிநோபிளுக்குச் செல்லும் கடிதங்

களையும் கருவூலத்தையும் அனடோலியாவுக்குத் திருப்ப வேண்டும் என்று முன்னர் அறிவித்திருந்த அறிவிப்பை அவர் மாற்றவில்லை! கான்ஸ்டான்டி நோபிளில் அதிகார மில்லாத அரசர் வீற்றிருந்தார். எல்லாவித அதிகாரங் களும் செல்வாக்கும் கொண்டு அனடோலியா அரசாங்கம் விளங்கியது. ஒரே பேரரசில் இரண்டு அரசாங்கங்கள் இருப்பது சரியன்று என்று எண்ணிய சுல்தான், முஸ்தபா வுடன் கலந்துபேச சலீஹ் பாஷா என்பவரை அன டோலியாவுக்கு அனுப்பினர்.

இருவரும் கலந்து பேசினர் (1) சுல்தானுடைய புனிதத்தன்மையையும் நிலையையும் காப்பாற்றல், (2) எர்செரூம், சிவாஸ் மாநாட்டுமுடிவுப்படி துருக்கி உரிமை யோடு வாழத் தகுதியுள்ள நாடு, அதன் எல்லைக்குள் அய லார் நுழைதல் கூடாது என்னும் இரண்டு கருத்துக்களை இருவரும் ஏற்றுக்கொண்டனர். இனியும் சிவாஸ் மாநாட்டின் பிரதிநிதிக் குழுவைக் கலைத்துவிடலாமே என்று சலீஹ் பாஷா கேட்டதற்கு, அதுபற்றிப் பின்னர்ப் பார்த்துக்கொள்ளலாம் என்று முஸ்தபா கூறிவிட்டார்; தொடர்ந்து என்னென்ன செயல்களைச் செய்தால் தம் முடைய எண்ணங்களையெல்லாம் வெற்றியாக்கிக் கொள் ளலாம் என்பது பற்றி எண்ணியவண்ணம் இருந்தார்.

6. முஸ்தபாவின் வெற்றி

பாராளுமன்றக் கூட்டம்

முஸ்தபா பல நன்மைகளைக் கருதித் தம்முடைய தலைமை நிலையத்தை சிவாசிலிருந்து அங்கோராவுக்கு மாற்றிக்கொண்டார். துருக்கியின் நடுநாயகமாக அங்கோரா இருந்தது. இம்மாற்றம் 1919-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் நடைபெற்றது. பாராளுமன்றத் தேர்தல்களில் தேசிய சங்க உறுப்பினர்களையே மக்கள் ஆதரிக்கவேண்டும் என்பது கேட்டுக்கொள்ளப்பட்டது. முஸ்தபா இரண்டு வார காலமாகத் தேசிய சங்க உறுப்பி னர்கட்காகத் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார்.

தேர்தல் நடந்தது. முஸ்தபாவின் நண்பர் பலர் வெற்றி பெற்றனர். எர்செரூம் பிரதிநிதியாக முஸ்தபாவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தம் கட்சியைச் சார்ந்த புதிய உறுப்பினர்கள் யாவரும் பாராளுமன்றக் கூட்டத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றிக் கலந்து பேச, முஸ்தபா அவர்களைத் தம் மனைக்கு வர வழைத்தார். கான்ஸ்டான்டிநோபிளில் கூடப்போகும் பாராளுமன்றத்தில் நடந்துகொள்ளவேண்டும் முறைக ளெல்லாம் தெளிவாகக் கூறப்பட்டன.

1920-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 11-ஆம் நாளன்று புதிய பாராளுமன்றம் கூடியது. எர்செரூம் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களும், சிவாஸ் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களும் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டன. உள்நாட்டுக் குழப்பம் இல்லா

மல் அமைதியாக வாழும் சூழ்நிலே அமைந்துவிட்டால் போதும் என்றெண்ணி உறுப்பினர்கள் அமைதியாக இருந்துவிட்டனர்.

ஐரோப்பியர் சூழ்ச்சி

ஐரோப்பிய வல்லரசுகள் பாராளுமன்ற நிகழ்ச்சியை அறிந்தன. கான்ஸ்டான்டிநோபிள் நகரமும் டார்டனெல்ஸ் நீர்ச்சந்தியும் சுல்தானுடைய ஆதிக்கத்திலேயே இருக்குமென்று முன்னர் விதித்த நிபந்தனைகளை மாற்றி' அமைத்தன. இது பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே வந்ததால் நேசநாடுகளுடனும் இனிக் குழப்பம் இராது என்று முஸ்தபா நண்பர்கள் எண்ணினர். அதனல் அவர்கள், அமைதியான நிலேயை எதிர்பார்த்து ஐரோப்பியர் ஆதரவிலிருக்கும் சுல்தானே ஆதரிக்க எண்ணம் கொண்டனர்· முஸ்தபா இவற்றையெல்லாம் கேட்டுக் கவலேப்படவில்லே; உறுப்பினர்கள் உறுதியில்லாமல் ஏமாந்து அமைதியாக இருந்துவிட்டார்களே என்று எண்ணினர்; கான்ஸ்டான்டிநோபிளிலிருந்த தம்முடைய நம்பிக்கைக்கு உரிய நண்பர்களிடமிருந்து பல போர்க்கருவிகளேப் பெற்றுச் சேமித்து வைப்பதில் ஈடுபட்டார். துருக்கிப் பேரரசு முழுமையும் முஸ்தபாவுக்கு ஆதரவாக அமையும் காலம் நெருங்கிவிட்டது. எங்கும் சுல்தானுடைய ஆட்சியின் போக்கைப் பழித்தும் இழித்தும் பேசும் நிலே ஏற்பட்டது; வல்லரசுப் பிரதிநிதிகளாக இருந்தவர்களின் ஆணேகள் புறக்கணிக்கப்பட்டன. இதனல் வல்லரசுகள் துருக்கியின் மீது சினம் கொண்டன.

எதிர்பாராதது

துருக்கிக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும் என்று **கர்சன்** பிரபு கூறினர். அதனேச் செயற்படுத்த ஐரோப்பி

யர் முனைந்துவிட்டனர். கான்ஸ்டான்டிநோபிளில் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கூட்டத்திற்கு வந்தவர்கள் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் உறங்கி இரவைக் கழித்துக்கொண்டிருந்த னர். வல்லரசுச் சார்பாளர் (பிரதிநிதிகள்) அவர்களது உறக்க வேளையில் அவர்கள் வாழ்ந்த மனைகளினுட் புகுந்து, அவர்களை எழுப்பிக் கைது செய்தனர்; முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் குற்றவாளிகள் முதலியோரைக் கையில் விலங்கு மாட்டி மறுநாள் காலையில் ஊர்வலமாகக் கொண்டுவந்தனர்; பின்னர் அவர்களைக் கப்பல் ஏற்றி மால்ட்டா தீவிலுள்ள சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டனர். இந்த எதிர்பாராத நிகழ்ச்சி 1920-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15-ஆம் நாள் நள்ளிரவுக்குப் பின்னர் நடைபெற்றது.

இராணுவ ஆட்சி

கான்ஸ்டான்டிநோபிளில் இராணுவ ஆட்சி நிலவி யது. மக்கள் அமைதியாயிருக்கவேண்டும் என்றும், அவர் கள் அமைதியாயிருப்பதே சுல்தானுக்குச் செய்யும் தொண்டாகும் என்றும் கூறி, அறிக்கைகளைப் பிரிட்டிஷ் தூதுவர் வெளியிட்டார். தமக்குத் துன்பம் இல்லாத நிலையில் மக்களுடைய எதிர்ப்பைச் சமாளித்துவிடும் தூதுவரிடம் பொறுப்புக்களை விட்டுவிட்டுச் சுல்தான் தமது பதவிக்கு ஊறு நேராமல் காத்துக்கொண்டார். இராணுவ ஆட்சி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது; சலீஹ் பாஷாவின் அமைச்சரவை கலைக்கப்பட்டது. இங்கிலாந்தின் அழைப் புக்குரியவரான தாமாத் பெரீத் பாஷாவின் தலைமையில் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டது. இவையெல்லாம் மக்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்கள். உண்மை யிலேயே ஆட்சி நடத்தியது பிரிட்டிஷ் தூதுவரேயாவார்.

சிறந்த தொண்டர்

மொஹுஸ்டிர்லி ஹம்தி எப்பெண்டி என்பவர் துணிவு மிக்குடைய நாட்டுப் பற்றுடையவர். ஆங்கிலேயர்கள் கான்ஸ்டான்டிநோபிளில் இரவோடு இரவாகப் புகுந்து உறங்கிக்கொண்டிருந்தவர்களை எல்லாம் கைது செய்த அவலக் கதை முஸ்தபாவுக்குத் தெரியாது. தந்தி நிலையங்கள் எல்லாம் ஆங்கிலேயர் வசமாயின. துருக்கிய அலுவலர் பலர் விலகிவிட்டனர்; பலர் விலக்கப்பட்டனர். ஆனல், எப்பெண்டி மட்டும் தமது தந்திக் கருவியை விடாமல் அங்கோராவுக்குத் தந்தி அடித்துக்கொண்டிருந்தார்.

"ஆங்கிலேயர்கள் எதிர்பாராத வகையில் அரசாங்க அலுவலகங்களை எல்லாம் கைப்பற்றிக்கொணடனர்; தந்தி நிலையங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு வருகின்றனர்; சற்று நேரத்திற்கு முன்னரே இராணுவப் பள்ளி அவர்கள் வசமாயிற்று. உங்கள் ஆணை யாது ?"

இதற்குமேல் எப்பெண்டியால் முஸ்தபாவுக்குச் செய்தி தெரிவிக்க முடியவில்லை. எப்பெண்டி பணியாற்றிய தந்தி அலுவலகம் ஆங்கிலேயர் வசமாய்விட்டதே அதற்குக் காரணமாகும். எப்பெண்டியின் இந்த உதவியை முஸ்தபா மறக்கவேயில்லை; அவரைப் பாராட்டிப் புகழ்ந்து பொதுக்கூட்டமொன்றில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் கூறினர். எப்பெண்டியைப் போலத் துருக்கியர் ஒவ்வொருவரும் தாய் நாட்டுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முஸ்தபாவின் அறிக்கை

மக்களை ஊக்குவிப்பதில் முஸ்தபாவுக்கு நிகராக எவரையுமே சொல்லமுடியாது. அவர் தமது ஆற்றலைப் பயன்படுத்தி மக்கள் உணர்வுகொண்டு எழும் வகையில்

அறிக்கையொன்றைத் தயாரித்து எல்லா இடங்கட்கும் அனுப்பினர். அந்த அறிக்கை கூறுவது யாது?

அயலார்கள் நேர்மையற்ற முறையில், இரவில் உறங்கிக்கொண்டிருந்த நம் நாட்டுத் துருக்கியப் பெருந் தகையாளர்களைக் கைது செய்து சென்றது தவறாகும். அவர்களைத் தட்டிக் கேட்காமல், தமது பதவிக்கு ஆபத் தில்லாதிருத்தல் போதும் என்ற எண்ணத்தோடு துன்பங் களைப்பற்றியே எண்ணாமல் இன்பச் சுழலில் சிக்கி நம் மதிப்பிற்குரிய சுல்தான் இறுமாந்துள்ளார். உயர்ந்த பல பெருமக்களை இழந்த நிலையில் நாம் வருந்துகின்றோம். ஆனால், நம் மதிப்பிற்குரிய—துருக்கியின் மதிப்புக்குரிய சுல்தானே அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் தம் சுக வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார். வல்லரசுகள் தங்கள் நேர்மையற்ற இந்தச் செயலுக்கு வரலாற்றுமுன் பதில் சொல்லவேண்டும் காலம் வரத் தான் போகின்றது.

"அயலார்கள் கருதுவதுபோல நம்மை அவ்வளவு எளிதில் அழித்துவிட முடியாது. ஏனென்றால் நாம் பழம் பெருமை கொண்ட துருக்கி மண்ணில் பிறந்து வளர்ந்துள்ளவர்கள் அல்லவா? உரிமை வாழ்வை எதிர் நோக்கித் துடித்துக்கொண்டிருக்கும் நமக்கு அவர்தம் தவறான செயல் பெரிதும் வருத்தத்தைக் கொடுக்கின்றது. ஆயினும் இவையெல்லாம் நமக்குப் படிப்பினைகள். நாம் இவற்றைத் தொடக்கப் படிகளாக வைத்துக்கொண்டே துருக்கிக்கு உரிமை வாழ்வை வழங்க முயலவேண்டும்.

"துருக்கியின் நல்ல எதிர்காலம் இளைஞர்களிடம் உள்ளது. கிராம மக்கள் முயன்றால் துருக்கியின் வளர்ச் சிக்கு எவ்வளவோ செய்யலாம். துருக்கி எண்ணற்ற இளங்காளைகளை வரவேற்கின்றது. தனக்கேற்பட்ட

இழிவையெல்லாம் போக்க ஒவ்வொரு துருக்கியனையும் அது அழைக்கின்றது. தாயின் துயர் கண்டு தவிக்காமலிருக்கும் மக்களும் இருக்க முடியுமோ? துருக்கியர்களே, என் அருமை நாட்டவர்களே, விழித்தெழுங்கள்; அஞ்சாமல் கடமையைச் செய்யுங்கள்."

மக்கள் தொண்டு

முஸ்தபாவின் அறிக்கை மக்களிடையே உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. சுல்தான் அரசாங்கத்தின்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தளர்ந்தது. முஸ்தபாவுக்கு உதவி புரிய வேண்டும் என்று அவர்கள் எண்ணினர். அவரால்தான் துருககியினையும் தங்களையும் காப்பாற்ற முடியும் என்று கள்ளமற்ற கிராம மக்கள் நம்பினர். போர்க்கருவிகள் பலவற்றை அவர்கள் கொணர்ந்து குவித்தனர். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் பலர் களத்தில் புண்பட்ட வீரர்க்குத் தொண்டாற்ற முன் வந்தனர். சில பெண்கள் போர்வீரர்க்கு வேண்டிய ஆடைகளைத் தத்தம் இல்லங்களில் இருந்தபடியே தைத்து அனுப்பினர்.

"கிராண்டு நேஷனல் அசெம்பிளி"

துருக்கியின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தப் போவது அங்கோராவில் புதிதாகஅமைக்கப்படும் பாராளுமன்றமேயாகும் என்று முஸ்தபா கூறினர். 1920-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 23-ஆம் நாள்வெள்ளிக்கிழமையன்று "கிராண்டு நேஷனல் அசெம்பிளி" என்னும் அமைப்பு உண்டாக்கப்பட்டது. இதனை நாம் தேசிய அரசாங்கம் என்றழைக்கலாம். மதச் சடங்குகளுடன் நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முன்னர், உறுப்பினர்கள் அனைவரும் மசூதிக்குச் சென்று வழி

பாடு செய்து திரும்பினர். அவர்களுடைய சமய நம்பிக்கைகளைக் குலைத்துவிட்டால் தம்முடைய காரியங்களும் குலைந்துபோகுமே என்பதால்தான் முஸ்தபா இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். நிகழ்ச்சியின் இறுதியில் மக்கள் கட்சியின் தலைவராக முஸ்தபா தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அரசாங்கம் நடைபெறுவதற்கான சட்டங்கள் சில இயற்றப்பட்டன. பதினொரு அமைச்சர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றனர். முஸ்தபா படிப்படியாக நாளடைவில் எல்லா அதிகாரங்களையும் பெற்றார்.

இஸ்மத் இனோனு

இஸ்மத் இனோனு என்பவர் முஸ்தபாவின் நம்பிக்கைக்கு உரியவர்களுள் ஒருவர். இவரே முஸ்தபாவின் மறைவிற்குப் பின்பு துருக்கிக் குடியரசின் தலைவரானார். அங்கோராவில் வேலை செய்யத் தொடங்கிவிட்ட தேசிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் இஸ்மத் இனோனு சேர்த்துக்கொள்ளப்பட்டார். தேசிய இயக்கத்துக்காக இவர் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்துகொண்டு தம்மாலான உதவிகள் புரிந்தார்.

முஸ்தபாவின் புதிய அரசாங்க அமைப்பைப் பற்றிக் கேள்வியுற்ற சுல்தான் பெரும் படையைத் திரட்டிக் கலகம் செய்ய அனுப்பினார். 1920-ஆம் ஆண்டு மே திங்கள் முழுமையும் ஒரே குழப்பமாக இருந்தது. சுல்தான் படைகள் சென்றவிடமெல்லாம் வெற்றி பெற்றன முஸ்தபாவின் படை வீரர்களில் பலர் இறந்துவிட்டனர். ‘முடியரசா ? குடியரசா ?—எது துருக்கியில் இடம் பெறப் போகின்றது?’ என்பது பற்றி அறிய முடியாமல் மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

செவர்ஸ் ஒப்பந்தம்

ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கியின் நிலைபற்றி வெளியிட்ட ஒப்பந்தமே **செவர்ஸ் ஒப்பந்தம்** எனப்பட்

டது. இதன்படி ஸ்மிர்ஞவைத் தவிர்த்து அனடோலியா மாநிலம் மட்டுமே எதிர்காலத் துருக்கி என்று கூறப்பட்டது. கான்ஸ்டான்டிநோபிளும், டார்டனெல்ஸ் நீர்ச் சந்தியும் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகிய மூன்று வல்லரசுகளின் மேற்பார்வையில் இருக்கும். அரேபியாவும் பாலஸ்தீனமும் பிரிட்டனுடைய ஆதீனத்துக்குப் போய்விடும். அனடோலியா மாநிலத்தையும் மூன்ருகப் பிரித்து ஒவ்வொரு பகுதியைத் தங்கள் மேற்பார்வையின் கீழ் வைத்துக்கொள்ளவேண்டும் என்று மூன்று வல்லரசுகளும் திட்டம் தீட்டின. சுருங்கக் கூறின், செவர்ஸ் ஒப்பந்தம் துருக்கிப் பேரரசின் சிறப்பிற்குச் சவக்குழி தோண்டிவிட்டது என்னலாம்.

முஸ்தபாவின் வெற்றி

செவர்ஸ் ஒப்பந்தம் துருக்கி இளைஞர்களிடையே உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. உணர்ச்சி கொண்டவர் முஸ்தபாவுடன் சேர்ந்துகொண்டனர்; சுல்தானையும் அவரைத் தவருன வழிகளிலேயே அழைத்துச் செல்லும் தாமாத் பெரீத் பாஷாவையும் வெறுத்தனர். அவ்வெறுப் புணர்ச்சி சுல்தான் படைகளை விரட்டியடிக்குமளவிற்குப் பயன் தந்தது. அங்கோரா அரசாங்கத்துக்கு எதிராகக் கிளப்பப்பட்ட கலகங்கள் யாவும் அடங்கின. அங்குமிங்கும் மறைவாகக் கிடந்த அயற்படைகள் சிதறி ஓடின.

அங்கோராவில் இஸ்மத் பாஷாவின் தலைமையில இராணுவம் வலுவுள்ளதாக்கப்பட்டது. போர்க்கருவிகள் குவிந்தன. படைகள் கான்ஸ்டான்டிநோபிளை நோக்கிப் பறந்தன. கான்ஸ்டான்டிநோபிளை அயலார் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு வீரனிடமும் இருந்தது. முஸ்தபாவின் படைகள் கான்ஸ்டான்டிநோபிளைச் சூழ்ந்துகொண்டன.

அப்போது அங்கு ஆங்கிலப் படைகள் மிகுதியாக இல்லை. துறைமுகத்திலிருந்த பிரிட்டனைச் சேர்ந்த சில போர்க்கப்பல்கள் பீரங்கிகளை முழக்கின. ஆனால், துருக்கிப் படைகள் வீராவேசத்துடன் போர் புரிந்தன. கான்ஸ்டான்டிநோபிள் முஸ்தபாவின் வசமாவதற்கு நெடுநேரமாகாது என்ற எண்ணம் எல்லோர் உள்ளத்திலும் அரும்பிவிட்டது.

கிரேக்கர் இடையீடு

கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றிக்கொள்ள முஸ்தபாவின் படைகள் கிளம்பிவிட்டன என்பதை அறிந்ததும், வல்லரசுகள் சிந்திக்கத் தொடங்கின. தக்க படையுதவி வல்லரசுகள் தருமாயின், கான்ஸ்டான்டிநோபிளை அவர்கள் வசமாக்காமல் தடுத்துவிடலாம் என்று கிரேக்கர் வல்லரசுகளிடம் கூறினர். கிரேக்கர்கள் செய்யும் இந்தப் பேருதவிக்காகத் துருக்கியின் சில பகுதிகளை அவர்களுக்குப் பரிசாகத் தருவதாக வல்லரசுகள் வாக்களித்து, ஊக்குவித்துப் படைகளை அனுப்பின கிரேக்கப் படையினருக்கும் துருக்கிப் படையினருக்கும் கடும்போர் நடைபெற்றது. கிரேக்கப் படையினரே வெற்றி பெற்றனர்.

இத்தோல்வியைப் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. பாராளுமன்றத்தின் தலைவர் என்ற முறையில் எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் முஸ்தபா பதில் சொல்ல வேண்டியவரானர். அவர் தமது சொல்வன்மையால் குறைகூறியவர்களை எல்லாம் அமைதி பெறச் செய்தார்; அடுத்து மேற்கொள்ளும் போர்ச் செயலில் வெற்றி காணுவது உறுதி என்றார்.

அர்மீனியப் போர்

துருக்கியின் கிழக்கெல்லையும் ருசியாவின் தெற்கெல்லையும் சந்திக்கும் இடத்தில்தான் அர்மீனியர்கள் தனிச்

சமூகத்தினராக வாழ்ந்தனர். அர்மீனியர்க்கும் துருக்கியர்க்கும் நெடுங்காலமாகப் பகை இருந்து வந்தது. அர்மீனியர் துருக்கியர் சிலரைக் கொன்றுவிட்டனர்; அதனுல் துருக்கியர் அர்மீனியருடன் போர் செய்தனர்; வெற்றி பெற்றனர். அர்மீனிய அரசாங்கம் பணிந்தது. இரண்டு அரசாங்கங்களும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டன. இதனுல் பல நன்மைகள் விளைந்தன. செவர்ஸ் ஒப்பந்தத்தை அங்கோரா அரசாங்கம் ஏற்கவில்லையென்பதை இவ்வொப்பந்தம் பறையறைந்து தெரிவித்தது.

சோவியத்—அங்கோரா உறவு

கான்ஸ்டான்டிநோபிளும் டார்டனெல்ஸ் நீர்ச்சந்தியும் துருக்கியரிடமே இருக்கவேண்டும் என்று ருசியா விரும்பியது. அவை இரண்டும் ஆங்கிலேயர்களிடம் இருந்தன. அவர்களிடம் அவை இருக்கும் வரையில் தனக்கு ஆபத்துண்டு என்பதை ருசியா உணர்ந்திருந்தது. எனவே, ருசியா முஸ்தபாவுக்கு ஆதரவு கொடுக்கத் தொடங்கியது. ருசியாவின் நட்பைப் பெற்று, அதன் மூலம் படைகளைப் பெற்றுத் துருக்கிக்கு நல் வாழ்வு கொடுக்க வேண்டுமென்பது முஸ்தபாவின் திட்டம். அதனுல் அங்கோரா அரசாங்கமும் சோவியத் அரசாங்கமும் நட்புறவு உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

ருசியாவிலிருந்து படைகள் வந்து துருக்கியில் குவிந்தன. ஏராளமான பொருளுதவியையும் ருசியா செய்தது. இராணுவத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கிராம மக்கள் கொண்டுவந்து குவித்தனர்; வீட்டுக்கொரு வீரர் அனுப்பப்பட்டனர். வல்லரசுகள் இந்தப் போர் முழக்கத்தையும் போர்க்குரிய முயற்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்தன. எதிலும் கலந்துகொள்ளாமல் போரை

யும் தடுக்காமல் அவை அமைதி சாதித்தன; செவர்ஸ் ஒப்பந்தத்தைச் சுல்தானின் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தின. இறுதியில் செவர்ஸ் ஒப்பந்தத்தில் சுல்தான் கையெழுத்திட்டார்.

தூது நடந்த அமைச்சர்கள்

முஸ்தபாவிடம் பற்றுக்கொண்ட சலீஹ் பாஷா, இஜ்ஜெத் பாஷா என்னும் இருவருக்கும் தமது அமைச்சரவையில் சுல்தான் இடம் கொடுத்தார்; அவர்களைக் கொண்டு முஸ்தபாவோடு நட்புக்கொள்ளவேண்டும் என்று எண்ணினர். அமைச்சர் இருவரும் சுல்தானுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் முனைந்தனர். முஸ்தபா அவர்களைக் கண்டு பேச ஒப்பினர்; பிலேத்ஷிக் என்னும் புகைவண்டி நிலையத்தில் காணுமாறு கூறினர்.

குறிப்பிட்ட நாளன்று சலீஹ் பாஷாவும், இஜ்ஜத் பாஷாவும் பிலேத்ஷிக் புகைவண்டி நிலையத்துக்கு வந்தனர். அங்கு முஸ்தபா அவர்களை வரவேற்பதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்; அவர்கள் இருவரும் கூறியதை முஸ்தபா செவிமடுக்காமல், கான்ஸ்டான்டிநோபிள் அரசாங்கத்தைச் சுல்தான் கலைத்துவிட்டு, அங்கோரா அரசாங்கத்தை ஏற்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். வந்த காரியத்தில் வெற்றி காணமுடியவில்லையே என்ற வருத்தத்துடன் அவர் இருவரும் திரும்ப எழுந்தனர். முஸ்தபா அங்கு நின்றிருந்த ரயிலில் ஏறுமாறு கூறினர். அவர்கள் திகைத்தனர். "அஞ்சவேண்டா, அந்த வண்டி அங்கோராவுக்குத்தான் செல்லுகின்றது; ஏறிக்கொள்ளுங்கள்" என்று முஸ்தபா நயமாகக் கூறினர். அதற்குப் பதில் கூறமுடியாமல் அவர்கள் இருவரும் வண்டியில் ஏறினர்; அங்கோராவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வல்லரசுகளின்முன் ஒற்றுமை

செவர்ஸ் ஒப்பந்தத்தைத் தயார் செய்து வெளியிட்ட வல்லரசுகளுள்ளேயே போரும் பூசலும் ஏற்பட்டுவிட்டன. இந்த வேளையில் கிரீசில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. எனவே, வல்லரசுகள் செவர்ஸ் ஒப்பந்தத்தை எல்லார்க்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் மாற்றியமைக்க இசைந்தன. துருக்கிக்கும் கிரீசுக்கும் வல்லரசுகள் அழைப்பு விடுத்தன. துருக்கியிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் வருதல்வேண்டும் என்றும், ஒருவர் சுல்தான் அரசாங்கத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்றும் மற்றொருவர் அங்கோரா அரசாங்கத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்றும் அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுல்தான் அரசாங்கத் தலைமை அமைச்சரான தெவேபிக் பாஷா, வல்லரசுகளின் அழைப்புடன் நீண்ட கடிதமொன்றையும் இணைத்து முஸ்தபாவுக்கு அனுப்பினர். முஸ்தபா அதற்கு மிகுந்த சினத்துடன் பதிலெழுதினர். அவர் அவ்வாறு மிடுக்காக எழுதியமைக்குக் காரணம், 1921-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21-ஆம் நாளன்று துருக்கியின் புதிய அரசியல் அமைப்பை உறுதிப்படுத்தித் தேசிய அவையில் சட்டமொன்றினை நிறைவேற்றியமையேயாகும்.

1921-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் இலண்டன் மாநகரில் மாநாடு தொடங்கியது. வல்லரசினர், துருக்கிப் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்ட நிலைமையில் ஒருவரையொருவர் நம்பாதவர்களாய் அவைக்கு வருவர் என்று எதிர்பார்த்தனர். ஆனால், துருக்கிப் பிரதிநிதிகள் இருவரும் மிகுந்த ஒற்றுமையுடனும் புன்முறுவலுடனும் அவையுள் நுழைந்ததைக் கண்டதும் அங்கிருந்தோர் வியப்புற்றனர். தெவேபிக் பாஷா

அவையில் எழுந்து, "துருக்கியிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிக் குழுவுக்கு நான்தான் தலைவன். ஆயினும் எனக்குப் பதிலாக அங்கோரா அரசாங்கத்தின் பிரதிநிதியாக வந்துள்ளவரே பெகிர் சாஹி பே இரண்டு அரசாங்கங்களின் சார்பில் பேசுவர்," என்று அறிவித்தார்.

துருக்கிக்கும் கிரீசுக்கும் இடையேயுள்ள மனவேறுபாடுகளைப் போக்குவதே மாநாட்டின் குறிக்கோள் என்பது மாநாட்டுத் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டது. ஸ்மிர்ணவில் உள்ள மக்களின் நிலை பற்றி அறிய ஒரு தனிக் குழுவினை அமைப்பதாக வல்லரசுகள் கூறின; அக்குழுவின் முடிவுகளைத் துருக்கியும் கிரீசும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறின. செவர்ஸ் உடன்படிக்கையையும் சில மாற்றங்களுடன் இருநாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. அங்கோராப் பிரதிநிதி, குழு அமைப்பைமட்டும் ஒப்புக்கொண்டு செவர்ஸ் ஒப்பந்தம் பற்றி ஒன்றும் கூறவில்லை. கிரேக்கர்களோ இரண்டையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதுபற்றி நன்கு சிந்தித்துக் கூறுவதற்காக நான்கு வாரங்கள் அளிக்கப்பட்டன. மாநாடு கலைக்கப்பட்டுவிட்டது. இரண்டு நாடுகளும் கலந்து நல்லதொரு முடிவுக்கு வரவேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது.

கிரேக்கர் படையெடுப்பு

1921-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கிரேக்கர்கள் துருக்கியின்மீது படையெடுத்தனர். கிரேக்கப்படைகள் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஒரே வேளையில் துருக்கியைத் தாக்கின. நவீன போர்க்கருவிகளைக் கொண்ட கிரேக்கர்களை எதிர்க்கமுடியாமல் துருக்கிப் படைகள் பின்வாங்கின. இப்போரில் தோல்வியே ஏற்பட்டபோதிலும் முஸ்தபா வருந்தவில்லை;

எவ்வாறேனும் அடுத்து முயன்று கிரேக்கர்களை வெற்றி கொள்ளவேண்டும் என்று முனைந்தார்.

தமக்கு எல்லா அதிகாரங்களும் குறிப்பிடப்பட்ட காலம்வரையில் தந்தால், களத்தில் வெற்றி பெறுவது உறுதி என்று பாராளுமன்றத்தில் முஸ்தபா அறிவித்தார். அவர் விரும்பியதுபோல அவருக்கு எல்லா அதிகாரங்களையும் குறிப்பிட்ட காலம்வரையில் கொடுக்கப் பாராளுமன்றம் ஒப்பியது. முஸ்தபா சர்வாதிகாரி ஆனார்.

முஸ்தபாவைக் கொல்லச் சூழ்ச்சி

முஸ்தபா சாகிர் என்பவர், "இந்திய கிலாபத் குழுவின்" பிரதிநிதி என்று தன்னைக் கூறிக்கொண்டு அங்கோராவுக்கு வந்தார்; இந்தியாவில் உள்ள இசுலாமியர்கள் துருக்கிய தேசிய இயக்கத்தின் ஆதரவாளர்களே என்றும், அவர்கள் தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பத்து லட்சம் பவுன் அனுப்பியுள்ளார்கள் என்றும் கூறினர்; அப்பெருந்தொகை விரைவில் வந்துசேரும் என்றும் தெரிவித்தார். அங்கோராவில் இவருக்கு எல்லாச் சிறப்புக்களும் செய்யப்பட்டன. இவர் எல்லோருடனும் நெருங்கிப் பழகத் தொடங்கினர்; பிறரைக் காட்டிலும் முஸ்தபாவிடம் நெருங்கிப் பழகுவதிலேயே இவர் ஆர்வம் காட்டினர். இவருக்கிருந்த இந்த ஆர்வத்தைச் சிலர் ஐயுற்றனர். ஐயத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் இவரைக் கைது செய்தனர். இவர் ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்ட ஒற்றர்என்ற உண்மை விசாரணையில் வெளியாகியது. முஸ்தபாவைக் கொன்று விட்டால் ஒருலட்சம் பவுனைத் தனக்குக் கொடுப்பதாக ஆங்கிலேயர்கள் கூறினரென்றும் கொல்வதற்குரிய வழிவகைகளையெல்லாம் அவர்கள் சொல்லிக்கொடுத்தனர்

என்றும் இவர் விசாரணையின்போது கூறினர். இறுதியில் இவர் தூக்கிலிடப்பட்டார்.

வெற்றி

1921–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் சக்கேரியாவில் கிரேக்கப் படைகளும் துருக்கிப் படைகளும் சந்தித்தன. துருக்கி வரலாற்றிலும் உலகவரலாற்றிலும் இப்போர் சிறப்பிடம் பெற்றது. துருக்கிப் போர் வீரர்கள் வீராவேசத்தோடு இருந்தனர். கிரேக்கர்கள் ஒவ்வொரு நகரமாகக் கைப்பற்றிக்கொண்டு முன்னேறி வந்தனர். ஆனால், அவர்கள் அத்தற்குள் சோர்வடைந்து விட்டனர்; எண்ணற்ற வீரர்கள் இறந்துபட்டனர். பதினைந்து நாட்களுக்குப் பின்னர்க் கிரேக்க வீரர்கள் சோர்வுற்றுப்போனதை அறிந்த முஸ்தபா, அவர்களை விரட்டியடித்குமாறு தம் படைகளை ஏவினர். துருக்கி வீரர்கள் முன்னேறினர்; இழந்த நகரங்களை எல்லாம் மீளவும் கைப்பற்றினர். கிரேக்க வீரர்கள் புறங்காட்டி ஓடினர். செப்டெம்பர்த் திங்கள் பதினன்காம் நாளன்று சக்கேரியா ஆற்றைக் கடந்து கிரேக்கப் படைகள் பின்வாங்கின.

சக்கேரியா போரில் முஸ்தபாவின் வெற்றியைப் பாராட்டி நாடெங்கும் விழாக் கொண்டாடப்பட்டது. முஸ்தபாவுக்குக், 'காஜி' பட்டம் தரப்பட்டது. ஆனால், அவர் இவற்றைக்கண்டு மனநிறைவு கொள்ளவில்லை. துருக்கி மண்ணில் கிரேக்கர்கள் இருக்கக்கூடாதென்று அவர் எண்ணினர்.

சக்கேரியா ஆற்றைக் கடந்து பின்வாங்கிய கிரேக்ககப் படைகள் மீண்டும் துருக்கியின்மேல் படையெடுத்து வெற்றிகாண எண்ணின. நெடுங்காலமாக அவை துருக்கியின் படையெடுப்பை எதிர்நோக்கின. ஆனால், அவர் சற்றும் எதிர்பாராத நிலையில் 1922-ஆம்

ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் நாளன்று நள்ளிரவில் முஸ்தபா தம் படைவீரர்களைக் கிரேக்கர்களைத் தாக்கி வெற்றி காணுமாறு ஆணையிட்டு வாழ்த்தினர்.

துருக்கிப் படைகள் பறந்தன; கிரேக்கர்கள் தங்கியிருந்த இடத்தைக் கைப்பற்றிக்கொண்டன. பல கிராமங்களும் எண்ணற்ற உயிர்களும் கிரேக்க வீரர்களால் அழிக்கப்பட்டன. இறுதியில் கிரேக்கப்படைகள் ஸ்மிர்ணு வழியாகக் கப்பலேறிவிட்டன.

1922-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 9-ஆம் நாளன்று துருக்கிப் படைகள் தம் தலைவர் முஸ்தபாவுடன் ஸ்மிர்ணுவினுள் நுழைந்தன மக்கள் முஸ்தபாவை வாழ்த்தி வணங்கினர். வல்லரசுகள் அவரைப் புகழ்ந்து பாராட்டின. முஸ்தபா வெற்றிப் புன்னகையுடன் யாவர்க்கும் வணக்கமும் நன்றியும் கூறினர்.

7. திருமணம்

லதீபா ஹனூம்

துருக்கிப் படைகள் ஸ்மிர்ணுவில் புகுந்த மூன்ரும் நாளில் முஸ்தபாவின் வாழ்க்கையில் ஒரு புதிய நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் இராணுவத் தலைமை அலுவலகத்தில் அமர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து அவரைக் காண மங்கை ஒருத்தி வந்திருப்பதாகக் கூறினன். உள்ளே அனுப்புமாறு கூறிவிட்டு முஸ்தபா தொடர்ந்து கடமையில் ஈடுபட்டார்.

'மன்னிக்கவேண்டும், என் பெயர் லதிபா ஹனூம்;" என்னும் குரல் கேட்டு, முஸ்தபா நிமிர்ந்து பார்த்தார். எழில்மிக்க இளமங்கை ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய வட்ட வடிவமான முகமும், கரிய கூரிய விழிகளும், எடுப்பான மூக்கும் முஸ்தபாவை மால் கொள்ளச் செய்தன. அவர் கற்சிலை போலானர்; ஆயினும் எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டி அதில் அவளை அமரச் சொன்னர்.

அவர் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. முன்பின் தெரியாத பெண்-இளமையும் எழிலும் ததும்ப இருப்பவள்-இசுலாமியப் பெண்-தன்னந்தனியாக அயலானுடன் பேசவந்துள்ளாள்: இதனை எண்ணியதும் அவர் அளவு கடந்த வியப்புற்ருர்; நாற்காலியில் அமர்ந்துள்ள அவளைக் கூர்ந்து கவனித்தார். அப்பெண்மணி துருக்கிப் பெண்கள் சாதாரணமாக அணிந்துகொள்வது போன்று முக

முடியை அணிந்துகொண்டிருந்தாள். அது ஒன்று தவிர, அவள் ஐரோப்பிய உடையிலேயே இருந்தாள். அவள் வந்த சில விநாடிகளுள் முஸ்தபாவின் மனத்திற்குள் என்னென்னவோ உணர்ச்சிகள் உண்டாயின.

"நான் தங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்று முஸ்தபா அன்புடன் லதீபாவைக் கேட்டார். அதற்கு அவள் பின்வருமாறு கூறினாள்:

"நான் மௌமெரான் சாகிபுவின் மகள். என் தந்தையார் கப்பல் வணிகர். நான் பாரிஸில் படித்தவள். பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் முதலிய மொழிகள் எனக்குத் தெரியும். ஸ்மிர்னாவுக்குச் சிறிது தொலைவில் போர்னேவோ என்னும் இடம் உள்ளது. அங்கு எங்களுக்கு மாளிகை ஒன்று உள்ளது; அம்மாளிகையைச் சுற்றிச் சிறுசிறு குன்றுகள் உள்ளன. எங்கட்குப் பணிபுரியப் பலர் அங்கு உண்டு. தாங்கள் அங்கு வந்து தங்கியிருக்க வேண்டும் என்பதே என் விழைவு."

லதீபாவின் விருந்தினர்

முஸ்தபா லதீபாவின் விருந்தினராக இருக்க முதலில் மறுத்தார்; ஆனால், லதீபா மேலும் மேலும் வற்புறுத்தவே, ஒப்புக்கொண்டார். அலுவலகம் அவள் மாளிகைக்கு மாற்றப்பட்டது. போர்னேவிலிருந்த லதீபாவின் மாளிகை அமைதியின் உறைவிடமாக இருந்தது. சூழ்ச்சி, பொறாமை, அடுத்துக் கெடுத்தல் முதலிய சூழ்நிலைகளில் இருந்த முஸ்தபா, இயற்கையின் எழிலைச் சுவைத்துக் கொண்டு அமைதியான இந்த இடத்தில் இருக்க விரும்பினார். இயற்கையின் சூழலைவிட, அவர் மனத்தை, லதீபா மிகுதியாகக் கவர்ந்துவிட்டாள். அவள் இனிமையாகத் துருக்கியில் பேசுவது அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவள் அவர்க்குரிய தேவைகளையெல்லாம் கவனித்துக்

கொள்ள் ஏவலர் பலரை ஒதுக்கினுள். முஸ்தபா அவளுடைய ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினுர்; பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் முதலிய மொழிகளில் வல்ல லதீபாவைத் தம் செயலாளராகக் கொண்டார்.

லதீபாவின் கணவர்

நாளடைவில் லதீபாவைத் தம் மனம் விரும்புவதாக முஸ்தபா உணர்ந்தார்; மனத்தின் கருத்தை லதீபாவிடம் கூறினுர். லதீபாவும் முஸ்தபாவை விரும்பினுள். அவள் அவருடைய சட்டபூர்வமான மனைவியாகவே இருக்க விரும்பினுள்; தன்னுடைய அந்தக் கருத்தை அவள் தெளிவாகக் கூறினுள். கட்டுப்பாடுகளுக்கு உட்படாத மனமுடைய முஸ்தபா, அவள் கூறியதன் பொருளைச் சரிவர உணராமல் அவளைக் கோபித்துக்கொண்டு, அங்கிருந்து கிளம்பிப் பழைய அலுவலகத்திற்குச் சென்று விட்டார்.

பெண் தன்னுல் விரும்பப்படுபவனின் உடைமைப் பொருளாக இருக்கவே விரும்புவாள். அவள் வாழும் வரை அந்த இடத்தை எவர்க்கும் உரிமையாக்க அவள் விரும்பமாட்டாள். அவளைத் தவிர எவர்க்கும் அந்த இடம் உரியதன்று என்று தன் கணவனும் எண்ண வேண்டும் என்று பெண் எண்ணுவாள். பெண் மனம் ஆணுடைய உறுதியான அன்பைத்தான்—அடிமனத்தின் அன்பைத்தான் எதிர்பார்க்கிறது. இயற்கையின் இயல்பு இதுவாக, லதீபா முஸ்தபாவைத் தன் உரிமைக் கணவராக அடைய எண்ணியதில் வியப்பில்லையல்லவா? முஸ்தபாவின் விருப்பத்திற்கு உட்பட்டு வாழ்ந்தும் அவர் வேண்டாதபோது ஒதுங்கியும்விடும் 'பொதுமகள்' வாழ்வு வாழ அவள் விரும்பவில்லை. லதீபாவின் உள்ளத்தைச் சரிவர உணர்ந்துகொள்ள முஸ்தபாவுக்கு ஆறுவாரங்கள்

பிடித்தன. அவர், சாங்காயாவில் இருந்த தம் வீட்டி லிருந்து போர்ஞே மாளிகைக்குச் சென்ருர்; லதீபாவைக் கண்டார்; "இப்போதே நாம் மணமக்களாகிவிடுவோம். எந்தவிதமான ஆடம்பரமும் இல்லாமல், எவர்க்கும் கூருமல், எவரையும் அழையாமல், இப்போது மணம் முடித்துக்கொள்வோம்," என்று லதீபாவிடம் கூறினர். லதீபா திகைத்தாள். "நாளை காலை பார்ப்போம்" என்று கூறிவிட்டாள்.

மறுநாள் காலை இருவரும் ஸ்மிர்ஞ நோக்கிச் சென் றனர்;வழியில் இசுலாமியத் தலைவர் ஒருவரைக் கண்டனர்; "இப்பொழுதே இங்கேயே எங்களை மணமக்களாகச் செய்து ஆசி வழங்குங்கள்," என்று முஸ்தபா வேண்டினர். இசுலாமியத் தலைவர் ஆசியுடன் இருவரும் மணமக்களா யினர். முஸ்தபாவும் லதீபாவும் போர்ஞே மாளிகைக்குக் கணவனும் மனைவியுமாய்த் திரும்பினர்.

லதீபா முஸ்தபாவோடு குதிரை ஏறிக்கொண்டு வீராங்கனைபோலச் சென்ருள். படை வீரர்கள் இருவரை யும் கண்டனர். முஸ்தபா திருமணம் செய்துகொண்டது அப்போதுதான் அவர்களுக்குத் தெரிந்தது. 'மணமக்கள் வாழ்க!' என்று அவர்கள் வாய் வாழ்த்தியது.

8. துருக்கியின் வெற்றி

பிரிட்டனின் அச்சம்

கிரேக்கப் படைகள் தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ள மனம் இல்லாமல் துருக்கியர்களுடன் மீண்டும் போர்புரிய முனைந்தனர்; போர்க்குரிய தயாரிப்புக்களில் ஈடுபட்டனர். கிரேக்கப் படைகள் போர்க்குரிய தயாரிப்புக் களில் ஈடுபடுதலை முஸ்தபா விரும்பவில்லை; அப்படை களை விரட்டிவிடவேண்டும் என்று எண்ணினார். ஸ்மிர்னாவைக் கைப்பற்றிக்கொண்ட சில நாட்களுள், முஸ்தபா தம் படைகளை இரண்டு பகுதிகளாகப் பிரித் தார்; கான்ஸ்டான்டிநோபிளை நோக்கியும், டார்டனெல்ஸ் நீர்ச் சந்தியை நோக்கியும் புறப்பட்டார். நேசக் கட்சியினர் முஸ்தபாவின் இந்தச் செயலைக் கண்டு திகைத்தனர்; 1921-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளன்று பின் வரும் அறிக்கையினை வெளியிட்டனர். "பாஸ்பரஸ் நீர்ச் சந்திக்கும் டார்டனெல்ஸ் நீர்ச்சந்திக்கும் இரு புறங்களி லும் உள்ள சிறிய பகுதி நடுநிலைமைப் பகுதியாகும். அங்குக் கிரேக்கர்களோ துருக்கியர்களோ நுழைதல் கூடாது." இந்த நீர்ச் சந்தியைக் கடந்து அட்ரியாநோபி ளுக்குச் செல்ல வேண்டுமென்பது முஸ்தபாவின் விருப் பம். எனவே, அவர் நேசக்கட்சியின் தடைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் புறப்பட்டுவிட்டார்.

பிரிட்டிஷ் தலைமையமைச்சர் லாயிட் ஜியார்ஜ் முன் னேறிவரும் துருக்கிப் படைகளை எதிர்த்துப் போரிடும் படி நேசக்கட்சிப் படைத் தலைவர்க்கு ஆணையிட்டார்.

அவர் இவ்வாணையைப் பிற நேசநாடுகளின் ஒப்புதல் இல்லாமல் பிறப்பித்தார். அதனால், பிற நேசநாடுகள் இத்தாக்குதலில் ஒத்துழைக்க மறுத்தன. பிரிட்டன் மட்டும் தனித்துத் தம்மை எதிர்த்து நிற்காது என்பதில் முஸ்தபாவுக்கு நம்பிக்கை இருந்தது. பிரிட்டன், துருக்கியை இனியும் பகைத்துக்கொள்ள விருப்பாமல், கிழக்குத்ரேஸ் பகுதியிலிருந்து கிரேக்கர்கள் சென்றுவிடவேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் கூறியது.

முதேனியா உடன்படிக்கை

முதேனியா என்பது ஒரு துறைமுகப்பட்டினம். இது மார்மோராக் கடலின்மீது உள்ளது. இங்கு 1922-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 11-ஆம் நாளன்று சமாதான மாநாடு நடைபெற்றது. அங்கோரா அரசாங்கத்தின் சார்பாக இஸ்மத் பாஷா சென்றிருந்தார். கிரேக்கர்கள் த்ரேஸிலிருந்து உடனடியாகத் திரும்பிவிடவேண்டுமென்றும், அவர்கள் மாரிட்ஸா எல்லைப் புறத்துக்கு அப்புறம் சென்றுவிடவேண்டுமென்றும், நேசக்கட்சிப் படைகள் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமென்றும் இஸ்மத் பாஷா வலியுறுத்திக் கூறினார். பிரிட்டிஷார் இவற்றை ஏற்றுக் கொண்டனர். சமாதான உடன்படிக்கையில் பிரிட்டிஷாரின் பிரதிநிதிகளும் அங்கோராப் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர். இவ்வொப்பந்தத்தின்படி கான்ஸ்டான்டிநோபிளிலிருந்த நேசநாடுகளின் அலுவலர்களும் இராணுவத்தினரும் தங்கள் தங்கள் நாடுகட்குச் சென்றுவிட்டனர்.

எது வேண்டும் ?

'ஒரே நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் வேண்டுமா ?' என்ற கேள்வி துருக்கியில் எழுந்தது. நேச நாடு

களுக்கும் துருக்கிக்கும் இருக்க வேண்டும் உறவு முறையைப் பற்றி உறுதி செய்துகொள்வதற்காக **லாசேன்** நகரத்தில் சமாதான மாநாடு கூட்டுவதாகக் கூறப்பட்டது. அம்மாநாட்டின் அழைப்பிதழ்கள் கான்ஸ்டான்டிநோபிள் அரசாங்கத்துக்கும் அங்கோரா அரசாங்கத்துக்கும் அனுப்பப்படும் என்பது தெரிவிக்கப்பட்டது. அந்நிலையில் 'ஒரே நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருக்க வேண்டுமா?' என்ற ஐயம் மக்களிடை எழுந்தது.

தேசிய சபை இந்த ஐயத்தைப் போக்குவதற்காகப் கூட்டப்பட்டது. சுல்தானை அகற்றிவிட்டு, அவருடைய ஆட்சி முறையையும் மாற்றி விட்டுக் குடியாட்சியைத் துருக்கியில் மலரச் செய்வதா, அல்லது, சுல்தானைப் பெயரளவில் வைத்துக்கொண்டு அதிகாரம் முழுமையையும் முஸ்தபாவிடம் கொடுத்து அவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிடுவதா என்பது பற்றிய விவாதம் நடைபெற்றது. பலர் பலவாறு பேசினர். "சுல்தான் நாட்டுக்குத் துரோகம் செய்தவர்; சொந்த நாட்டை வந்தவர்க்கு உரிமையாக்கினர். வீரர்கள் மலிந்த நாட்டில் அவர்களை மதியாமல்—அவர்களை அவமதிக்கும் முறையில் பிறநாடுகளிலிருந்து வீரர்களைத் தருவித்த செயல் மன்னிக்க முடியாதது," என்று உறுப்பினர் சிலர் கூறிச் சுல்தான் தேவையில்லை என்றனர். ஆயின், எந்த முடிவும் ஏற்படவில்லை. இறுதியில் முஸதபாவின் நண்பர் எழுந்தார்; முன்னரே அவர் தயாரித்துககொடுத்திருந்த தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானத்தை ஆதரிக்க அவருடைய நம்பிக்கைக்குரிய எண்பதின்மர் காத்திருந்தனர். அத் தீர்மானம் யாது ?

"பேரரசின் அரசுரிமைகள் யாவும் முழுநிலையில் பேரரசின் மக்களிடம் வந்துவிட்டன. எனவே, சுல்தான்

இனித் தேவையில்லை. சுல்தான் பதவி நீக்கப்படலாம். ஆனால், கலீபா பதவி முன்போலவே இருக்கும்."

தேசிய சபையினர் இத்தீர்மானத்தின் கருத்தினைச் சரிவரப் புரிந்துகொள்ளாத நிலையில் விவாதித்துக்கொண் டிருந்ததைக் கண்டு, இந்தத் தீர்மானம் பரிசீலனைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படலாமென்ற கருத்தை முஸ்தபா வெளியிட்டார். அதன்படி இத்தீர்மானம் பரிசீலனைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அக்குழுவினர் சமயம், சட்டம், மரபு என்னும் மூன்று வரம்புகட்கு உள்ளிருந்து தீர்மானத்தை ஆராய்ந்து குழம்பினர். முஸ்தபாவுக்கு எல்லாம் வெறுப்பாக இருந்தது; 'நாட்டுக்கு நல்லது செய்யத் தீர்மானம் கொண்டுவந்தால், அதனைச் சரிவர உணராமல் தங்களையே குழப்பிக் கொள்ளுகின்றார்களே !' என்று சொல்லிக்கொண்டு பரிசீலனைக் குழுவினர்க்காகப் பரிதாபப்பட்டார். அவர்கள் விரைந்து எந்த முடிவும் சொல்லமாட்டார்கள் போல் தோன்றியதும் முஸ்தபா பின்வருமாறு கூறினார்:

"நடைமுறையில் உள்ள ஆட்சிமுறையை ஏற்கும் தீர்மானம்தானே உங்கள் முன்னர் உள்ளது. இதை நிறைவேற்றவா இவ்வளவு தாமதம்? தேசிய சபையினரும் பரிசீலனைக் குழுவினரும் விரைந்து இத்தீர்மானத்தைப் பற்றியதொரு முடிவுக்கு வரவில்லையென்றால், முன்னரே நாங்கள் எண்ணியபடி செயல்கள் நடைபெறும். அதனால் **சில தலைகள் உருளும்** என்பதையும் மறந்து விடக்கூடாது."

வேறு என்ன சொல்லவேண்டும்? சில தலைகள் கீழே உருளும் என்பதைக் கேட்டதும் இத்தீர்மானம் சட்ட முறைப்படி எழுதப்பட்டுத் தேசிய சபையில் கொண்டுவரப்பட்டது. பின்னர்த் தீர்மானம் வாக்குக்கு

விடப்பட்டது. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது என்று பல விவாதங்களுக்கிடையே முஸ்தபா அறிவித்தார். இத்தீர்மானம் 1922–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது; பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த துருக்கி மரபொன்றை மண்மூடிப் போகச் செய்துவிட்டது; அதாவது, **சுல்தான் ஆட்சி மறைந்தது;** ஆயின், 'கலீபா' என்ற சிறப்பு மட்டும் இருந்துவந்தது.

கடைசி சுல்தான்

சுல்தான் வஹித்தீனுக்குத் தமது ஆட்சிப் பொறுப்பை விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. அவர் பிரிட்டிஷாரின் துணையை நாடினார். அவர்கள் உதவி செய்ய மறுத்துவிட்டனர். கான்ஸ்டான்டிநோபிளின் அரசாங்கப் பொறுப்பை அங்கோரா அரசாங்கத்தின் சார்பாக ரெபத் பாஷா என்பவர் ஏற்றுக்கொண்டார். அரண்மனைப் பணியாட்கள் தங்கள் தங்கள் வாழ்விடங்கட்குப் புறப்பட்டனர்.

சுல்தான் வஹித்தீன் 'மலேயா' என்னும் பிரிட்டிஷ் போர்க்கப்பலில் ஏறி மால்ட்டா தீவிற்குச் சென்றார். இந்நிகழ்ச்சி 1922-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17–ஆம் நாளன்று நடைபெற்றது.

சுல்தான் வஹித்தீனுடைய உறவினரான அப்துல் மஜீத்துக்குக் கலீபா பதவி அங்கோரா அரசாங்கத்தால் தரப்பட்டது.

முதல் வெற்றி

சமாதான மாநாடு லாசேன் நகரத்தில் தொடங்கியது. மாநாட்டு அரங்கில் பன்னிரண்டு பேரரசுகளின் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தனர். அங்கோராவின்-துருக்கியின்

பிரதிநிதியாக இஸ்மத் பாஷா சென்றார். பிற நாடு களின் பிரதிநிதிகள் அவரை மரியாதையுடன் வரவேற்க வில்லை; அவரைக் கண்டதும் ஏளனமாக நகைத்தனர். இஸ்மத் எதனையும் கவனியாதவர்போலத் துருக்கிக்கு ஒதுக்கப்பட்ட இடம் நோக்கிச் சென்றார். அங்கு அவர் க்குக் கையற்ற நாற்காலி போடப்பட்டிருந்தது. ஏனைய எல்லாப் பிரதிநிதிகட்கும் கையுடைய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. துருக்கியை அவமதிக்கவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இந்த ஏற்பாடு செய்யப்பட் டது. இஸ்மத் அந்த நாற்காலியின் அருகில் செல்வ தற்குள் பணியாள் ஒருவன் விரைந்து வந்து, போதிய நேரமில்லாமையால் கையுள்ள நாற்காலியைத் தேடிக் கொண்டுவர முடியாது போனமைக்காக வருத்தம் தெரி வித்து மன்னிப்பு வேண்டினன். இஸ்மத், 'இந்தக் குறை நீங்கிய பின்னர் வருகிறேன்' என்று கூறிவிட்டு நகர்ந்தார். எல்லாப் பிரதிநிதிகளும் திகைத்தனர். ஒரு நொடிக்குள் கையுடைய நாற்காலி கொண்டுவந்து போடப்பட்டது. இது இஸ்மத்துக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

இரண்டாம் வெற்றி

மாநாடு தொடங்கியது. செவர்ஸ் உடன்படிக்கை யைச் சில பகுதிகளில் மாற்றிக் கொடுக்கும் முறையில் பேச்சுக்கள் தொடங்கினர். இஸ்மத் இதனைத்தடுக்க விரும் பினர்; துருக்கிக்கு இம்மாநாட்டில் பிற வல்லரசுகளுடன் சமநிலை உள்ளது என்பதை யாவரும் உணரவேண்டும் என்று எண்ணினர்; செவர்ஸ் உடன்படிக்கைக்கும் முஸ் தபா அரசாங்கத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும், அதனை அடிப்படையாகக் கொண்டு மாநாட்டுப் பேச்சுக்கள் தொடங்கப்படுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் கூறினர். முதேனியா சமாதான உடன்படிக்கை

நிறைவேறியபோது துருக்கி வெற்றி அடைந்த நாடு என்ற முறையில்தான் பேச்சுவார்த்தைகள் நடந்தன என்றும், எனவே, அம்மாநாட்டில் துருக்கிசகுப் பிறநாடு களுக்குள்ள தகுதிகள் உண்டு என்றும், அந்த எண்ணத் தின் அடிப்படையில் பேச்சுக்கள் தொடங்கப்படுவதையே தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினர். வேறு வழியில்லாமல் துருக்கிக்கு மாநாட்டில் சம உரிமை உண்டு என்பது அறிவிக்கப்பட்டது.

இஃது இஸ்மத்தின் இரண்டாம் வெற்றி.

மாநாடு முறிந்தது

போர்க்குக் காரணம் துருக்கி என்று நேசநாடுகள் குற்றம் சாட்டின. இஸ்மத் இதனைக் கேட்டதும் எழுந்தார்; எல்லோரும் வியக்கும் வண்ணம் பேசினர்:

"இது தேவையில்லாத செய்தி. நான் இதுபற்றி விவாதிக்கவும் விரும்பவில்லை. அப்படி நான் விவாதிக்க வேண்டுமாயின், துருக்கியின் கடந்த முப்பதாண்டு அரசி யல் வாழ்வைப் புரட்டிப் பார்க்கவேண்டும். எனக்கு இப் போது அதற்கு நேரமில்லை. நேரத்தை உண்டாககிக் கொண்டு அப்பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கும் அளவில் என் மனத்துக்கு அமைதியும் இல்லை. புதிய துருக்கி அரசியல், பொருளாதாரம், இராணுவம் முதலிய எல்லாத் துறைகளிலும் உரிமையுடையதாகவே இருக்க விரும்புகிறது."

சிறந்த அரசியல் அறிஞரான கர்சன் பிரபுவுக்கும் இஸ்மத்துக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டாயின. கர்சன் பிரபு துருக்கியைத் தலையெடுக்க வொட்டாமல் செய்துவிடவேண்டும் என்று எண்ணிப் பேசினர். ஆதலால், இஸ்மத் எழுந்து, "துருக்கிக்குப் பிறநாடு

களைக் கைப்பற்ற வேண்டும் என்னும் ஆாவம் இல்லை. அதன் எல்லையிலுள்ள பிறநாட்டுப் பகுதிகளை அந்தந்த நாட்டுக்கு உரிமையாக்கிவிட அது காத்துள்ளது. ஆனால், துருக்கி முழு உரிமை பெற்ற நாடாக இருக்கவேண்டு மென்று விரும்புகிறது," என்று மிகத் தெளிவாகக் கூறினர். கர்சன் பிரபு இஸ்மத் கூற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

டார்டனெல்ஸ் நீர்ச்சந்தி யாருடைய ஆதிக்கத்தில் இருக்கவேண்டும் என்பது பற்றிக் கேட்கப்பட்டது. இந்த நீர்ச்சந்தியில் எல்லா நாடுகளும் போக்கு வரவு வைத்துக் கொள்ளலாம் என்றும் இராணுவப் பாதுகாப்பு இதற்குத் தேவையில்லை என்றும் பிரிட்டன் கூறியதை இஸ்மத் ஒப்புக்கொண்டார். துருக்கியில் அயலார்களுக்கு அது காறும் இருந்து வந்த பொருளாதாரச் சலுகைகள் உடனே அகற்றப்படவேண்டும் என்று இஸ்மத் கூறினர். இதற்குப் பலத்த எதிர்ப்புத் தோன்றியது. துருக்கியின் பொருளாதார நிலை தொடக்க நிலையிலேயே இருப்பதால் பிற நாடுகளின் உதவி அதற்கு இருப்பது நல்லது என்று பிறர் கூறினர். இஸ்மத்தோ அதற்கு இணங்காமல், துருக்கியின் பொருளாதார நிலையைப் பற்றிக் கவலை எவருக்கும் வேண்டாவென்றும், துருக்கியில் அயலார்க்கிருந்த பொருளாதாரச் சலுகைகள் எல்லாம் உடனே நீககப்படத்தான் வேண்டு மென்றும் பிடிவாதமாகக் கூறினர்.

மாநாடு மூன்று நாட்கள் நடந்தது. இஸ்மத்தின் பிடிவாதத்தால் மாநாடு எவ்வித முடிவுக்கும் வராமல் 1923-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் வாரத்தில் கலைந்துவிட்டது.

மக்கள் கட்சி

முஸ்தபாவுக்கு எதிராகத் தேசிய சபையில் இருந்தவர் அனைவரும் லாசேன் மாநாடு எந்த முடிவும் இல்லாமல் கலைந்ததைத் தங்கள் தவறான பிரசாரங்கட்குப் பயன் படுத்திக்கொண்டனர். அவர்களிடையே விவாதங்கள் தொடர்ந்து பல வாரங்கள் நடைபெற்றன. அவர்கள் முதலில் இஸ்மத் பாஷாவை வீழ்த்துவதிலேயே கருத்தைச் செலுத்தினர்; இஸ்மத்தின் திறமையின்மையாலேயே சமாதான மாநாடு முறிந்துவிட்டது என்று குற்றஞ் சாட்டினர்; அடுத்தமுறை நடக்கவிருக்கும் லாசேன் மாநாட்டில் துருக்கி கட்டாயமாகக் கலந்து கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தனர்.

முஸ்தபா அமைச்சர் அவையினரையும் தம் கட்சியைச் சார்ந்தவர்களையும் ஒருநாள் நள்ளிரவில் தமது இல்லத்துக்கு அழைத்துப் பல முன்னேற்பாடுகளைச் செய்தார். அடுத்த நாள் தேசிய சபையில் தற்போதைய தேசிய சபை கலைக்கப்படும் என்றும், புதிய தேர்தல்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. முஸ்தபா புதிய தேர்தல்களில் தமது கட்சியை வலுப்படுத்திக்கொள்ள முயன்றார்; மின்னல் வேகத்தில் பல இடங்கட்குச் சென்று பிரசாரம் செய்தார்; ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படக்கூடிய பலரைத் தம்முடைய கட்சியில் சேர்த்துக்கொள்ள எண்ணினார்; பல கூட்டங்களில் பேசினார். அவரைப் பின்பற்றியவர்களை எல்லாம் ஒன்று கூட்டி **'மக்கள் கட்சி'** என்னும் பெயரில் புதியதோர் அமைப்பை உண்டாக்கினார். இப்புதிய கட்சியின் பெயரால் முஸ்தபா விடுத்த அறிக்கை ஒன்றில் தேசிய இயக்கம் அதுகாறும் நிறைவேற்றிய செயல்களையெல்லாம் தெளிவுபட எழுதியிருந்தார்.

மக்கள் சமிதியின் மூலமாகத்தான் அரசுரிமை பிறக் கின்றது என்றும், இதனை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு ஆவன செய்வதே தேசிய சபையின் குறிக் கோளாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டிருந்தது.

தேர்தல் நடைபெற்றது. எதிர்க்கட்சியினர் தாங்கள் பெருவாரியாக வெற்றி பெற்று முஸ்தபாவின் செல் வாக்கை அழித்துவிட வேண்டுமென்று எண்ணினர். ஆனால், தேர்தலில் மக்கள் கட்சியின் உறுப்பினர்களே பெரும்பான்மையினராக வெற்றி பெற்றனர். ஆயினும், அவர்கள் அனைவரும் முஸ்தபாவின் நம்பிக்கைக்கு உரியவரல்லர்.

மக்கள் கட்சியை நடத்தக் குழுவினையோ பொறுப் பாளர்களையோ முஸ்தபா நியமிக்கவில்லை. அவ்வாறு நியமிப்பது தீமையாக முடியும் என்று அவர் எண்ணினர். கட்சித் தலைவன் ஒருவனே என்றும், அவனுடைய ஆணைக்குட்பட்டே கட்சி இயங்கவேண்டும் என்றும் அறிவித்தார்.

மீண்டும் லாசேன் மாநாடு

லாசேன் மாநாடு 1923-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங் கள் 9-ஆம் நாள் மீண்டும் தொடங்கியது. கர்சன் பிரபு வுக்குப் பதிலாக கான்ஸ்டான்டிநோபிளில் பிரிட்டனின் தூதுவராக இருந்த ஸர் ஹோரேஸ் ரம்போல்ட் கலந்து கொண்டார். மாநாட்டில் ஒரு மனதாகத் தீர்மானங்கள் நிறைவேற மூன்று திங்கள்கள் ஆயின. 1923-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 24-ஆம் நாளன்று லாசேன் மாநாடு வெற்றியுற முடிந்தது. இவ்வெற்றியினை லாசேன் நகரத்து மாதா கோவிலின் மணி விடாமல் அடித்துத் தெரிவித்தது.

லாசேன் உடன்படிக்கையால் துருக்கிக்கு ஐரோப்பிய அரசியலில் சிறப்பிடம் கிடைத்தது; துருக்கியில் அயல் நாட்டாரது ஆதிக்கம் ஒழிந்தது; அவர்கள துருக்கியிடம் கொண்டிருந்த பகைமை மறைந்தது. துருக்கியிலிருந்த அயலார் படைகள் எல்லாம் வெளியேறின. துருக்கியின் தலைநகரம் 1923-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 13-ஆம் நாளன்று கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அங்கோராவுக்கு மாற்றப்பட்டது.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

9. துருக்கியில் மக்களாட்சி

எதிரிகளின் செயல்

முஸ்தபாவுக்கு நண்பர்களாக இருந்த பலரும், நாளும் அவருக்குப்பெருகிவந்த புகழைக்கண்டு பொருமை கொண்டனர்; முஸ்தபாவுக்கு மாருக என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யத் தொடங்கினர்கள். இவர்களுள் பலர் புதிய தேசிய பாராளுமன்றத்தில் இடம் பெற்றனர். அமைச்சரவையை அமைக்கும்அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உண்டு என்னும் சட்டத்தைத் துணையாகக் கொண்டு இவர்கள் முஸ்தபாவுக்குப் பிடிக்காத பலரை அமைச்சரவையில் புகுத்தினர். தம்முடைய எதிரிகளின் மனப்போக்கையும் செயல்முறைகளையும் முஸ்தபா கவனிக்கத் தவறவில்லை.

பெத்தி பேயின் தலைமையில் இயங்கிய அமைச்சரவையினரைப் பதவியை விட்டு விலகிவிடுமாறு முஸ்தபா கூறினர்; அதன்படியே அவர்கள் விலகிவிட்டனர். பதவி விலகிய அமைச்சர்கள் பாராளுமன்றத்தால் மீண்டும் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களாயின், அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் கண்டிப்பாகக் கூறினர்.

புதிய அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புப் பாராளுமன்றத்துக்கு வந்தது. ஒரு மனதாகத் தீர்மானிக்கக்கூடிய முடிவு எதுவுமே முஸ்தபாவின் எதிரிகளால் கொண்டுவர முடியவில்லை. ஒருவர்

ஒருவரை அமைச்சராக இருக்குமாறு வேண்டி முன்மொழிந்தால் அதனை வழி மொழியவே மற்றொருவர் தயாராயிருப்பதில்லை. முன்மொழிதலும் வழி மொழிதலும் நடைபெற்றுவிட்டாலும், அவரைப் பற்றிய பல கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுப் பொழுதைப் போக்கினர். மக்கள் கட்சிக் கூட்டமும் கூடியது; அக்கூட்டமும் அமைச்சரவையைப் பற்றி ஒரு முடிவுக்கும் வரவில்லை.

மக்களாட்சி

1923–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28-ஆம் நாள் முஸ்தபா சாங்காயாவில் உள்ள தம் வீட்டிற்கு இன்றியமையாத சில நண்பர்களை வரவழைத்தார். விருந்து நடந்தது. அவர்கள் அனைவரும் வியக்கும் வகையில், 'நாளை நாம் சேர்ந்து மக்களாட்சியை நிறுவிவிடுவோம்' என்றார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஒப்பினர். மறுநாள் நிகழ்ச்சியில் யார் யார் எப்படி யெப்படி எது எதுபற்றிப் பேசுதல் வேண்டும் என்று சிந்திக்கப்பட்டது.

மறுநாள் மக்கள் கட்சிக் கூட்டம் கூடியது. முஸ்தபா முன்னேற்பாட்டின்படி இதற்கு வரவில்லை. பெத்தி பே அமைச்சரவையின் பட்டியல் ஒன்றைப் படித்தார். தாம் கொண்டுவரும் தீர்மானம் நிறைவேறாது என்று பெத்தி பேக்கு உறுதியாகத் தெரியும். பெத்தி பே படித்த அமைச்சரவைப் பட்டியல் பற்றி விவாதம் நடைபெற்றது. உறுப்பினர்கள் தங்களுள் ஒரு முடிவுக்கு வரமுடியாத குழப்ப நிலை ஏற்பட்டது. இந்தக் குழப்ப நிலையில், அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை முஸ்தபாவிடம் ஒப்படைத்துவிட்டால் என்ன என்று கெமாலுத்தீன் பாஷா என்பவர் கேட்டார். முஸ்தபாவிடம் முழுப்

பொறுப்பை ஒப்படைக்க உறுப்பினர் இசைந்தனர். அவர் அங்கு வரவழைக்கப்பட்டார்.

முஸ்தபா, அரசாங்க முறையில் உள்ள ஊழலினுல் தான் குழப்பங்களெல்லாம் நேருகின்றன என்றும், குழப்பங்கள் இல்லாத முறையில் செயல்களை அமைதியாகச் செய்துமுடிக்க வேண்டுமாயின், ஆட்சி முறையின் அடிப்படையில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும் கூறினுர். உறுப்பினர்கள் அதுபற்றிச் சிந்திப்பதற்குள், முன்னரே தயாரித்து வைத்திருந்த தீர்மானமொன்றைப் படித்தார். அத்தீர்மானம் பின்வருமாறு :

''அரசாங்கம் மக்களாட்சி முறையை ஒட்டியதாக இருக்கும். பாராளுமன்றத்தால் நான்காண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுபவர் மக்கள் ஆட்சியின் தலைவராக இருப்பார். அத்தலைவர் அமைச்சரவைக்குத் தலைவராக வரக்கூடிய ஒருவரது துணையைக்கொண்டு ஏனைய அமைச்சர்களை அமர்த்தும் பொறுப்புடையவராக விளங்குவார். அத்தலைவரால் அமைக்கப்பட்ட அமைச்சரவை பின்னர்ப் பாராளுமன்றத்தால் ஒப்புக்கொள்ளப்படும்.''

வழக்கப்படி முஸ்தபா கொண்டு வந்த இத்தீர்மானத்தின்மீதும் விவாதம் நடைபற்றது. முஸ்தபாவின் நண்பர்களே வேண்டுமென்று விவாதம் செய்தார்கள். சற்றும் எதிர்பாராத முறையில் முஸ்தபாவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் பலரைத் திகைப்படையச்செய்து வாயடைத்துவிட்டதே இதற்குக் காரணமாகும்; முஸ்தபாவின் தீர்மானம் இறுதியில் நிறைவேறியது. முஸ்தபாவே குடியரசின்—மக்களாட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துருக்கியில் மக்களாட்சி அமைந்துவிட்டது என்பதை அங்கோராவில் 101 குண்டுகள் இரவு பன்னிரண்டு மணியளவில் முழங்கி அறிவித்தன.

அரசியல் பகைவர்

விரைந்து வளரும் துருக்கியின் முன்னேற்றங்களை முஸ்தபாவிடம் கொண்ட பகைமையால், தடுத்துவிட வேண்டுமென்று அவருடைய அரசியல் பகைவர் பலர் எண்ணினர். அவர்கள் ஒன்று சேர்ந்தனர்; கலீபாவின் துணைகொண்டு தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கருதினர். அரசப் பொறுப்புக்குரிய ஒருவர், பதவியிழந்து பெயரளவில் மதத் தலைவராக எல்லா ஆடம்பரங்களுடனும் இருப்பாரானால், அவர் உள்ளம் அதனை வெறுத்துப் பழமையை விரும்பும் என்றும், அதனால் கலீபா தங்களை ஆதரிப்பார் என்றும் அவர்கள் கருதினர். முஸ்தபாவின் அரசியல் பகைவரான ரவுப் பே முதலியோர் கான்ஸ்டான்டிநோபிள் சென்று கலீபாவுக்கு ஆதரவாகப் பேசினர்; மக்களாட்சி முறையைத் தாக்கிப் பேசினர். எவ்வாறேனும் முடியரசை மீண்டும் ஏற்படுத்தவேண்டும் என்று முடிவு செய்தனர்.

கான்ஸ்டான்டிநோபிள் செய்தித் தாள்கள் பல. மக்களாட்சி முறையைத் தாக்கி எழுதின. கலீபாவுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்றும், கொடுக்கப் படவேண்டும் என்றும் திரு. ஆகாகான் அவர்கள் குடியரசுக்கு எழுதிய கடிதமொன்றை அச்செய்தித் தாள்களுள் ஒன்று வெளியிட்டது. இதில் சுவையான செய்தி என்னவெனில், கலீபா அப்துல் மஜீத் இவற்றுள் எதிலும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்ததேயாம். அவர் தம்முடைய கடமைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். குடியரசுக்கு எதிராக நடத்தப்படும் கூட்டங்கள் குறித்தும் தமக்கு ஆதரவாக நடத்தப்படும் கூட்டங்கள் குறித்தும் அவர் கவலைப்படவில்லை; அறிவியல் நூல்களைப் படிப்பதிலும் ஓவியங்கள் தீட்டுவதிலுமே காலத்தைக் கழித்தார். தம்முடைய அவ்விரண்டு செயல்களும் மனத்தை அமைதி

யாக வைத்துக்கொள்ளத் துணை புரிந்தன என்றும், ஓவி யம் வரையும் பொழுதெல்லாம் தம்மையும் மறந்துவிடும் நிலை நேர்கிறது என்றும் கூறி மகிழ்ந்தார்.

குடியரசுக்கு மாருக எழுதிய செய்தித்தாளின் ஆசிரி யர்மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது; அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார். "துருக்கி இப்பொழுது தானே குடியரசு அமைப்பைப் பெற்றுள்ளது. தொடக்க காலத்திலேயே இவ்வளவு எதிர்ப்புகள் உண்டாகின்ற னவே!" என்று எண்ணிய முஸ்தபா, அவற்றைத் தொடக்க நிலையிலேயே அடக்கிவிட முனைந்தார். கலீபாவின் செயலாளரிடமிருந்து முஸ்தபாவுக்குக் கடி தம் ஒன்று வந்தது. அதில் கலீபாவுக்குக் கொடுக்கப்படும் பணம் அவரது செலவுக்குப் போதியதாக இல்லையென் றும், தரப்படும் பணத்தின் தொகையை அவரது தகுதிக் கேற்பக் கூட்டுமாறு வேண்டியும் எழுதப்பட்டிருந்தது. அத்துடன் கலீபா அரசாங்கத்தால் நன்கு போற்றப்படு வதில்லை என்றும் அக்கடிதம் குற்றம் சாட்டியது. முஸ்தபா அக்கடிதத்திற்குப் பின்வருமாறு பதில் எழுதினர்:

"கலீபாவின் ஆடம்பரவாழ்வுக்கெல்லாம் அரசாங்கம் துணை நிற்க வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது மக்களாட்சி முறைக்கு மாறுபட்டது. அரசாங்கம் கலீபா வின் அதிகார மயக்கத்தை வெறுக்கின்றது. செய லாளர் தலைமைச் செயலாளர் ஆகியோர் கலீபாவுக்குத் தேவையில்லை. குடியரசுத் தலைவருக்கென்று அரசாங்கக் கருவூலத்திலிருந்து செலவிடப்படும் தொகையைவிடக் குறைவான தொகை கலீபாவுக்கு ஒதுக்கப்படுவதையே அரசாங்கம் சரியென்று கருதுகின்றது."

கலீபா பதவி ஒழிந்தது

1924–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதலாம் நாளன்று தேசியப் பாராளுமன்றம் கூடியது. இதில்

முஸ்தபா நீண்டதொரு சொற்பொழிவு செய்தார்; **மதம் வேறு, அரசியல் வேறு** என்று முழங்கினர்; இரண்டையும் இணைத்துப் பேசுவது தவருகும் என்ருர்; இரண்டும் தனித்தனியாக இருந்தால்தான் இரண்டும் தத்தமக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்ய முடியுமென்று தெளிவு படுத்தினர். வழக்கம்போல் முஸ்தபாவின் இந்தச் சொற்பொழிவின்மீது விவாதம் நடைபெற்றது. முடிவில் தீர்மானம் நிறைவேறியது. நிறைவேறிய தீர்மானத்தை ஒட்டிப் பிறப்பிக்கப்பட்ட அவசர ஆணையில், கலீபாவும் அவருடைய மரபினரும் துருக்கியைவிட்டுப் பத்து நாட்களுள் வெளியேறவேண்டும் என்பது குறிப்பிடப் பட்டிருந்தது.

1924-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 4-ஆம் நாளன்று துருக்கி வரலாற்றில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. அன்று அப்துல் மஜீத் கான்ஸ்டான்டி நோபிளைவிட்டு வெளியேறினர். அவர்தாம் கடைசி கலீபா.

மக்களன்பு

மக்களன்பைக் கொண்டுதான் எந்த ஒரு செயலையும் செய்யமுடியும் என்பதை முஸ்தபா அநுபவ வாயிலாக அறிந்தார். ஆதலின் அவர் மக்களுடைய அன்பைப்பெற எல்லா வழிகளிலும் முயன்ருர்; கிராமங்கட்குச் சென்ருர்; கிராம மக்களுடைய மன நிலையை நன்குணர்ந்தார்; அவர்களுக்கு ஏற்ப நடந்துகொண்டார்; அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்தார்; தனித்தனியாய் ஒவ்வொரு பகுதியினரையும் சென்று கண்டு, செய்யவேண்டுவது யாது என்று வினவினர்; அவர்கள் விரும்பியனயெல்லாம் முடிந்த அளவுக்குச் செய்தார். இதனல் மக்கள் முஸ்தபாவைத் தங்களை வாழ்விக்க வந்த தெய்வம் என்று

எண்ணி வழிபட்டனர். ஏன்—எப்படி—என்றெல்லாம் அவர்கள் தங்களைக் குழப்பிக்கொள்ள விரும்பவில்லை. 'முஸ்தபா சொன்னால் சரி; அவர் நமது நன்மைக்காகத் தான் சொல்வார்; அவர் சொன்னபடியே செய்வோம்,' என்று அவர்கள் வாழ்ந்தனர். முஸ்தபாவுக்கு இது பெரு வெற்றியாய் அமைந்துவிட்டது.

நிலவருமானத்தில் பத்தில் ஒரு பகுதியைச் சமய நிலையங்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கவேண்டும் என்று நெடுங்காலமாக நிலவி வந்த சட்டத்தை முஸ்தபா அகற்றிவிட்டார். இது கிராம மக்களுக்குப் பெரு நன்மை யாக முடிந்தது.

இராணுவத்தில் திருத்தம்

இராணுவத்தைத் தூய்மை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இராணுவத் தளபதிகளுள் பலர் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். இதனால் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்ய முடியாமல் இருந்தது. எனவே, இராணுவத் தளபதிகள் பாராளுமன்றத்தில் பதவி தாங்கக்கூடாது என்றும், பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் இராணுவத் தளபதி களாக இருக்கக்கூடாது என்றும் ஆணை பிறப்பிக்கப்பட் டது. முஸ்தபாவுக்கு மாறாகப் பாராளுமன்றத்தில் அமர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்ய முனைந்த இராணு வத் தளபதிகள் தங்கள் இராணுவப் பதவியை விட்டு விலகினர். இதன்பின்னர், துருக்கியைக் கட்டிக் காக்கத் தக்க இராணுவ அமைப்பு ஏற்பட்டது.

முன்னேற்றக் கட்சி

முஸ்தபா மக்கள் கட்சியிலிருந்து விலகிவிட வேண் டும் என்றும், குடியரசுத் தலைவராக இருப்பவர் தனி ஒரு

கட்சி அமைப்பில் தொடர்பு கொண்டிருப்பது நேர்மை யற்ற செயல் என்றும் சிலர் கிளர்ச்சி செய்தனர். "அறிவுத் துறையிலும் சமுதாயத் துறையிலும் துருக்கி மக்கட் சமுதாயம் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதையே நான் தொடர்பு கொண்டுள்ள மக்கள் கட்சி கூறுகின்றது. இது தவறானது என்றோ, மக்கள் நன்மைக்குப் புறம்பானது என்றோ எவரும் கூறமுடியாது. ஒவ்வொரு துருக்கியனும் தன்னுடைய முன்னேற்றத்தைத்தான் விரும்புவான். தனி மனிதனுடைய நன்மைகளின் காப்பு அமைப்புக்காகத்தான் மக்கள் கட்சி பணி புரிந்துவருகின்றது. எனவே, மக்கள் கட்சியோடு நான் உறவு கொண்டிருப்பதுபற்றியோ அதை நான் நடத்திச் செல்வது பற்றியோ யாரும் ஐயப் படவேண்டா," என்று முஸ்தபா மறுமொழி பகர்ந்தார்.

இதனால் எதிர்க்கட்சியினர் மேலும் கோபம் கொண்டனர். மககள் கட்சியினின்றும் பலர் விலகிவிட்டனர். இவர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு, "குடியரசு முன்னேற்றக் கட்சி" என்னும் புதியதோர் அமைப்பை அமைத்துக் கொண்டனர்; தங்கள் எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படையாகவே காட்டத் தொடங்கினர்; தலைமை அமைச்சராயிருந்த இஸ்மத் பாஷாவைப் பழித்தும் இழித்தும் பேசினர். அதனால் இஸ்மத பொறுப்பிலிருந்து விலகி விட்டார். பாராளுமன்றத்தின் தலைவராயிருந்த பெத்தி பே அமைச்சரவையின் தலைவரானார். பாராளுமன்றக் கூட்டங்கள் குடியரசு முன்னேற்றக கட்சியின் தோற்றத்திற்குப் பின்பு அமைதியாக நடைபெறவில்லை; குழப்பங்கள் மிகுந்தன; உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருதியர் கலகம்

கலீபா பதவியைச் சட்டத்தின் மூலமாக அகற்றிவிட்டதால் குருதியர்களின் சினம் மிகுந்தது. அவர்கள்

நீண்டகாலமாக அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடத்திவந்தனர். இப்போது அவர்களுடைய சினம் மதத் தலைவரின் பதவி பறிக்கப்பட்டுவிட்டதால் பெருகி விட்டது. கடைசி கலீபாவின் மகனுன சலீம் எப்பெண்டி என்பவனைச் சுல்தானுகவும் கலீபாவாகவும் கொண்டு வரவேண்டும் என்று இக்குருதியர் முயன்றனர். **ஷேக் சையத்** என்பவர் இவர்களின் தலைவராக விளங்கினுர்.

குருதியரின் கலகத்தை அடக்கப் பெத்தி பேயின் பொறுப்பில் படையொன்று அனுப்பப்பட்டது. இப்படை யால் குருதியரை வெற்றிகொள்ள முடியவில்லை. இதனுல், மக்கள் கட்சியின் உறுப்பினர் பெத்தி பேயைக் குறை கூறினர். அவர்மீது குறைகூறித் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. பெத்தி பே பதவி விலகினுர். இஸ்மத் பாஷாவைத் தலைமையாகக் கொண்ட அமைச் சரவை மீண்டும் அமைக்கப்பட்டது.

சர்வாதிகாரம்

முஸ்தபா பார்லிமெண்டைக் கூட்டினுர்; அரசின் அலங்கோல நிலையைச் சுட்டிப் பேசினுர்; நாடு அமைதி யான நிலையை அடைவதற்குரிய முயற்சிகளை மேற்கொள் ளக்கூடிய விசேட அதிகாரங்கள் தமக்குத் தரப்படல் வேண்டும் என்று வேண்டினுர். அவருடைய வேண்டு கோளைப் பாராளுமன்றம் ஒருமனதாக வரவேற்றது.

முஸ்தபா பாராளுமன்றம் அளித்த விசேட அதிகாரத் தைக்கொண்டு, இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார்; பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங் கத்துக்கு மாருகவும் பேசலாம் என்றிருந்த நிலைமையை மாற்றினுர். அரசாங்கத்தைக் குறைகூறுபவர்கள் கடுந் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பது அறிவிக்கப்பட்

டது. செய்தி இதழ்கள் அரசாங்கத்தைப் பழித்து எழுது வது தடுக்கப்பட்டது. இதனால், பல செய்தித்தாள்கள் வெளிவராது போயின. மறைமுகமாக அரசாங்கத்துக்கு விரோதமாகச் செயலாற்றியதாகக் கருதப்பட்ட நூற் றைம்பதின்மர் நாடு கடத்தப்பட்டனர்; 'குடியரசு முன் னேற்றக் கட்சியின் அலுவலகம் மூடப்பட்டது; கலகத் தலைவரான குருதியர் தலைவர் ஷேக் சையத் தூக்கிலிடப் பட்டார். கலகம் ஒருவாறு அடங்கியது.

குருதியர் கிழக்கு அனடோலியா மாகாணத்தில் மீண் டும் கலகத்தைத் தொடங்கினர். துருக்கியில் நடை முறைக்கு வந்த பல சமுதாய சீர்திருத்தங்களை எதிர்த்து இக்கலகம் செய்யப்பட்டது. பழைமையில் பற்றும் புதுமை யில் வெறுப்புங் கொண்ட குருதியரால் கிளப்பப்பட்ட அக்கலகம் விரைவில் அடக்கப்பட்டுவிட்டது. அரசியல் துறையில் முஸ்தபாவுக்கு இருந்த எதிர்ப்பு ஒழிந்தது. அதனால், அவரது கருத்துச் சமுதாய சீர்திருத்தங்களைப் பற்றியே இருந்தது.

10. சமுதாயப் புரட்சி

சமுதாயப் புரட்சி

சமுதாயம் என்பது மக்களைக் கொண்டதல்லவா? மக்களுடைய நல்வாழ்வுக்காகச் செய்யப்படும் சீர்திருத் தங்கள் அவற்றை விரும்பாதவர்களுக்குப் புரட்சியாகத் தோன்றும். ஒவ்வொரு சமுதாயத்திலும் காலத்துக்கேற்பச் செய்யவேண்டும் சீர்திருத்தச் செயல்கள் பலவாக இருக் கும். அவ்வக்காலத்தில் தோன்றும் பெரியார்கள் சமுதா யத்தைச் சீர்திருத்துவது தங்கள் கடமையெனக் கருதி அச்செயல்களைச் செய்து முடிப்பர். மக்கள் அச்செயல் களைப் 'புரட்சிச் செயல்கள்' என்று கூறுவர். நாம் எந்தச் சமுதாய வரலாற்றைப் படித்தாலும் இதனை நன் குணரலாம்.

முஸ்தபா துருக்கியில் குடியாட்சியை நிலைபெறச் செய்யவேண்டும் என்று எண்ணியதில் வெற்றி பெற்றார்; குடியரசில் மகிழ்ச்சியோடு இருக்கும் துருக்கியர் பிற நாட்டார் மதித்துப் போற்றும் அளவில் வாழவேண்டும் என்றும் எண்ணினார்; அதனால், நெடுங்காலமாக நிலவி வந்த பல பழக்கவழக்கங்களைப் படிப்படியாக மாற்றி அமைக்க முனைந்தார். அவர் தாம் எண்ணியதைச் செய்து முடிக்கப் பெருந்துணையாக இராணுவ ஆட்சி இருந்தது.

உடையில் மாற்றம்

பிறர் இப்படியெல்லாம் வாழவேண்டும் என்று ஓயா மல் அறவுரை சொல்லிக்கொண்டிருப்பது சமுதாயத்தைச்

சீர்திருத்துவதற்கு ஒரு வழி; பிறர் இப்படி வாழ வேண்டும் என்று சொல்லுவதைவிடப் பிறர் எவ்வாறு வாழ வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அதேபோல நாம் வாழ்ந்து காட்டுவோம் என்று எண்ணுவது மற்றொரு வகை. இவ்விரண்டினுள் பின்பு கூறியதே உண்மையான சீர்த்திருத்தத்துக்கு வழி வகுக்கும். முஸ்தபா பிறரைக்கண்டு இப்படி வாழுங்கள் என்று சொல்லாமல், **வாழ்ந்து காட்டினார்**; தாம் பிறப்பித்த சட்டங்கட்குத் தாமே வழிகாட்டியாய் நின்றார்.

துருக்கியர் உடையில் மாற்றம் காணவேண்டும் என்னும் வேட்கை முஸ்தபாவுக்கு நெடுங்காலமாக இருந்தது. எந்த ஒரு சீர்திருத்தத்தையும் விரைந்து நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட முடியாதல்லவா? அவர் சீர்த்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் விரைவு காட்டவில்லை; பொறுமையோடு மக்கள் மனத்தை அறிந்தே எதனையும் செய்தார். எனவே, எதனையும் சாதிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது.

ஆங்கிலேயர்களைப்போல உடையணிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணிய முஸ்தபா, ஐரோப்பிய உடைகளை அணிந்துகொண்டே எங்கும் சென்றார்; இராணுவ வீரர்கள் அணிந்துவந்த ‘பெஸ்’ என்ற குல்லாயை மாற்றி, அவர்களுக்கு ஐரோப்பிய வீரர்கள் அணிந்த தொப்பியைக் கொடுத்தார். வீரர்கள் மறுமொழி கூறாமல் அணிந்து மகிழ்ந்தனர். முஸ்தபாவைப்போலவே ஐரோப்பிய உடைகளையே இராணுவ அதிகாரிகளும் அணிந்துகொண்டனர். பின்னரே அவர் உடையில் சீர்திருத்தம் வேண்டும் என்பதுபற்றிப் பேசினார்.

“நாம் அணியும் உடையைக் கொண்டுதான் உலக அரங்கில் நாம் மதிப்பிடப்படுவோம். இதனால்தான்

நல்ல-தூய ஆடைகளை அணியாதவன் அரைமனிதன் என்று கூறிப் புறக்கணிக்கப்படுகின்றான். நாம் தூய ஆடைகளை அணிந்தவனையே விரும்புகின்றோம். நம் கண்களும் மனமும் கவர்ச்சிமிக்க ஆடைகளால் கவரப் படுதலை நாம் அறிவோம். கவர்ச்சியான ஆடைகளை அணிந்துசெல்வோர் நம்மைக் கடந்து சென்ற பின்னரும் நம் மனம் அவர்களைத் திரும்பிப்பார்க்கச் சொல்லுகின்றது. ஆதலால் நாம் உடைகளைப்பற்றிக் கவலைசெலுத்த வேண்டும். ஐரோப்பிய நாட்டு உடைகள் நமக்கு எளிமையாகவும் இருக்கும், அவை நீண்டகாலம் உழைப்பவை. எனவே, நாம் இனி அவற்றையே அணிவோம்."

துருக்கியர் எல்லோரும் இராணுவ வீரர்களைப் போலவே 'பெஸ்' என்ற குல்லாயை விட்டுவிட்டுத் தொப்பியைத்தான் அணிந்துகொள்ள வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் மக்களிடையே கிளர்ச்சியை உண்டுபண்ணியது. ஊர்க்காவலர் மக்கள் அணிந்திருந்த 'பெஸ்' குல்லாய்களைப் பிடுங்கி எறிந்த செய்கை, அவர்கள் உள்ளத்தைப் பெரிதும் துன்புறுத்தியது. "தொப்பி அணிந்துகொள்வது சமய முறைக்கு முரண்பட்டது. தொப்பிகள் கிறிஸ்தவர்க்கு உரியது. அவற்றை இசுலாமியர்கள்-துருக்கியர்கள் அணிதல் கூடாது", என்று சிலர் கூறினர். முஸ்தபா இந்தச் சிறு கிளர்ச்சிகளை இராணுவச் சட்டத்தின்கீழ் இயங்கிய அமைப்புகளைக் கொண்டு அடக்கிவிட்டார்.

தேசிய பாராளுமன்றத்தில் நூருத்தீன் பாஷா என்பவர், "தொப்பிதான் அணியவேண்டும் என்று கூறுவது மக்களாட்சி முறைக்கே மாறானது. எதையும் கட்டாயப் படுத்தக்கூடாது என்பதே மக்களாட்சிமுறையின் குறிக்கோள். உடைகள் அவரவர்கள் விருப்பத்திற்கேற்பவே அணியப்படும். அதை விட்டுவிட்டுத் தனிமனிதரின் உரி

மையில் தலையிடுவது நல்லாட்சியின் செயலாக இராது", என்று கூறித் தொப்பியை எதிர்த்துத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார். அவரது நண்பர் ஒருவர் அந்தத் தீர்மானத்தை ஆதரித்தார். ஆனால், அவர்களிரு வரும் உடனே அவையிலிருந்தே விலக்கப்பட்டுவிட்டனர். இராணுவ ஆட்சி அல்லவா?

ஆண்கள் குல்லாய் அணியக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டதுபோலவே பெண்கள்முகமூடி அணியக் கூடாது என்றும் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. "பெணகள முகத்தைத் திறந்தா லும் தலையைத் திறக்கக் கூடாது என்றும், கூந்தல் தெரிய மகளிர் வெளியில் செல்லுதல் கூடாது என்றும், அவ்வாறு செல்வது மரியாதையாகாது" என்றும் கூறப் பட்டது, முஸ்தபா இந்த எதிர்ப்புக்களுக்கெல்லாம் அஞ்சவில்லை. கூந்தல் தெரிய மகளிர் வெயிலில் செல் லுதல் கூடாது என்றால், கூந்தல் மட்டும் மறையும் வண் ணம் ஒரு கைத்துண்டைத் தலையில் கட்டிக் கொள்ள லாம் என்று மாற்றம் கூறினர்; படிப்படியாக இந்த மாற்றத்தையும் அகற்றி விட்டார். பெண்கள் முழு உரிமையோடு வாழும் வாய்ப்புக்கள் உண்டாயின.

முஸ்தபாவை அழிக்க எண்ணம்

அரிப் பே என்பவர் முஸ்தபாவின் நெருங்கிய நண் பராக விளங்கினர் என்பது முன்னர்க் கூறப்பட்டது அன்றோ? ஆனால் சில வேளைகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அரிப் பே முஸ்தபாவை எதிரியாகக் கருதி னர். பாராளு மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, எதிர்க் கட்சியின் உறுப்பினராகி, முஸ்தபாவின் நல்ல செயல் களுக்கெல்லாம் எதிர்ப்புச் சக்தியை திரட்டினர்; இதனால் முஸ்தபாவின் கவனத்தை ஈர்த்தார்.

1927-ஆம் ஆண்டு மே திங்களில் முஸ்தபா ஸ்மிர்னுவுக்குச் சென்ருர். பேரரசின் மூலைமுடுக்கெல்லாம் சென்று தம்முடைய அறிவியக்க-சீர்திருத்த பணிகளை அவர் தொடர்ந்து நடத்தி வந்தார். ஸ்மிர்னு மக்கள் தங்கள் தலைவரைப் பேரன்போடு வரவேற்றனர். ஆங்காங்கே வறவேற்பு மொழிகளும் நல்லுரைகளும் எழுதப்பட்ட அட்டைகள் தொங்கின. முஸ்தபா ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். எவருமே எதிர்பாராத வகையில் முஸ்தபாவின்மீது வெடி குண்டு ஒன்று வீசியெறியப்பட்டது. குற்றம் செய்தவரை ஊர்க்காவலர் பிடித்தனர். குற்றம் செய்தவர் யார்? குற்றம் செய்தவராக ஊர்க்காவலரால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டவரைக் கண்டதும் எல்லோருமே வியப்படைந்தனர். காரணம் அவர்தாம் அரிப் பே-முஸ்தபாவின் நண்பர். அவருக்குத் துணையாயிருந்தவர்களும் பிடிபட்டனர். அனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் என்ற முறையில் முஸ்தபா எந்த விதத் தயக்கமோ கலவரமோ இல்லாமல் அம்மரண தண்டனைத் தீர்ப்பில் கையொப்பமிட்டார்.

அன்ருட வாழ்வில்

அன்ருட வாழ்வில் அமைந்துள்ள சில பழக்க வழக்கங்களையும் முஸ்தபா மாற்ற எண்ணினுர். பெரியவர்கள் சிறுவர்களிடம் நடந்துகொள்ளும் முறை, சிறியவர்கள் பெரியவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும் முறை, ஒருவரை ஒருவர் கண்டால் எப்படி வணக்கம் தெரிவித்துக்கொள்ளவேண்டும், எப்படி வரவேற்க வேண்டும் என்பவற்றில் முஸ்தபா ஐரோப்பிய முறைகளைப் புகுத்தினுர். துருக்கியர்கள் ஒருவருக்கு வணக்கம் தெரிவிக்க வேண்டுமாயின்,

மூன்று முறை குனிந்து வணக்கம் கூறவேண்டும். அதற்குப் பதிலாகத் தாம் அணிந்திருக்கும் தொப்பியைச் சிறிது உயர்த்திக் காட்டவோ அல்லது கை குவிக்கவோ செய்தல் போதும் என்னும் முறை வழக்கில் கொண்டுவரப்பட்டது.

சூரியன் காலையில் தோன்றியது முதல் நாள் கணக்கிடப்பட்ட துருக்கிய முறையை விடுத்து, இரவு பன்னிரண்டு மணிமுதல் நாள் கணக்கிடும் முறையை முஸ்தபா செயற்படுத்தினர். பின்னது ஐரோப்பிய முறையாகும். துருக்கியர் அனைவரும் ஒன்றே என்றும், சாதிப் பெயர்களைக் கூறி அழைக்கக் கூடாதென்றும் சட்டம் இயற்றப்பட்டது. இதனால் துருக்கியர் யாவரும் ஒன்று என்ற உணர்ச்சி ஏற்பட்டது.

தெருக்களில் பிச்சையெடுப்போர் தண்டிக்கப்பட்டனர். நல்ல உடல் வலிவு கொண்டவர்கள் பிச்சையெடுப்பதிலிருந்து தடுக்கப்பட்டு, உழைக்கப் பயன்படுத்தப்பட்டனர். திருமணம் செய்துகொள்பவர்கள் ஒருவரையொருவர் விரும்பிவிட்டாலோ அல்லது அவர்கள் இணைந்து வாழ்வதற்கு அவர்தம் பெற்றோர்கள் ஒப்பம் தெரிவித்து விட்டாலோ போதாதென்றும், மணம் செய்துகொள்பவர்கள், தக்க மருத்துவரைக் கலந்தாலோசித்து உடற் குறைகள் ஏதும் இல்லை என்று உறுதி செய்துகொண்ட பின்னரே மணம் செய்துகொள்ளலாம் என்றும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் நல்லுடலுடனும் மனத்திண்மையுடனும் வாழ்ந்து நாட்டுக்கு நல்ல தொண்டு புரிதல் முடிந்தது.

சமயத் துறையில்

சமயத்தின் பெயரால் பல நிலையங்கள் இருந்தன. அவற்றுக்கு அளவற்ற சொத்துக்கள் இருந்தன. நாட்

டின் பெரும்பாலான செல்வம் இவற்றிடம் முடங்கிக் கிடந்தது. இச் சமய நிலையங்களைச் சேர்ந்தவர்கள், மக களின் அறியாமையை நன்கு பயன் படுத்திக்கொண்டு பொருளைச் சேர்த்து இன்பவாழ்வு வாழ்ந்தனர், இவை துருக்கியின் நல்ல எதிர்காலத்துக்குத் தடையாயிருப்பன என்று முஸ்தபா எண்ணினர்; 1924–ஆம் ஆண்டு மாரச சுத் திங்கள் 3–ஆம் நாள் தேசிய பாராளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றினர்; அச்சட்டப்படி சமய நிலையங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டன. சமயக கருவூலம் அரசாங்கத்தைச் சேர்ந்துவிட்டது. சமயப்பிர சாரங்களால் நடத்தப்பட்ட பள்ளிகள் அனைத்தும் அரசாங்கத்தின நேரடிப் பார்வையில் வந்தன.

நாட்டுப் பற்று

மனிதனுய்ப் பிறந்தவனுக்கு **நாட்டுப் பற்று** இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் தன்னுலான கடமை களை விருப்புடன் நாட்டின் முன்னேற்றத்திற்கெனச செய்ய முடியும். ஒரு நாடு வளம்பெற வேண்டுமாயின், மக்கள் நல்ல மனமுடையவர்களாக இருக்கவேண்டும். மக்களை நல்ல மனமுடையவர்களாகச் செய்வது அவர் கள் தாய் மொழி. இதனை உணர்ந்த முஸ்தபா, துருக்கி யில் துருக்கிய மொழியிலேயே எல்லாப் பாடங்களும் கற்பிக்க வேண்டும் என்னும் சட்டத்தைக் கொண்டுவந் தார். தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர் களையே நாம் நினைக்குமளவில் எதிர்கால வீரர்களாக உருவாக்க முடியும் என்று அவர் எண்ணினர். அங்குச் சமயக் கல்வி கற்பிக்கக் கூடாது என்று தடை விதித் தார். துருக்கியர் அல்லாத பிறர் நடத்தும் பள்ளி களில் இத்துணைத் துருக்கியர்கள் ஆசிரியராக இருக்க வேண்டும் என்றும், துருக்கி மொழி கட்டாய பாட மாகக் கற்பிக்கபபடல் வேண்டும் என்றும் சட்டம் பிறப்

பிக்கப்பட்டது. துருக்கியர், துருக்கியில் செய்யப்படும் கருவிகளேயே வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இதனல் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கட்கு மிகுதியாகத்தீர்வை விதிக்கப்பட்டது. ஓநாய் உருவம் கொண்ட தபால் தலேகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. துருக்கியர் அனைவரும் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்னும் முஸ்தபாவின் விழைவே இந்தச் சட்டங்களுக்கெல்லாம் காரணமாய் அமைந்தது.

அறங்கூறும் துறையில்

ஐரோப்பிய முறையில் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. குர்–ஆனை ஒட்டி நடைபெற்று வந்த அறங்கூறும் முறை மாற்றப்பட்டது. 1926–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து சூன் திங்களுக்குள் பின்வரும் சட்டங்கள், புதிய முறையில் பிற நாடுகளின் சட்ட முறைகளேயொட்டி நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டன.

'சிவில்' சட்டமும் உரிமைச் சட்டமும் சுவிட்சர்லாந்து சட்டத்தை ஒட்டியும், வணிகச் சட்டம் ஜெர்மனி இத்தாலிய சட்டங்களே ஒட்டியும், பினல் கோட்' இத்தாலிய சட்டங்களே ஒட்டியும், 'கிரிமினல் கோட்' ஜெர்மன் சட்டத்தை ஒட்டியும் அமைந்தன.

கான்ஸ்டான்டிநோபிளிலும் அங்கோராவிலும் சட்டக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. அரசாங்கச் செலவில் மாணவர் பலர் பிற நாடுகளுக்குச் சென்று சட்டத் துறை பற்றிய அறிவைப் பெற்றுவர அனுப்பப்பட்டனர். துருக்கிய மகளிரும் சட்டத்துறையில் பங்குகொண்டு பணியாற்றினர்.

கல்வித் துறையில்

துருக்கியர் எல்லோரும் கற்றவர்களாக விளங்க வேண்டும் என்று முஸ்தபா விரும்பினர். எனவே, எளிய முறையில் கற்பித்தற்குரிய வழியினை ஆராயலானுர்; லத்தீன் மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுதுவது எளிதென்று கண்டார். அரேபிய முறையைப் பின்பற்றி வலப்பக்கத்திலிருந்து இடப் பக்கமாக எழுதப் பெறும் துருக்கி மொழியின் ஓசை நயங்களுக்கு ஏற்றபடி, லத்தீன் எழுத்துக்களை அமைத்தார; மக்களுக்கு எடுத்துக் கூறிப் பின்பற்ற வேண்டும் எனக் கூற இருக்கும் இத்துறையில் முதலில் நிறைந்த புலமை பெற விரும்பினுர்; பெற்ருர்.

கான்ஸ்டான்டிநோபிளில் இந்தப் புதிய முறையை முதலில் நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பது தீர்மானிக்கப்பட்டது. முஸ்தபா 1928-ஆம் ஆண்டில் அங்குச் சென்ருர். மக்கள் அவரைப் பேரார்வத்தோடு வரவேற்றனர். மக்களது ஆர்வத்தைக் கண்ட அவர், தம்முடைய எண்ணத்திற்கு ஏற்ற நேரம் அதுவே என்று எண்ணினுர்; அரண்மனையில் மாநாடு கூட்டினுர். மாநாட்டிற்குப் பலதிறப்பட்ட மக்களும் வந்தனர். முஸ்தபா மேடையில் கரும்பலகை ஒன்றை அமைக்கச் செய்து சுண்ணும்புத் துண்டுகளைக் கொண்டு புதிய லத்தீன் எழுத்துக்களை எழுதிக் காட்டினுர். மக்கள் அவரைக் கடவுளாகப் போற்றினர். எழுத்தறிவித்தவன் இறைவன் அல்லவா? லத்தீன் எழுத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் உண்டாகும் பல நன்மைகளையும், எளிமையையும் விளக்கினுர். மக்கள் உள்ளம் புதுமையை விரும்பியது. முஸ்தபாவின் ஆவல் நிறைவேறியது.

கான்ஸ்டான்டிநோபிளில் மட்டும் அல்லாமல் மூலை முடுக்கெல்லாம் கரும்பலகையுடனும் சுண்ணும்புத் துண்டுகளுடனும் சென்று புதிய எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதில் முஸ்தபா ஈடுபட்டார். 1928-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி லத்தீன் எழுத்துக்களிலேயே துருக்கி மொழி எழுதப்படவேண்டும் என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. புதிய எழுத்துக்களை மக்கள் பிழையறக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக எங்கும் பள்ளிகள் திறக்கப்பட்டன. சிறையிலுள்ள கைதிகள் லத்தீன் எழுத்துக்களில் துருக்கி மொழியைக் கற்றுக்கொளாவிட்டால், அவர்களுக்கு விடுதலையே இல்லை என்பது அறிவிக்கப்பட்டது, கல்வியற்ற மக்கள் இருக்கும் இடமெல்லாம் நாடிச் சென்று, அவர்களுக்குக் கட்டாயக்கல்வி கற்பிக்கும் பணியில் ஊர்க்காவலர் புகுத்தப்பட்டனர்.

அறிவுத்துறையில் மட்டும் வளர்ந்துவிடல் போதாது-மூளையை மட்டும் வளர்த்துக்கொள்ளலும் போதாது-உடலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் தீட்டமுடியும்? துருக்கியில் கற்கின்ற இருபாலோரும் உடற்பயிற்சிகள்செய்து பழக அரங்கங்கள் அமைக்கப்பட்டன; விளையாட்டுத் திடல்கள் பல அமைக்கப்பட்டன. அங்குப் பெண்களும் ஆண்களும் பந்தாட்டம் முதலிய ஆட்டங்களில் பழகினர். பெண்களுக்குக் கட்டாயக் கல்வி கற்பிக்கப் பட்டது. பெண்கள் கற்றுத் தேர்ந்தால்தான் சமுதாயம் நல்ல உயர்ந்த நிலையில் இருக்கும் என்று முஸ்தபா எண்ணியதே இந்தச் செயலுக்கு வழிவகுத்தது. பெற்றோரற்ற பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப் பட்டது.

பல வழிகளில் கற்பிக்கும் முயற்சி

பள்ளிகளை நிறுவி அவற்றின் மூலம் கற்பிப்பதோடு நில்லாமல், பல படிப்பகங்களையும் நூலகங்களையும் அமைத்து மக்களுடைய பொது அறிவைப் பெருகச்செய்ய வேண்டும் என்று முஸ்தபா விரும்பினார். அவற்றைப் பொறுப்பேற்று நடத்த அலுவலர் பலர் நியமிக்கப்பட்டனர். துருக்கியில் ஆயிரத்து எழுநூற்று இருபது படிப்பகங்கள் அமைக்கப்பட்டன.

பொருட்காட்சி நிலையங்கள் பல ஆங்காங்கு நிறுவப்பட்டன. அவை காண்போர்க்கு வரலாற்று அறிவையும் வீர உணர்ச்சியையும் நல்கின. செயின்ட் சோபியா மசூதி என்பது கான்ஸ்டான்டிநோபிளில் புகழ்பெற்ற மசூதியாகும். அது ஓவியக்கலை அறிவை நல்கும் பொருட்காட்சி நிலையமாக மாற்றப்பட்டது. ஏறத்தாழப் பதினைந்து நகரங்களில் மக்களுக்கு நுண்கலைகளைப்பற்றி அறிவிக்கும் பொருட்காட்சிகள் அமைக்கப்பட்டன.

பிறர்க்குத் தொண்டுபுரியும் எண்ணத்தை இளைஞர்களுக்கு இளமையிலிருந்தே உண்டாக்கும் பொருட்டுச் சாரணர் இயக்கங்கள் காணப்பட்டன. நாளடைவில் அவ்வியக்கங்கள் துருக்கிப் பேரரசின் பாதுகாப்புக்காகத் துணைபுரிந்தன.

இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பர் அறிஞர். இலக்கியமே ஒரு நாட்டின் வரலாற்றை உருவாக்கவல்ல ஆற்றல் பெற்றது. எனவே, முஸ்தபா துருக்கி வரலாற்றினை எழுதச் சில இலக்கிய ஆசிரியர்களின் துணையை நாடினார். பழைய காலத்தில் வழக்கிலிருந்த சொற்களை ஆராயக் கழகங்கள் நிறுவப்பட்டன.

அராபியச் சொற்களுக்குப் பதில் அச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சட்டம் செய்யப்பட்டது. சமயச்சடங்குகளின் போதும், இறைவழிபாட்டின் போதும் துருக்கி மொழியையே பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டது. குர்-ஆன் துருக்கி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. விஞ்ஞானம் முதலிய அறிவியல் கலைச் சொற்களுக்கு எல்லா நாடுகளிலும் வழங்கும் பொதுவான சொற்களையே துருக்கி மொழியிலும் பயன்படுத்துமாறு செய்யப்பட்டது.

சிறந்த எழுத்தாளர்களுக்குப் பரிசு தருதல் என்னும் திட்டம் புதிதாகக் காணப்பட்டது. இதனால் எழுத்தாளர்கள் ஊக்கம்கொண்டு சிறந்த இலக்கியங்களைப் படைக்க முற்பட்டனர். அரசாங்கமும் குடியரசின் குறிக்கோளும், பழைமையும் புதுமையும் என்பன போன்ற நூல்களை வெளியிட்டுக் குடியரசின் குறிக்கோளையும், பழைமையைக் காலப்போக்கில் அகற்றிக் காலநிலைக்கேற்பப் புதுமையை மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமையையும் மக்களிடையே பரப்பியது. பிறநாட்டு நல்லறிஞர் நூல்கள் துருக்கி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. 1934-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 26-ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட சட்டமொன்று துருக்கிப் பெயர்களையே பயன்படுத்தவேண்டும் என்று மக்களை வற்புறுத்தியது. இந்தச் சட்டத்தால் ஆகா, பாஷா, பே முதலிய பெயர்கள் மறைந்தன. பெண்கள் ஹனூம் என்று அழைக்கப்படுவது நிறுத்தப்பட்டது. ஆண்மகன் 'பாய்' என்றும் பெண் 'பாயான்' என்றும் அழைக்கப்பட்டனர். இச்சட்டத்தால் மேலும் அமைந்த சில விளைவுகளைக் காண்போம்:

அங்கோரா என்னும் ஊர்ப் பெயர் அங்காரா என்றும், கான்ஸ்டான்டிநோபிள் இஸ்தாம்புல் என்றும், ஸ்மிர்னா

இஸ்மிர் என்றும், காலிபோலி **கெலிபோலு** என்றும், அட்ரியாநோபிள் **எதிர்னே** என்றும் மாற்றம் பெற்றன. இவ்வளவும் புதிய சட்டத்தின் விளைவுகள். இதன்படி முஸ்தபா தம்முடைய பெயரையும் மாற்றிக்கொள்ள எண்ணினர். **முஸ்தபா கெமால்** என்னும் இரண்டு சொற்கள் அராபியச் சொற்கள். கெமால் என்பதற்குக் **கமால்** என்னும் துருக்கிச் சொல் கிடைத்தது. எனவே, முஸ்தபா தம் பெயரைக் கமால் என்றே அமைத்துக் கொண்டார். 'காஜா' என்ற அரேபியப் பட்டத்தையும் அவர் பயன்படுத்தவில்லை.

சிற்பம், இசை ஆகிய நுண்கலைகளுக்கு முஸ்தபா சிறப்பிடம் தந்தார்; ஆங்காங்குச் சிற்பக் கூடங்களும், இசைக் கழகங்களும் நிறுவத் துணை செய்தார். அங்கோராவிலும் கான்ஸ்டான்டிநோபிளிலும் உருவச்சிலைகளும் வெற்றிச் சின்னங்களும் அமைக்கப்பட்டன. பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு இசையறிவு உள்ளதா என்பதைக் கண்டு, அவர்தம் ஆற்றலைப் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில இடங்களில் அரசாங்க நாடக மண்டபங்கள் நிறுவப்பட்டன. அங்குத் துருக்கியின் கடந்த கால வாழ்வைக் காட்டக்கூடிய நாடகங்கள் நடத்தப்பட்டன.

செய்தித்தாள்கள் ஒரு நாட்டின் நிலையை விளக்கும் அரிய சாதனமாகும். செய்தித்தாள்களால் ஒருநாட்டின் நிலைமை, மக்கள் வாழ்க்கை, அவர்களிடையே அமைந்த ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார நிலை முதலியவற்றை அறியலாம். துருக்கியில் செய்தித் தாள்களுக்கு முழு உரிமை அளிக்கப்பட்டது. மக்கள் செய்தித்தாளைப் படிப்பதில் பேரார்வம் காட்டினர். துருக்கியில் முஸ்தபாவின் முயற்சியால், நூற்றுக் கணக்கான செய்தித்தாள்கள் மக்கள் அறிவை வளர்க்கத் துணைபுரிந்தன.

பொருளாதாரத் துறையில்

அயலார் தொழில் துறையில் புகுதல் கூடாது என்பதில் முஸ்தபா பிடிவாதமாக இருந்தார். **'துருக்கி துருக்கியர்க்கே'** என்ற உணர்வை அவர் தொழில்துறையில் கட்டுப்பாடாகப் புகுத்தினர். 'நிலையான பொருளாதாரக் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு புதிய கைத்தொழில்களைத் தோற்றுவிக்கவும், பழைய கைத்தொழில்களைப் புதிய முறையில் சீர்திருத்தி அமைக்கவும், வணிக வளர்ச்சிக்கான வழிவகைகளை அமைக்கவும் துணை புரிந்தது.

11. துருக்கியர் தந்தை

இயற்கைச் சுவைஞர்

இயற்கையோடு ஒன்றிவாழ வேண்டும் என்பது முஸ்தபாவின் ஆவல். ஆனால், இயற்கையோடு ஒன்றி வாழும் முறையில் அவர் வாழ்க்கை அமையவில்லை. அது போரும் பிணக்கும் சிந்தனையும் சூழ்ச்சியுமாக அமைந்தது. அவ்வாழ்க்கை அவருடைய பல விருப்பங்களை நிறை வேறவொட்டாது தடுத்தது. துருக்கி மக்களாட்சி பெற்ற பின்னரே அவர் நெடுங்காலமாகக் கொண்டிருந்த விருப் பங்கள் பலவற்றை நிறைவேற்றிக்கொள்வதில் ஈடுபட்டார்.

இயற்கையோடியைந்து வாழாத வாழ்வு பயனற்ற வாழ்வு என்று தமிழகத்து இயற்கைக் கவிஞர் கபிலர், மேலைநாட்டு இயற்கைக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த் முதலி யோர் கூறியுள்ளனர். "உலகம் நம்மோடு மிகுதியாக இணைந்துள்ளது" என்னும் கவிதையில் வேர்ட்ஸ் வொர்த், "உலகச் செய்திகள் நம்மை மிகுதியாகக் கவர் கின்றன; சோலைகளில் அணில்கள் எப்படிக் கொட்டை களையும் பழங்களையும் சுவைத்து உண்ணுகின்றன என் பதைக் கண்டு சுவைக்க முடியாமல் போகின்றது; நைட் டிங்கேல் என்னும் பறவையின் இனிய ஓசையைக் கேட்டு மகிழமுடியாமல் நம்மை நாம் மறந்து அந்த மெல்லிய இனிய இசையில் ஈடுபடமுடியாமல் போகின்றது". என்று கூறியுள்ளார். முஸ்தபா தம்முடைய இறுதி

ஆண்டுகளில் வாழ்ந்த வாழ்வையும் அவருடைய நற்பண்புகளையும் இனிக் காண்போம்:

அங்கோராவை அடுத்துச் சிறிது தொலைவில் சாங்காயா என்னும் இடம் உள்ளது. சாங்காயாவில் சிறு குன்று ஒன்று உள்ளது. அக்குன்றின்மீது கோபுரம் போலக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அக்கட்டடமே துருக்கிக் குடியரசுத் தலைவர் கமாலின் வாழ்விடம். அக்கட்டடத்தைச் சுற்றிச் சிறுசிறு கட்டடங்கள் கட்டப்பட்டன. முஸ்தபாவின் நெருங்கிய நண்பர்கள் அங்கு வாழ ஏற்பாடு செய்யப்பட்டது. முஸ்தபாவின் மனையைச் சுற்றி அழகான மலர்ச்சோலை ஒன்று இருந்தது. அதில் எண்ணற்ற நறுமலர்கள் மணம் வீசிக் கண்ணைப் பறித்தன.

எளிய வாழ்வு

முஸ்தபா எளிய வாழ்க்கை வாழ்ந்தார். அவருடைய மனையில் பத்து அறைகளே இருந்தன. தேவைக்கு மிகுதியான பொருள்கள் அங்கில்லை. அழகான ஓவியங்கள் நிறைந்த விரிப்புக்கள் தரையில் விரிக்கப்பட்டிருந்தன. நாளும் மலர்ந்த மலர்களைக் கொண்டுவந்து 'பார்வையாளர் அறை'யில் ஏவலர் வைத்துவிட்டுச் செல்வர். சுவரில் படங்கள் மாட்டப்படவில்லை. அவர் தமக்குரிய இன்றியமையாத தேவைகளாகப் பின்வரும் மூன்றைக் கருதினர். அவை காற்று, இசை, சிறந்த நூல்கள்.

திறந்தவெளியில் அமர்ந்துகொண்டு நேரம் போவதே தெரியாமல் நல்ல நூல்களைப் படிப்பது முஸ்தபாவின் பொழுதுபோக்காகும். அந்த வேளையில் அவருடைய நினைவைப் பிறதுறைகளில் ஈர்க்க மற்றவர்கள் அஞ்சுவர். உணவு உண்ணும்போது இசையை அநுபவிக்கும் வேட்கை அவருக்கு உண்டு. ஐரோப்பிய இசையிலும், துருக்கி இசையிலும் அவருக்கு அறிவு இருந்தது. எப்

பொழுதும் தூய்மையான ஆடைகளை அணிந்து கொண்டு காட்சியளிக்கும் முஸ்தபா, பிறரும் தூய்மையான ஆடைகளை அணிந்துகொண்டு காட்சியளிக்க வேண்டும் என்று விரும்பினர்.

குதிரைகளுக்கு நல்ல உணவு கொடுத்து அவற்றைப் பாதுகாப்பதில் முஸ்தபாவுக்கு தனி ஆர்வம் இருந்தது. நன்ருக வளர்ந்து வேகமாகச் செல்லக்கூடும் குதிரைகளில் ஏறிக்கொண்டு நெடுந்தொலைவு சென்று மீள்வது அவருடைய பொழுதுபோக்குகளில் ஒன்ருகும்.

துணிவுள்ள வீரர்

முஸ்தபா அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; போர்க் களத்தில் எவ்வளவு நெருக்கடியான நிலைகள் நேர்ந்த போதிலும் அஞ்சா நெஞ்சோடு அவற்றை ஏற்பார். இதனை விளக்கச் சிறு நிகழ்ச்சி ஒன்றைக் காட்டுவோம்:

காலிபோலி போர்க்களத்தில் படைகளின் தற்காப்புக்கென்று பள்ளங்கள் தோண்டப்பட்டிருந்தன. ஒரு பள்ளத்தின்மேல் முஸ்தபா உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்போது எதிரிகளின் பக்கத்திலிருந்து குண்டுகள் பறந்துவந்தன. முஸ்தபா உட்கார்த்திருந்த பள்ளத்தைச் சுற்றிலும் குண்டுகள் விழுந்தன. 'நீங்கள் இவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிடுங்கள். நீங்கள் இங்குப் பிடிவாதமாக இருப்பீர்களாயின், குண்டுகள் உங்கள்மீது விழுந்துவிடும். எனவே, நீங்கள் அப்பால் சென்றுவிடுங்கள்,' என்று முஸ்தபாவின் பணியாட்கள் வேண்டினர். என்ன ஆபத்துநேர்ந்தாலும் தாம் கவலைப்படப் போவதில்லை என்று தெளிவாகக் கூறிவிட்டு அவர் அங்கேயே உட்கார்ந்திருந்தார்.

சிறந்த பேச்சாளர்

முஸ்தபா மக்கள் மனத்தை ஈர்க்கவல்ல சிறந்த சொற்பொழிவாளர். சோர்ந்துகிடக்கும் உள்ளங்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சிகொள்ளச் செய்யும் பேராற்றல் அவருடைய சொற்பொழிவுகளுக்கு இருந்தது. பாராளுமன்றத்தில் அவர் பேசத்தொடங்கிவிட்டால் அவருடைய கொடிய விரோதிகளும் அவருடைய சொற்பொழிவை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். போர்க்களங்களில் முஸ்தபாவின் ஊக்க உரையைக் கேட்க எண்ணற்ற வீரர்கள் ஏங்கிக் கிடப்பார்கள். அவர் யாரையேனும் சினந்தால், சினத்திற்கு உட்பட்டவர் அமைதியாக அவர் கூறுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பார்; நயமாக அவர் கூறுவதைச் கேட்பதில் மகிழ்ச்சி கொள்வார். 1927-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் அங்கோரா தேசிய பாராளுமன்றத்தில் முஸ்தபா சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். அச்சொற்பொழிவினை அவர் நாற்பத்தெட்டு மணிநேரங்கள் செலவழித்துத் தயார் செய்தார்; 36 மணி 33 நிமிடத்தில் அச் சொற்பொழிவை ஆறுநாட்களில் பேசிமுடித்தார்.

உழவர்

துருக்கி ஒரு பயிர்த்தொழில் நாடு என்பதையும் அங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் உழவரே என்பதையும் முஸ்தபா நன்கு அறிவார். அவருக்குப் பயிர்த்தொழிலில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அங்கோராவுக்கருகில் அவருக்குரிய சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தின் ஒரு பகுதியில் விவசாயப் பண்ணையை ஏற்படுத்தி, நவீன முறையில் விவசாயம் செய்யும் முறைகளைக் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தினர் பேரரசின் விவசாயப் பண்ணைக்கு முஸ்தபாவின் பண்படுத்தப்பட்ட நிலம் எடுத்துக் காட்டாய் இருந்தது.

திருமண விலக்கு

முஸ்தபாவின் மனைவி லதீபா அவருடைய திட்டங்களில் பெரிதும் ஒத்துழைத்தாள். துருக்கியில் பெண்கள் ஆண்களோடு சரிசமமாக வாழவேண்டும் என்னும் முஸ்தபாவின் எண்ணத்தை லதீபாவே செயல்படுத்தினாள் என்றும் சொல்லலாம். ஆனால், முஸ்தபாவும் லதீபாவும் உள்ளம் ஒன்றுபட்ட கணவன்-மனைவியாய் வாழமுடியவில்லை. இருவரும் முரண்பட்ட பண்புடையவர்கள். இருவரும் எதற்கும் கட்டுப்படாத நிலையில் வாழவேண்டும் என்னும் எண்ணமுடையவர்கள். இத்தகைய நிலையில் அவர்கள் எவ்வளவு காலம் இணைந்து வாழ முடியும் ?

இல்லறம் என்பது, கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் பலவாக இருப்பினும், ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டுவதாகும். வாழ்க்கை ஒரு கலை என்றால், விட்டுக்கொடுத்தல் என்னும் பண்பு அதன் நுழைவாயிலாகும் என்னலாம். கணவன் – மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுமாயின், அவர்களுடைய குழந்தைகள் அவற்றைத் தீர்த்துவைக்கும் வாயில்களாக விளங்கும். முஸ்தபாவுக்கு மக்கட்பேறுமில்லை. எனவே, முஸ்தபாவும் லதீபாவும் மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை. அதன் முடிவுதான் திருமணவிலக்கு. இருவரும் பிரிந்தனர். பின்னர் இருவர் வாழ்விலும் மாறுதல் ஏற்படவில்லை. முஸ்தபாவின் உள்ளத்தில் லதீபாவின் இடத்தைக் கவர்ந்தவளாக எவளும் அமையவில்லை. முஸ்தபா, லதீபாவுக்கு வாழ்க்கைப் பணமாகப் பெருந்தொகையைக் கொடுத்தார்.

பொது நோக்கு

முஸ்தபா பிறருடைய கருத்துக்களுக்குச் செவிசாய்த்துக்கேட்கும் இயல்புடையவர். எதிர்க்கட்சி ஒன்று நல்ல

அரசாங்கத்துக்குத் தேவை என்பது அவருடைய எண்ணம். நாட்டு நலனில் கருத்துடைய, நல்ல கருத்துக்களைக் கூறக்கூடியவர்கள் எதிர்க்கட்சியில் இடம்பெற வேண்டும் என்பது அவரது விழைவு. ஏதேனும் புதிய செயலொன்றைச் செய்யவேண்டுமாயின், மக்கள் மனமறிந்து, காலம் அறிந்து, அவர்களுடைய நம்பிக்கைகளுக்கு இடையூறு வராத வகையில் செய்வார். அதனுல் தான் மக்கள் அவருடைய ஒவ்வொரு செயலையும் விருப்புடன் வரவேற்றனர். ஆண்களைப்போலவே பெண்களும் அவர்களுக்குத் தகுதியான துறைகளில் சிறந்து விளங்க வேண்டும் என்று முஸ்தபா விரும்பினுர். 1935-ஆம் ஆண்டு நடைபெற்ற துருக்கிப் பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாகப் பதினேழு பெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முஸ்தபா அவர்களை வரவேற்றுப் பாராட்டிப் பேசி ஊக்குவித்தார்.

துருக்கியர் தந்தை

1923-ஆம் ஆண்டு துருக்கிக் குடியரசு ஏற்பட்டதல்லவா? அப்போது மக்கள் முஸ்தபாவையே குடியரசுத் தலைவராக்கினர் என்பதை நாம் அறிவோம். அதன்பின்னர் 1927, 1931, 1935 ஆகிய மூன்ருண்டுகளில் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. மக்கள் அம்மூன்ருண்டுகளிலும் முஸ்தபாவையே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்து விழாக் கொண்டாடினர். 1934-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 24-ஆம் தேதி துருக்கிப் பாராளுமன்றத்தின் சிறப்புக்கூட்டமொன்று நடைபெற்றது. முஸ்தபாவை **'அத்தா துர்க்'** என்று அழைக்க வேண்டுமென்னும் தீர்மானம் அன்று ஒரேமனதாக நிறைவேறியது. 'அத்தா துர்க்' என்பதற்குத் **துருக்கியர் தந்தை** என்பது பொருள்.

முஸ்தபாவின் மறைவு

1938–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 29-ஆம் நாளன்று துருக்கியின் குடியரசு நாள் கொண்டாடப் பட்டது. குடியரசின் பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழா அன்று நடைபெற்றது. மக்கள் அந்த நாளை முன்போல அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடவில்லை. முஸ்தபா நோய்வாய்ப்பட்டிருந்ததே அதற்குக் காரண மாகும். படுத்த படுக்கையிலிருந்த முஸ்தபா, அமைச் சர்களை வரவழைத்துத் தம் நிலையை விளக்கிக் கூறி ஞர்; வேறு ஒருவரை குடியரசுத் தலைவராய்க் கொண்டு தொடர்ந்து செயல்களை நடத்துமாறு வேண்டினர். ஆனல், முஸ்தபாவின் வேண்டுகோளை எல்லோரும் புறக்கணித்துவிட்டனர்.

நாட்டுப் பற்று
மக்களிடம் அன்பு
இடைவிடாத உழைப்பு
தன்னம்பிக்கை

இவற்றையே வாழ்க்கையாகக் கொண்ட முஸ்தபா 1938–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பத்தாம் நாளன்று குடியரசு நாடான துருக்கியிலிருந்து-அன்பால் அவரை வழிபட்டுக்கொண்டிருந்த மக்களிடமிருந்து-விடைபெற் றுக்கொண்டார்; விண்ணவர்க்கு விருந்தாஞர். துருக்கி ஆருத் துயரில் ஆழ்ந்தது.

12. பொன் மொழிகள்

1. அன்பு, அருள், அறம், உரிமை, பொது நோக்கு என்னும் இவை யாவும் இறைவனை எண்ணிப் போற்றுதற்குரிய உயர்ந்த பண்புகளாகும். இப் பண்புகள் அழிவுறுதிருக்க நாம் நம் கடமைகளைச் செய்ய வேண்டும்.

2. வாழ்க்கை என்பது போராட்டம். வாழ்க்கையில் வெற்றி கொள்வது என்பது களத்தில் வெற்றி கொள்வது போலக் கடுமையான செயலாகும். சமுதாயத் தொடர்பான எல்லாப் பிரச்னைகளும், அவற்றை விடுவிக்க முயல்வதில் ஏற்படும் எண்ணற்ற ஆபத்துக்களும், நாளடைவில் ஏற்படுகின்ற நன்மைகளும் போராட்டத்தின் விளைவுகளாகும்.

3, தனிப்பட்ட மனிதர்களைப் போலவே சமூகங்களும் உள்ளன. இவை தம்முடைய ஆற்றலுக்கும் தகுதிக்கும் சான்று காட்டினாலொழியப் பிற நாடுகளால் மதிக்கப்படுவதில்லை.

4. நல்லவனுக வாழ்வது எளிது. வல்லவனுக வாழ்வது அரிது. நல்லவனுகவும் வல்லவனுகவும் வாழ்வதே சிறந்தது.

5. பெருந்தகைமை கொண்டவர்களையும், உழைக்கும் ஆற்றல் கொண்டவர்களையும் பெற்றுள்ள சமுதாயம் அடிமையாக வாழ விரும்பாது; அடிமையாக வாழ்வதை விட அழிந்துபோவதே மேல் என்று எண்ணும்.

6. துருக்கியின் உரிமைக்குக் களங்கம் விளைவிப்பவரை-அவர்கள் யாராக இருந்தாலும், துருக்கிச் சமுதாயம் வாழவிடாது.

7. காலத்தை உயிராகக் கருதிப் போற்றுபவனே அறிவுடையவன், காலத்தை வீணுக்குபவன் கவலையால் துயருறுவான்.

8. இன்ன வேளையில்தான் இதைச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு கூடாது. அதனுல் பல தீமைகள் விளைகின்றன. நல்லவற்றைச் சிந்திப்பதற்கும் செய்வதற்கும் காலமும் வேளையுமா வரவேண்டும்?

9. நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்று ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பதால் பயனில்லை. அவை மக்கள் உள்ளங்களில் பதியும் வண்ணம் எடுத்துக் கூற வேண்டும்.

10. மக்கள் இப்படி இப்படி வாழவேண்டும் என்று கூறுவது எளிது. ஆனுல், அதனுல் ஏற்படும் விளைவும் குறைவாகத்தான் இருக்கும். மக்கள் இப்படி இப்படி வாழவேண்டும் என்று எண்ணுவதைப் போல வாழ்ந்து காட்டுவது அரிது. அதனுல் ஏற்படும் விளைவு வியக்கத்தக்கதாயிருக்கும்.

11. மக்கள் தம்முள் ஒற்றுமையில்லாதிருப்பது உலகிலேயே அருவறுக்கத்தக்க செய்தியாகும்.

✓ 12. மனிதன் முதலில் தன்னை நம்பவேண்டும். **தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கையில் வெற்றி காண முடியாது.**

13. நாகரிகம் என்பது நெருப்புப் போன்றது; எதிர்ப்பட்டவரையெல்லாம் எரித்து விடுவது. உலகமே

முன்னேறிச் செல்லுங்காலத்தில் நாம் மட்டும் பழைய முறையிலே வாழ்ந்து வந்ததால்தான் உலக நாடுகளிடையே குறைவாக மதிப்பிடப்பட்டோம். **உலகத்தோடு ஒட்ட ஒழுகல்தான் அறிவுடைமை.**

14. பெண்களுக்குச் சமுதாயம் பல கொடுமைகளைச் செய்துள்ளது. எதற்காக அவர்கள் ஆண்களைக் கண்டால் முகத்தையும் கண்களையும் மூடிக்கொண்டு மறைவிடம் நோக்கி ஓடவேண்டும்? நமக்கிருக்கும் அறிவு அன்பு முதலிய பண்புகள் அவர்களுக்கு இல்லையா? அவர்கள் முகத்தைத் திறந்து கண்களைத் திறந்து உலகை நன்ருகக் காணட்டுமே! நம்மை உலகைக் காணுமாறு செய்த தாய்க்குலத் தோன்றல்கள் அவர்கள் என்பதை நாமே மறந்துவிடக் கூடாது.

15. நாட்டின் எதிர்கால உயர்வுக்கு ஆசிரியர்களே காரணராவர். அவர்களிடம் நாட்டின் முழுப் பொறுப்பும் உள்ள தெனலாம். அவர்கள் தங்கள் மாணவர்களை நல்ல உயர்ந்த மனத்தோடு வாழும் நிலையில் பழக்க வேண்டும். அப்போதுதான் தாயகம் நல்ல வீரர்களைப் பெற முடியும்.

16. நாமும் திறமை படைத்தவர்கள்தாம் என்பதை நம்முடைய எதிரி உணர வேண்டும். அந்த அளவுக்கு நாம் உயரும் வரையில் பேசாமல் அமைதியாகச் செயலாற்றவேண்டும்.

17. ஒருவனுக்கிருக்கும் விருப்பு வெறுப்புக்கள், அவனுடைய ஆடைகள், அவனுடைய ஒழுகலாறுகள், அவன் வழங்கும் முகமனுரைகள், அவனுடைய நண்பர்கள், அவன் படிக்கும் நூல்கள் முதலியவற்றைக் கொண்டு அவன் எப்படிப்பட்டவன் என்பதைக் கூறிவிடலாம்.

18. உண்மையும் உரிமையும் கொண்ட மனிதனுக வாழ ஒவ்வொருவனும் விரும்ப வேண்டும்.

19. மனிதன் இயற்கையைச் சுவைக்கப் பழகவேண்டும். அவன் இயற்கையின் விருந்தினனுக இருக்க வேண்டும்.

20 நடனம் உடலுக்கு இன்றியமையாத கலே; அது போல ஓவியம் கண்ணுக்கு இன்றியமையாத கலே யாகும்.

21. வெற்றியின் முதல் அடிப்படை தன்னம்பிக்கையாகும். அதன் மற்ருேர் பண்பு உண்மையாகும்.

22. ஒவ்வோர் அறிவற்றவனிடத்திலும் சென்று, 'நீ செய்த செயல் செயற்கரியது' என்று புகழ்ந்து காலங் கழிக்கும் பரிதாப நிலேயில் இளேஞர் இருத்தலாகாது.

23. பாமர மக்களின் ஆரவரத்தை நம்பி ஏமாறுதல் கூடாது. அந்த ஆரவரம் எவரையும் நெடுந் தொலேவுக்கு அழைத்துச் செல்லாது.

24. ஒருவர் தாம் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் பிறரது ஒப்புதலே நாடி அலேவது கூடாது. அவ்வாறு அலேவது சிறிது காலம்வரை பயனளிப்பது போன்று தோன்றும். பின்பு அவன் புகழுக்கே அது களங்கமாகி விடும்.

25. ஒரு செயலேச் செய்யத் தொடங்குவதற்கு முன்பே ஒருவன் தன்னேப் பெரிய மனிதன் என்று நினேத்துக்கொள்ளக்கூடாது; எனவே, அறிவுடையவன் என்றும், ஓரளவே திறமையுடையவன் என்றும் எண்ண வேண்டும். அறிவும், திறமையும் எல்லேயற்ற கடல் போன்றவை. ஆனல் அவன் பிறரிடமிருந்து எந்தவித உதவியையும் நாடாதவனுக இருக்கவேண்டும்.

26. தான் கொண்ட குறிக்கோளை உண்மையுடனும் நேர்மையுடனும் நடத்திச் செல்வதில்தான் சிறப்புள்ளது. பலர் குறுக்கிட்டுத் தங்கள் கருத்துக்களை எல்லாம் கூறித் தடுக்கக்கூடும். அந்தப் பலரும் கூறும் கருத்துக்களை எல்லாம் கேட்டுக் கொள்வதில் பிழை இல்லை. நாம் இறுதியில் நம் மனச்சான்று கூறுவதுபோலவே நடக்க வேண்டும்.

27. **திருமணம்** என்பது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நடக்கும் நல்ல நிகழ்ச்சி. அதில் தொடர்பு கொள்பவர் நெடுங்காலம் இன்பமாக வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் கொள்ளவேண்டும். அதனால் மணம் செய்து கொள்பவர்கள் மணவினைக்கு முன்னர்த் தக்க ஒரு மருத்துவரை நாடி உடலைப் பரிசோதித்துக்கொள்வது நல்லது. அப்போதுதான் அவர்கள் நாட்டுக்குத் தொண்டு புரிய முடியும். நாட்டுக்குத் தொண்டு புரிய ஆணையும் பெண்ணையும் இணைக்கும் நிகழ்ச்சியையே **திருமணம்** என்னலாம்.

28. நான் உரிமையை வழிபடுபவன்; கட்டுப்பாட்டையும், பிறரைச் சார்ந்திருத்தலையும் அடியோடு வெறுப்பவன்.

29. அடிமைத்தனத்தில் திளைத்தவர்கள் உரிமைப் போராட்டம் செய்பவர்களைக் கண்டு நகைப்பார்கள்.

30. அமைதி நிறைந்த அடிமைவாழ்வைவிட ஆபத்துக்கள் மலிந்த உரிமை வாழ்வே மேலானது.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

வள்ளுவர் பண்ணை

சென்னை-1

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras 1